
# சுதேசியத்தின் வெற்றி

பாரதியின் "இந்தியா" பத்திரிகையிலிருந்து திரட்டப் பெற்றவை



சீனி. விசுவநாதன்

# சுதேசியத்தின் வெற்றி

தொகுப்பாசிரியர் :
சீனி விசுவநாதன்

பாலாஜீ புத்தக நிலையம்
49. "E" பிளாக்
அண்ணா நகர்
சென்னை 600102

முதற் பதிப்பு: டிசம்பர் 1985

(c) தொகுப்பாசிரியருக்கே

44511

அச்சிட்டோர் :

நரேந்திரா பிரிண்டர்ஸ்
6, இராமநாதன் தெரு.
தி. நகர், சென்னை 600 017.

தமிழ்நாடு சுதந்திரப் போராட்ட
வீரர்கள் சங்கத் தலைவர்
தியாகச் செம்மல்

## திரு. பி.எஸ்.கே. லக்ஷ்மிபதி ராஜூ அவர்கள்

### வழங்கிய வாழ்த்துரை

பாரத நாட்டில் கிளர்ந்தெழுந்து, வெற்றி வாகை சூடிய சுதேசிய இயக்கச் செய்திகளைத் தெரிவிக்கும் இந்நூலுக்கு வாழ்த்துரை வேண்டும் என்று பாலாஜி புத்தக நிலையத்தார் என்னைக் கேட்டனர்.

நட்புரிமை காரணம் பற்றி விரும்பிக் கேட்டதாலும், சுதந்திரப் போராட்டத்தில் பங்கு கொள்ளும் பேறு பெற்றவன் என்பதாலும் இந்த நூலுக்கு வாழ்த்துரை வழங்குவதில் பெருமையும் பெருமகிழ்வும் கொள்கிறேன்.

சுதேசியத்தின் வெற்றி என்னும் பெயர் கொண்ட இந்த நூல் மகாகவி பாரதியாரின் ''இந்தியா'' பத்திரிகையிலிருந்து தொகுக்கப்பெற்ற செய்திகளை ஆதாரமாகக் கொண்டுள்ளதால், நூலின்

சிறப்பை நான் விரித்துரைக்க வேண்டிய அவசியமில்லை.

முழுக்க முழுக்க ஆதார பூர்வமான செய்திகளையே கொண்டிலங்கும் பெருமையும் சிறப்பும் இந் நூலுக்கு உண்டு என்பது சொல்லாமலே விளங்கும்.

1905ஆம் ஆண்டில் நிகழ்ந்த வங்கப் பிரிவினையை யொட்டி, நம் தேச மக்களுக்குச் சுதேசிய உணர்ச்சியானது புலப்பட்டது. சுரேந்திர நாத் பானர்ஜி, பால கங்காதர திலகர், தாதாபாய் நௌரோஜி, கோபால கிருஷ்ண கோகலே, விபின சந்திரபாலர், ஜி. சுப்பிரமணிய ஐயர், சிவா, சிதம்பரனார், பாரதியார்- ஆகிய இன்ன பிற தேசபக்த சிரோன்மணிகள் சுதேசிய முயற்சியில் பெரிதும் ஊக்கம் காட்டினர்.

"விதேசிய மடமை நீங்கினாலொழிய சுதேசிய அறிவு தலை யெடுக்காது" என்பதைப் பாமர மக்களுக்குத் தலைவர்கள் இடைவிடாது எடுத்துரைத்தனர்.

சுதேசியம் நாட்டில் பரவப் பரவ இந்திய மக்களுக்குள்ளும் ஐக்கிய உணர்ச்சி உண்டாயிற்று.

மக்கள் நெஞ்சுரத்துடன் சற்றேனும் மனம் சலியாமல், சுதேசியக் கொடியைப் பிடித்து வீறு நடை போட்ட வரலாற்றுச் செய்திகளை இந்த நூல் நம் மனக் கண் முன் வந்து நிறுத்துகின்றது.

இந்த நூலைப் படித்த நான் மெய்சிலிர்த்துப் போனேன். இந்திய வரலாற்று நூல்களில் இடம் பெறாமல் விட்டுப்போன நிகழ்ச்சிக் குறிப்புகளைப் பாரதியின் 'இந்தியா' பத்திரிகை வெளியிட்டது நாம் செய்த பாக்கியம் என்றே பூரிக்கின்றேன்.

தூத்துக்குடி சுதேசியச் செய்திகளை-குறிப்பாக வ.உ.சி. அவர்கள் மிக்கபிரயாசையுடன் மேற்கொண்ட கப்பல் கம்பெனி விஷயமாகவும், கப்பல் கம்பெனி முயற்சி வெற்றிபெறப் பாரதி எவ்வகையில் எல்லாம் பக்க துணையாக நின்றுள்ளார் என்னும் விஷயமாகவும் முதல் முதலாகப் பல அரிய செய்திகளை-இந்நூல் வழியாக அறிய முடிகின்றது.

இந்த நூலின் தொகுப்பாசிரியர் திரு சீனி. விசுவநாதன் அவர்கள் ஏற்கெனவே பல நல்ல நூல்களைத் தொகுத்தளித்த சிறப்புக்குரியவர். குறிப்பாக, அவைஎல்லாம் பாரதி நூல்களே. அதே வழியில், சற்றும் வழுவாமல், பாரதியின் 'இந்தியா' இதழ்களினின்றும் சுதேசியச் செய்திகளைத் திரட்டி, தொகுத்துத் தந்திருப்பது பாராட்டத் தக்கது.

சுதேசிய முயற்சியின் ஆக்க பூர்வமான செயல்களை எடுத்துப் பேசும் இந் நூலை வெளியிடும் பாலாஜி புத்தக நிலையத்தாருக்கு என் வாழ்த்துக்கள்

இதுபோன்ற தேசிய நூல்கள் இக்காலத் தலைமுறைக்கு அவசியம் தேவை. காலத்தின்

தேவையை உணர்ந்து செயல்பட்ட பாலாஜி புத்தக நிலையத்தாரை எவ்வளவுபாராட்டினாலும் தகும்.

இந்த நூல் இந்திய மொழிகள் அனைத்திலும் மொழிபெயர்க்கப்பட வேண்டும்; ஆங்கிலத்திலும் வெளிவர வேண்டும். இது என் ஆசை.

தியாக வரலாற்றைப் பலமொழி பேசும் மக்களும் அறிய வாய்ப்பாக மொழிபெயர்ப்பு முயற்சி பலன் தரும்.

தமிழக மக்களின் சார்பில் மீண்டும் என் நன்றியை அனைவருக்கும் தெரிவித்துக் கொள்வதுடன், மக்கள் நூலை வாங்கி ஆதரிக்கும்படியும் கேட்டுக் கொள்கிறேன். ஜெய் ஹிந்த். வந்தே மாதரம்.

பழனி
11-12-85 பி. எஸ். கே. லக்ஷ்மிபதி ராஜு

# என்னுரை

பாரதநாட்டின் புண்ணிய க்ஷேத்திரங்களில் தலைசிறந்து விளங்கும் காசி மாநகரில், 1905 டிசம்பரில் கூடிய இருபத்தொன்றாவது காங்கிரஸ் சபையிலே தலைமையுரை ஆற்றிய கோபால கிருஷ்ண கோகலே,

> ''ஸ்வதேசி என்ற உணர்ச்சியில்தான் 'தேச மாதாவின் பக்தி' என்ற அரும் பொருள் அடங்கிக் கிடக்கிறது. ஸ்வதேசி உணர்ச்சி ஒன்றே ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் உத்ஸாகம், உத்வேகம் என்ற சுடரை ஏற்றி வைக்க வல்லது. இந்தியாவிலுள்ள ஒவ்வொரு வரிடமும், அதாவது தோட்டி முதல் தொண்ட மான் வரையில், இந்த சுதேச உணர்ச்சி பூர்ணமாக ஏற்படும்படி நாம் உழைக்க வேண்டும். தேசத்துக்கு உழைப்பதில் அள வற்ற ஆவல் நம்மவருக்கு ஏற்படும்படி செய்ய வேண்டும்''

என்று குறிப்பிட்டார்.

வங்கப்பிரிவினையைமுன்னிட்டு 1905 ஆகஸ்டு மாதம் 7 ஆம் நாள் கல்கத்தாவில் முதலாவதாகச் சுதேசீய விரதம் மேற்கொள்ளப்பட்டது.

1905 ஆகஸ்ட் 7ஆம் நாளில்தான் இந்தியாவில் புதிய உணர்ச்சி பிறந்தது. அன்றைய தினம் Boycott அதாவது அன்னிய சம்பந்தம் விலக்கு (பஹிஷ்காரம்) என்கிற மகாமந்திரச்சொல் தோன்றியது. இந்தச் சொல் தோன்றக் காரணம் என்ன? அதன் மகிமை என்ன?

''நம்மை ஆள்வோரைத் துணையாகக் கொண்டு அவர்கள் மூலமாக நாம் நன்மை பெறலாமென்ற நம்பிக்கை யெல்லாம் பழங் காலத்து நம்பிக்கை. நமக்கு நாமே துணை செய்துகொள்ளும் வழியைத் தவிர இனி வேறு வழிகிடையாது. மேல்தேசங்களிலே ராஜாங்கம் ஜன அபிப்பிராயத்துக் கிணங்க நடத்தப் படுகிறது. இத்தேசத்திலே ராஜாங்கம் ஜன அபிப்பிராயத்தின்பலத்தைக் கொண்டு நடக்க வில்லை. கத்தியின் பலத்தைக்கொண்டு நடை பெற்று வருகிறது. நம்மை ஏழ்மைப் படுத்தும் முறைமையை மாற்ற விரும்புவது ராஜத் துரோகமாக மாட்டாது. இந்த விஷயத்தில் சுதேசீய முயற்சி ஓர் நல்ல துணையாகும்.''

பம்பாயில் 7-10-1906 இல் நடைபெற்ற சுதேசியக் கூட்டத்தில் திலகர் இவ்வாறு முழக்க மிட்டார்.

1906-1907ஆம் வருடங்களில் சுதேசீயக் கிளர்ச்சிகள் நாட்டில் உச்ச கட்டத்தை யடைந்தன.

தாய்நாட்டாரை அன்னிய நாட்டுச் சாமான்களை விலக்குவதில் தீவிர முயற்சி எடுத்துக் கொள்ளச் செய்யவும், சுதேசதொழிற்சாலை முயற்சிகளுக்கான ஏற்பாடுகள் செய்யவும் தேசத் தலைவர்கள் முனைந்தனர்.

சுதேசியம் ராஜநீதி சம்பந்தமான நோக்கம் மட்டுமன்று, நாட்டின் செல்வ வளர்ச்சிக்குரிய உபாயம் என்பதையும் தலைவர்கள் பிரசாரம் செய்து வந்தனர்.

சுதேசிய அபிமானத்தைமக்களுக்கு உண்டாக்கி விட்டால், தானாகவே ஸ்வராஜ்ய உத்தேசமானது அவர்களுக்குள் உண்டாய் விடும் என்பது மக்கள் தலைவர்களின் எண்ணம்.

மகாகவி பாரதி தேசிய போராட்டத்தின் முன்னணிக் கவிஞர் என்பதை யாவரும் அறிவர். அவர் இயற்றி வழங்கிய பாடல்கள் விடுதலைப் போராட்டத்தின் வெற்றியை உறுதிப்படுத்தின.

பத்திரிகையாளரான பாரதி, தாம் ஈடுபட்ட பத்திரிகைத் தொழிலில் தம் பணியைச் செவ்வனே ஆற்றியுள்ளார். மக்களுக்கு அறிவு புகட்டும் பற்பல முயற்சிகளில் அவர் ஈடுபட்டார். சுதேசியத்தில் ஆழ்ந்த பற்றுகொண்டு, 'இந்தியா' பத்திரிகையில் சுதேச இயக்கத்தின் சார்புள்ள கட்டுரைகளையும், செய்திக் குறிப்புகளையும்தொடர்ச்சியாக பிரசுரித்து

வந்தார்; சுதேசியத்தின் வெற்றிக்குத் துணையாக நின்றார்.

ஆம்; பாரதியின் 'இந்தியா' பத்திரிகை பாரத தேசத்தில் சுதேசிய இயக்கம் தோன்றிய காலந் தொட்டே தன் முழு ஆதரவைத் தந்து வந்தது; சுதேசியம் வெற்றி பெற வேண்டும் என்ற கொள்கையில் தீவிரம் காட்டி நின்றது.

பாரதிக்கும் சுதேசி இயக்கத்துக்கும் இருந்து வந்த நெருங்கின தொடர்பை இந்த நூலின் ஒவ்வொரு பக்கமும் நம்மோடு நேரே பேசுகிறது.

சுதேச இயக்கத்திற்கு ஆதரவு அளித்தவர்களை நெஞ்சாரப் பாராட்டி மகிழ்ந்த பாரதி, அதே நேரத்தில், இயக்க முயற்சிக்கு முட்டுக்கட்டையாக இருந்தவர்களையும் தயை தாட்சண்யம் பாராமல் கண்டனை செய்தார்.

தம் கருத்துகளைப் புலப்படுத்திய பாரதி, நாடு தழுவிய முறையில் இயக்கமாக எழுச்சி பெற்ற செய்திகளையும் பிரசுரிக்கத் தவறவில்லை.

இந்திய வரலாற்றில் இடம் பெறத்தக்க நிகழ்ச்சிகள் பல நடைபெற்றிருந்தும், நாட்டு வரலாறுகளைப் பேசும் நூல்களில் பாரதியின் 'இந்தியா' பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட பல செய்திகள் இல்லை என்பதை இந் நூலைப் படிப்பவர்கள் எளிதில் உணர்ந்து கொள்வர்.

தமிழ்நாட்டில் சுதேசி இயக்கம் முக்கியமாய் நெல்லைச் சீமையில்தான் வேரூன்றியது. அதன் மூலபுருஷர் அந்நியக் கப்பல் கம்பெனிக்கு எதிர்க்கப்பல் கம்பெனியை உருவாக்கிய வ. உ. சிதம்பரனார். சுதேசி இயக்கத்தின் ஒரு பகுதியான கப்பல் கம்பெனிக்காகப் பிள்ளையவர்கள் பட்ட பாடுகளையும், அவருடைய சீரிய முயற்சி தழைத்தோங்கப் பாரதிமேற்கொண்ட அரும்பணிகளையும் இந்நூல் செய்திக் கட்டுரைகள் விளக்குகின்றன.

இந்தியநாடு முழுதும் ஒன்றெனக் கிளம்பி, சுதேச முயற்சி வெற்றி பெற நம்மவர்கள் மேற்கொண்ட செயல் முறைகளையெலாம் இந்நூலில் ஆதாரபூர்வமாகக் காணலாம்.

இந்திய விடுதலைப் போரின் முக்கிய ஆணிவேரான 'சுதேசி இயக்க'த் தொடர்பான செய்திகளைப் பார்வைக்குக் கிட்டிய 'இந்தியா' இதழ்களினின்றும் திரட்டி, தொகுத்துள்ளேன். குற்றம் நீக்கிக் குணம் பேண வேண்டுகின்றேன். ஓம். வந்தேமாதரம்.

சீனிவிசுவநாதன்

# பதிப்புரை

எங்கள் பதிப்பகத்தின் சிறப்பு வெளியீடாக இந்திய விடுதலைப் போர் வரலாற்றுக்கு அணி செய்யும் தேசியத்தின் வெற்றி என்னும் நூலை வெளியிடுவதில் பெருமை கொள்கிறோம்.

இமயம் தொட்டு குமரி வரை எழுச்சி பெற்ற தேசிய இயக்கச் செய்திகளைப் பாரதியின் இந்தியா பத்திரிகை தொடர்ந்தாற்போல் பிரசுரம் செய்து வந்தது. அப் பத்திரிகையிலிருந்து திரட்டப்பெற்ற ஆதாரபூர்வமான செய்திகளே இந்நூலில் தரப்பெற்றுள்ளன.

பாரதியின் கருத்துகள், கப்பலோட்டிய தமிழர் வ.உ.சி. அவர்கள் மேற்கொண்ட சுதேசிக்கப்பல் கம்பெனி முயற்சி, அவருடைய முயற்சிக்குப் பாரதி செய்த உதவிகள், சுதேசிய வெற்றிக்கு மக்கள் ஆற்றிய பணிகள் ஆகிய இன்ன

பிற செய்திகளை இந்த நூல் கால முறைப்படி தருகின்றது.

வரலாற்றுச் சிறப்புடைய இந் நூலுக்கு வாழ்த்துரை வழங்கிய தமிழ் நாடு சுதந்திரப் போராட்ட வீரர்கள் சங்கத் தலைவரும், தியாகச் செம்மலு மாகிய திரு. பி. எஸ். கே லக்ஷ்மிபதி ராஜு அவர்களுக்கும், நூலைத் தொகுத்து வெளியிடத் துணைபுரிந்த திரு சீனி. விசுவ நாதன் அவர்களுக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

எங்கள் அரும் பணிக்கு ஊக்கம் அளிக்கும்படி அனைவரையும் கேட்டுக் கொள்கிறோம். நன்றி.

பதிப்பகத்தார்

## பொருளடக்கம்


பாராட்டுரை
என்னுரை
பதிப்புரை
விஷய அட்டவணை

1. நமது கடமைகள்
2. ஆகஸ்ட் மாதம் 7-ம் தேதி
3. தூத்துக்குடியிலே சுதேசியம்
4. தூத்துக்குடியிலே குட்டி புல்லர்
5. ஒரு சுதேசிய கேஸ்
6. கல்கத்தாவிலே சுதேசியத் திருநாள்
7. சுதேசியக் கல்வி முறை
8. பரிஸாலில் சுதேசியம்
9. சுதேசியத்திற்குப் பார்லிமெண்டில் ஓர் துணைவர்
10. சுதேசியக் கல்வி- பணம்
11. கிராமங்களில் சுதேசிய முயற்சி
12. ஓர் புதிய சுவதேசிய புகைக் கப்பல் கம்பெனி
13. கல்கத்தாவில் சுதேசிய சாமான்கள்
14. சுதேசிய நிதி
15. சுதேசியத்தின் வெற்றி
16. சென்னையில் சுதேசிய மீட்டிங்குகள்
17. தீபாவளியில் பணச் சேகரிப்பு
18. சுதேசிய மீட்டிங்குகள்
19. தீபாவளி பணச் சேகரிப்பு
20. சென்னையில் சுதேசிய நிதி வாலண்டியர்கள்
21. நாஷனல் பண்ட் என்கிற சுதேசிய நிதியின் நோக்கங்கள்
22. சுதேசிய நிதி
23. வானமாமலை மடத்து ஜீயர் ஸ்வாமிகள்
24. சுதேசிய ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி
25. பள்ளடத்தில் சுதேசியம்

26. பெங்காளத்திலே தேசத்திருநாள் 56
27. சுதேசிய நிதி 58
28. சென்னையிலே தீபாவளிக் கதைகள் 61
29. சுதேசிய நிதியும் வெளி ஜில்லா ஸ்தலங்களும் 63
30. சுதேசிக் கப்பல் 64
31. சுதேசி ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி லிமிடெட் தூத்துக்குடி 66
32. மறுபடியும் எட்டயபுரம் ஜமீந்தார் 72
33. நாஷனல் பண்டு அல்லது சுதேசீய நிதி 75
34. சுதேசிய பாங்க் 76
35. திருவாங்கூர் விவசாயவியாபாரக்கம்பெனி 79
36. சென்னையிலே ஓர் இந்திய பாங்க் 82
37. பெங்கால ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி 83
38. சுதேசீய நிதி முழுகிப் போனதும் நமது நன்மைக்கே 84
39. வாலிபர்களும் சுதேசீயமும் 85
40. பாபு பானர்ஜியும் சுதேசீயமும் 86
41. சென்னையில் ஒரு சுதேசி பாங்கி 87
42. சென்னை சுதேசீய நிதி தொழிற் சங்கம் மானேஜிங் கமிட்டியாரின் தீர்மானம் 88
43. சுதேசீய நிதியும் தொழிற்சங்கமும் 90
44. சுதேசீய நிதி 91
45. சுதேச நிதி 92
46. சுதேசீயமும் ஸ்ரீ ஜி. சுப்பிரமணியஐயரும் 93
47. ஸர் பெரோஸ்ஷா மேட்டாவும் சுதேசீயமும் 95
48. சுதேசியமும் அந்நிய நாட்டுச் சரக்கு விலக்கமும் 98
49. "சுத்த சுதேசியம்" 100
50. சுதேசி ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி லிமிடெட் தூத்துக்குடி 105
51. சைனாவில் அன்னிய தேசச் சரக்கு விலக்கம் 112
52. தென்னிந்தியாவும் சுதேசியமும் 114
53. அன்னிய நாட்டுச் சரக்கை விலக்குவதில் உறுதி 117
சுதேச எச்சரிக்கைக் கமிட்டி 119
தூத்துக்குடி சுதேசிய ஸ்டீமர் கம்பெனி 120

சுதேசியத்தைப்பற்றி டாக்டர்
ஏ. கே. குமாரஸாமியின் கருத்து 122
அம்பட்டர் சுதேசியம் 124
ஜயஜய சுதேசியம்! 125
சுதேசீயம் 126
பரோடா காயக்வார் மகாராஜாவும்
சுதேசியமும் 129
61. சேலத்தில் சுதேசீயம் 130
62. சுதேசிய நிதியும் தொழிற்சங்கமும் 131
63. ஜயபூரில் சுதேசீயம் 135
64. சிரார்த்த கர்மத்தில் சுதேசீயம் 136
65. தெற்கே சுதேசீயம் 136
66. ஒரு சுதேசீய சபை 138
67. கூலிக்காரன் தேசாபிமானம் 140
68. காசி மகாத்மியமும் சுதேசீயமும் 140
69. சுதேசி வஸ்து பிரசாரணி 141
70. கல்கத்தா 'டெக்னிகல் இன்ஸ்டிடூட்'
அல்லது தொழிற்கல்விச் சாலை 142
71. இறங்கு துறையிலேயே நீச்சா? 145
72. கோம்பை சுதேச ஏலக் கிருஷிக் கம்பெனி 147
73. தூத்துக்குடி சுதேசிக்கப்பல் கம்பெனி 150
74. தூத்துக்குடி சுதேசிக் கப்பல் கம்பெனி 155
75. தூத்துக்குடி சுதேசி நீராவிக் கப்பல்
கம்பெனி 158
76. மாதாவின் கட்டளை 159
77. நமது வர்ஜன முயற்சி சுபஜயமாய்
விட்டதா? 160
78. தூத்துக்குடி சுதேசிக் கப்பல் (தரும நிதி) 162
79. புது வருஷம் 173
80. பம்பாய் யந்திரசாலைத் தலைவர்கள்
சங்கம்- சுதேசீய தர்மத்தின்
அபிவிருத்தி

# நமது கடமைகள்

ஜன சுதந்திரங்கள் அபிவிருத்தி யடையும் பொருட்டாக இனி அன்னியர்களைக்கெஞ்சுவதும், பெண்களைப்போல் மன்றாடுவதும் கூடாதென்று நாம் சொல்லவேண்டியதில்லை. அது ஜனங்களுக்கே தெரிந்து போய்விட்டது. அதிகமாகக் கெஞ்சியும், மன்றாடியும், இமிசை புரிவோர்களையே அதிகாரிகள், தீபாந்தரமேற்றுதல் முதலிய தண்டனைகளுக்கு உட்படுத்தி வாயை அடைத்து விடுகிறார்கள். ராஜநீதி சம்பந்தமான விவகாரங்கள் செய்யும் பொருட்டுப் பொதுக் கூட்டங்கள் கூடுவதைக்கூடப் பல இடங்களிலே தடை செய்துவிட்டார்கள். மற்ற இடங்களிலேயும் அவ்வாறே செய்து விடுவார்கள். பொதுக் கூட்டங்கள் நடத்த அனுமதி யில்லாவிட்டால் கெஞ்சுவதும் மன்றாடுவதும் எவ்வாறு சாத்தியமாகும்?

எனவே இத் தேசத்து ஜனங்கள் சென்ற பல வருஷங்களாகத் தேசாபிவிருத்தியின் பொருட்டுக் கையாடிவரும் முறைமைகளை நிறுத்திவிடுதல் அவசியமென்பது வெட்ட வெளிச்சமாக இருக்

சு. வெ - 1

கிறது. இந்த நிலைமையிலே, பல ஜனங்கள் இனி இன்னது செய்வதென்றறியாமல் திகைத்து அதைரிய மடைந்து போயிருக்கிறார்கள். ஆனால், தீர்க்காலோசனை செய்யுமிடத்து, அதைரிய மடைவதற்கு யாதொரு முகாந்தரமுமில்லை. அதிகாரிகள் நம்மிடமிருந்து இன்னும் சில சுதந்திரங்களைப் பிடுங்கிக் கொள்ளுவார்களென்று வைத்துக்கொள்வோம். அவ்வாறு செய்தபோதிலும் நமக்கு எவ்விதமான கெடுதிகளும் விளைந்து விடமாட்டா. சென்ற இரண்டு வருஷங்களில் ஜனங்கள் அடைந்திருக்கும் அபிவிருத்தியையும், அவர்கள் மனதிலே சுதேசியம் மிகுந்திருப்பதையும் பார்த்து நாம் சந்தோஷமடைய இடமிருக்கிறதே யல்லாமல், வருத்தமடைய யாதொரு காரணத்தையும் காணோம்.

இனி நாமாகச் செய்துகொள்ள வேண்டிய காரியங்கள் எத்தனையோ இருக்கின்றன. அவற்றுள் முக்கியமானவற்றைக் கீழே குறிப்பிடுகின்றோம்.

முதலாவது, ஒவ்வொரு ஜில்லாவிலும் அனேக சுதேசீய உபதேசிகள் ஏற்படுத்தி ஜனங்களுக்குப் பாரதநாட்டிலும், இந்நாட்டு வஸ்துக்களிலேயும் அளவிறந்த வாஞ்சை யுண்டாகும்படி செய்ய வேண்டும்.

இந்த உபதேசிகள் ராஜாங்கத் தவறுகளை எடுத்துப் பேசவேண்டிய அவசியமே கிடையாது. அன்னிய வஸ்துக்களை விலக்கி நாட்டு வஸ்துக்

களை ஆதரிக்கும்படியும், கைத்தொழில்களை அபிவிருத்தி செய்யும்படியும், விவசாய முறைமைகளைச் சீர்திருத்தும்படியும், கோர்ட்டு வியாஜ்யங்களிலே அளவற்ற பணத்தை வாரி இறைப்பதிலுள்ள தீமைகளை அறியும்படியும், பொது வகைகளிலேயும், தொழில் வகைகளிலேயும் சுதேசீயத்திற்கு அனுஸரணையான கல்விச்சாலைகள் ஏற்படுத்தும்படியும் ஜனங்களைத் தூண்டுவதே உபதேசிகளின் முக்கிய காரியமாகும்.

சுருக்கிச் சொல்லுமிடத்து இப்போது ஒவ்வொரு ஜில்லாவிலுமுள்ள தேசாபிமானிகளும் ஆரம்பித்து நடத்தவேண்டிய வேலைகள் பின் வருவன:-

1. ஸ்வதேசீயம், அதாவது ஸ்வதேச வஸ்துக்களிலேயும் எல்லாவிதமான தேசாபிவிருத்தியிலேயும் அன்புகொள்ளுதல். அவை பரவுதலடையுமாறு செய்தல்; முதலில் சிறிது நஷ்டம் ஏற்பட்ட போதிலும் பாராட்டாமல் இந்தியாவிலே செய்யப்பட்ட சாமான்களையே வாங்குதல்; நாட்டுக் கைத்தொழில்களைப் பணவுதவி முதலிய எல்லா உதவியாலும் ஆதரித்து அபிவிருத்தி செய்தல்; விவசாயச் சீர்திருத்தங்கள்.

2. பொது ஜனங்களைத் துண்டுப் பத்திரிகைகள், சபைகள், பிரசங்கங்கள் முதலிய உபாயங்களால் நல்லறிவுறுத்தல்.

3. கூடிய வரை கிராமச் சண்டைகளைப் பஞ்சாயத்துக்கள் மூலமாக நிறுத்துதல்; கிராம வழக்குகளைக் கிராமப் பஞ்சாயத்தார் மூலமாகவும் சுதேசீய உபதேசிகள் மூலமாகவும் கூடிய வரை தீர்த்துக்கொள்ளுதல்.

4. பொதுக் கல்வியும், கைத்தொழிற் கல்வியும் கூடிய வரை ஸ்வதேசீய விருத்திக்கு அனுசரணையாகும்வண்ணமாகப் பாடசாலைகள் ஸ்தாபித்து நடத்தல்.

5. கிராம சுத்தி. (சுகாதாரச் சீர்திருத்தங்கள்)

6. ஜனங்கள் கூடிய வரை வீண் செலவுகள் செய்து கடன்படாமலிருப்பதற் குரிய ஏற்பாடுகள் நடத்தல்.

7. இயன்ற வரை, ஜனஸமூஹத்தின் ஆதாரணைகளைச் செம்மைப்படுத்திக் கொள்ளுதல்.

மேற்கூறப்பட்ட ஏழுவிதமான வேலைகளும் நடந்தேறுவதற்கு ஸர்க்கார் அதிகாரிகளின் உதவியேனும் தயவேனும் சிறிதேனும் வேண்டாம். நாம் இந்தக் காரியங்களை நடத்தி வருவதில் எவ்விதமான தடைபுரியவும் ஸர்க்கார் அதிகாரிகள் துணியமாட்டார்கள். இந்த ஏழு பெருங் காரியங்களையும் மேல் வரும் வாரங்களிலே விவரிக்க முயற்சி புரிவோம். ஆனால் ஷெ காரியங்

கள் அனைத்தும் நமது முன்னோர்களால் நடத்தப் பெற்று வந்தன வென்பதையும், ஆதலால் அவற்றை நாம் கைகூடும்படி செய்தல் அசாத்திய மில்லை யென்பதையும் யாரும் மறுக்கலாகாது.

நமது முன்னோர்கள் விஷயத்திலே ஒரு கஷ்டம் இருந்தது. அதாவது, அவர்களுடைய பிரயத்தனங்களெல்லாம் தனித்தனியான கிராமங் களுக்குள்ளே அடங்கியிருந்தன. நாம் செய்ய வேண்டிய தென்னவென்றால் அப் பிரயத்தனங் களைத் தேச முழுமையும் ஒன்றென்ற உணர் வுடன், நடத்தவேண்டும். ஜாதீய ஒருமைக்கு இதுவே சிறந்த வழியாகும்.

(22-6-1907)

——

## ஆகஸ்ட் மாதம் 7-ம் தேதி

ஆகஸ்ட் மாதம் 7-ம் தேதி இந்தியா முழு திலும் வெகு சோபனகரமாகக் கருதப்பட வேண்டிய தினம். சென்ற வருஷத்திலே ஷை தினத்தன்றுதான் கல்கத்தாவில் முதலாவது சுதேசீய சங்கம் கூடி, சுதேசீய விரதம் கைக் கொள்ளப்பட்டது.

சென்ற செவ்வாய்க் கிழமையன்று கல்கத்தா வாசிகள் மேற்படி விசேஷத்தைக் கொண்டாடிய மாதிரியானது மிகவும் அதிசயிக்கத் தக்கதாக இருந்தது. இதுவரை கல்கத்தாவில் எக்காலத்தி லும் பாத்திராதபடி ஜனக் கூட்டம் வந்து சேர்ந் திருந்தது.

ஸ்ரீமத் சுரேந்திர பாபுவுக்குச் சபையார் ஓர் ஜயவிருது சன்மானமாகக் கொடுத்தார்கள்.

சபைத் தலைவராக ஸ்ரீமத் நரேந்திரநாத் ஸேன் வீற்றிருந்தார்.

ஸ்ரீ சௌத்ரி...ஓர் அற்புதமான பிரசங்கம் புரிந்தார். சுதேசீய முயற்சி கைகூடி வருவதைப் பற்றி மிகுந்த மகிழ்ச்சி யறிவித்தார்.

பெங்காளி மாதர்களிலே அனேகர் மேற்படி சபைக்கு வந்திருந்தார்களென்பது திருப்திகரமான விஷயமாகும்.

(11-8-1906)

—

## தூத்துக்குடியிலே சுதேசியம்

தூத்துக்குடியிலே சுதேசிய முயற்சி தழைத்து வருகின்றது. இந்த வாரம் செவ்வாய்க்கிழமை யன்று பெங்காளத்தின் முன்மாதிரியை அனுசரித்து அவ்வூரிலே நிகழ்ச்சி பெற்ற பொதுக் கூட்டத்தில் ஜனங்கள் அளவிறந்த உற்சாகம் காட்டினமை யறிந்து மகிழ்கின்றோம்.

நமது நகரவாசியாகிய ஸ்ரீ ஜி. சுப்பிரமணிய ஐயர் அச்சபையிலே தலைமை வகித்தார். ஸ்ரீ ஜி. சுப்பிரமணிய அய்யர் செய்த உபந்நியாசத்தில் தூத்துக்குடி வாசிகள் தமது முயற்சியின் பேரில் ஓர் ஸ்டீமர் ஸர்விஸ் ஏற்பாடு செய்திருப்பதை சிலாகித்துப் பேசினார். சில ஐரோப்பிய உத்தியோகஸ்தர்கள் சுதேசீய முயற்சிக்கு விரோதமாக இருப்பது எதிர்பார்க்கக்கூடிய விஷயமே யாயினும், இந்தியர்களிற் சிலர் அதே விதமாக நடந்து கொள்ளுவது வருந்தத்தக்கதா யிருக்கிறதென்று தெரிவித்தார்...

சுதேசிய சம்பந்தமாக ஸ்ரீ. ஜி. சுப்பிரமணிய அய்யர் எடுத்து வரும் முயற்சிக்கு நாமனைவரும் மிகவும் கடமைப் பட்டிருக்கின்றோம்.

(11-8-1906)

---

## தூத்துக்குடியிலே குட்டி புல்லர்

கீழ் பெங்காளத்திலே பெரிய புல்லர் ராஜி-னாமா கொடுத்து விட்டார். இதை மற்ற உத்தியோகஸ்தர்களெல்லாம் தமக்கு ஓர் எச்சரிக்கையாகக்கொள்வார்களென்று நம்புகிறோம். தூத்துக்குடியிலே மிஸ்டர் வாலர் என்ற ஹெட் அஸிஸ்டெண்ட் கலெக்டர் சுதேசிய முயற்சிக்கு விரோதமாக மிகவும் பிரயத்தனப்படுகிறாரென்று அடிக்கடி வர்த்தமானங்கள் நமக்கு வருவதிலிருந்து மிகுந்த விசனமுண்டாகிறது. இப்போது இந்தியா மந்திரியாக மிஸ்டர் ப்ராட்ரிக் இல்லை யென்ற விஷயமும், மிஸ்டர் மார்லி இருக்கிறா ரென்ற விஷயமும் தூத்துக்குடி வரை எட்டியிருக்குமென்றே நம்புகிறோம். அப்படி யிருந்தும் மிஸ்டர் வாலர் ஜனங்களின் நன் முயற்சிகளுக்கு விரோதமாக வேலைகள் செய்து வருவது மிகுந்த வியப்பையுண்டாக்குகிறது. சுதேசீய முயற்சியை அடக்குவது மிஸ்டர் வாலரினால் நிறைவேற்றக் கூடிய

விஷயமன்று. எமெர்ஸன், புல்வர் முதலியோர்களெல்லாம் மேற்படி அசாத்தியமான காரியத்திலே தலையிட்டு, கஷ்டமடைந்த சமாசாரமெல்லாம் மிஸ்டர் வாலருக்குத் தெரியாத சங்கதியில்லை.

——

## ஒரு சுதேசீய கேஸ்

தூத்துக்குடியிலே பி. ஐ. எஸ். என். (வெள்ளை) கம்பெனியாரின் படகு புறப்பட்டதற்கப்பாலே தான் சி. வ. (சுதேசீய) கம்பெனியாரின் படகு புறப்பட வேண்டுமென்பதாக மிஸ்டர் வாலர் உத்தரவு பிறப்பித்த விஷயம் முன்னமே நேயர்களுக்கு அறிவித்திருக்கிறோம். அதன் பேரில் சி. வ. கம்பெனியார் திருநெல்வேலி ஜில்லா மாஜிஸ்ட்ரேட்டுக்கு அப்பீல் செய்து கொண்டார்கள். மாஜிஸ்ட்ரேட்டாகிய மிஸ்டர் லாடார் வாலரின் உத்தரவை ரத்து செய்துவிட்டார்.

மிஸ்டர் வாலரின் சுதேசீய விரோதமான எண்ணங்களை உத்தேசித்து மேற்படி தீர்ப்பானது சுதேசீயத்திற்கோர் பெரு வெற்றியாகக் கருதப்படுகின்றது.

—— (11-8-1906)

## கல்கத்தாவிலே சுதேசீயத் திரு நாள்

செவ்வாய்க் கிழமையன்று கல்கத்தாவிலே நடந்த சுதேசீயத் திருநாள் கொண்டாட்டத்தின் தந்தி விவரங்களைப் படிக்கும்போது ஒவ்வொரு இந்தியனுடைய மனதிலேயும் ஓர் புதிய நம்பிக்கை பிறக்கு மென்பதில் சந்தேகமில்லை. சாயங்கால மான உடனே எங்கே பார்த்தாலும் பல் வேறு நிறங்கொண்ட கொடிகளைத் தூக்கிக் கொண்டு ஜனங்கள் நிறைந்த ஆவேசத்துடன் வந்தனர். கூட்டமோ இதைப் போல கல்கத்தாவில் இது வரை எந்தப் பொதுச் சபையிலும் கூடியது கிடையாது. பஜனைக் கூட்டங்களும், தேச கீதக் கூட்டங்களும் ஒன்றின்பின் ஒன்றாக வந்து செறிந்து நின்றன. ஊர்கோலங் கூட்டத் தார்: தடிகள் சுழற்றிக் கொண்டு வந்தார்கள். போலீஸ் தொந்தரை சிறிதேனுமில்லை. ஸ்ரீ நரேந்திரநாத் ஸேன் (இந்தியன் மிர்ரர் பத்திராதிபர் அக்கிராசனம் வகித்தார்.

### துவஜாரோஹணம்

வெற்றி, ஐக்கியம் என்பவற்றைக் குறிப்பிடுவ தாகிய தேசக்கொடி ஸ்ரீ பூபேந்திரநாத் வஸுவால் சுரேந்திர நாத் பானர்ஜிக்கு அளிக்கப்பட்டது- அந்தக் கொடி, அக்கிராசனாதிபதியின் பீடத்திற்குப்

பின்பக்கம் நிறுத்தி வைக்கப்பட்டது. எல்லோரும் மேற்படி துவஜத்திற்கு வணக்கம் காட்ட வேண்டு மென்று பானர்ஜி வேண்டிக்கொண்டபடியே ஜனங்கள் மேற்படி தேசக்கொடியை வணங்கினர். இந்தக் கொடியே நமது நாட்டிற்கு சுயாதீனத் தன்மை அளிக்க வந்திருக்கிறதென்றும், இந்தக் கொடி எங்கெல்லாம் பறக்கிறதோ அங்கெல்லாம் தொடர்ந்து வரவேண்டும் என்றும் உபதேசித்தார்.

ஜனங்களெல்லாம் ''வந்தேமாதரம்'' என்று முழங்கினர். சுதேசீய விரதம் புதுப்பித்துக் கொள்ளப்பட்டது.

(11-8-1906)

---

## சுதேசீயக் கல்விமுறை

நமது இளைஞர்கள் சீக்கிரம் இறந்து போய் விடுவதற்கு முக்கியக் காரணங்களி லொன்று, அந்நிய பாஷையிலேயே எல்லா விஷயங்களையும் படித்து, வெகு கடினமான பரீக்ஷைகளில் தேறும்படி யேற்பட்டிருப்பதே யாகுமென்று காலஞ் சென்ற மகா ரிஷி ரானடே ஸித்தாந்தம் செய் திருக்கிறார்.

அன்னிய ராஜாங்கமாக இருப்பதால் இங்கி- லிஷ் பாஷையிலே நம்மவர் தேர்ச்சி பெற வேண்டு மென்பதை நாம் மறுத்துப் பேசவில்லை. ஆனால், பூலோக சாஸ்திரம், உலக சாஸ்திரம், ரஸாயனம்,

வான சாஸ்திரம், கணிதம் என்பவற்றைச் சுதேச பாஷைகளிலேயே கற்றறிந்து கொள்ளுதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். இதனால் இளைஞர்களுக்கு சிரமக் குறைவும், சுயத்தன்மையும் ஏற்படக் கூடும். மெட்ரிகுலேஷன் பரீக்ஷை வரை ஒவ்வொரு வகுப்பிலும் இங்கிலீஷ் பாஷை பயிற்ற வேண்டுவது அவசிய மாயினும், மற்றப் பாடங்களைக்கூட தேச பாஷையின் மூலமாக நடத்த வேண்டும். இப்போது கல்கத்தாவிலே ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் சுதேசியக் கல்விச் சங்கத்தாரும் இதே நோக்கங் கொண்டிருப்பதை யறிந்து மகிழ்ச்சி யடைகிறோம்.

(18-8-1906)

---

## பாரிஸாலில் சுதேசீயம்

பாரிஸால் சுதேசீய முயற்சியின் அபிவிருத்தி மிகவும் ஆச்சரியகரமாக இருக்கிறது.

அங்கே 41 கிளைச் சங்கங்கள் இருக்கின்றன. ஓர் நெசவுப் பாடசாலை யுளது. கல்கத்தாவிலிருந்து சுதேசீயத் துணிகள் தருவிக்கப்பட்டு, அவற்றை இளைஞர்கள் முதுகின்மீது சுமந்து சென்று விற்கிறார்கள். 523 விவாதங்கள் கோர்ட்டுக்குப் போகாமல் சுதேசீய மத்தியஸ்தத்தினால் தீர்ப்புச் செய்யப்பட்டிருக்கின்றன. வருஷ ஆரம்பத்தில் அவ்வூரிலே 56 அந்நிய சாராயக் கடைகள் இருந்தன. இப்போது ஒன்று

தான் இருக்கிறது. சுதேசீய முயற்சிக்குத் துரோகிக ளாகிய 340 பேர் விலக்கி வைக்கப்பட்டிருக் கிறார்கள்.

---

## சுதேசீயத்திற்குப் பார்லிமெண்டில் ஓர் துணைவர்

பார்லிமெண்ட் காமன்ஸ் சபையிலே இந்திய அரசிறை அறிக்கையின்போது நடந்த விவ காரத்தில் எர்ல் பெர்ஸி பேசினார். எர்ல் பெர்ஸி கான்ஸர்வேடிவ் கட்சியைச் சேர்ந்தவர். இவர் இந்தியா கவர்ன்மெண்டார் சாமான்கள் வாங்கு வதைப்பற்றிப் பேசும்போது "உள்நாட்டுச் சாமான்கள் சரியான குணமுடையனவாக இருக்கும் விஷயங்களில், வெளி நாட்டுச் சாமான்களைக் காட்டிலும் உள்நாட்டுச் சாமான்களையே அதிக மாக ஆதரிப்பது பொருந்தும்" என்றார் இதே விஷயத்தைச் சொல்லியதன் பொருட்டாகவே கீழ்பெங்காள மாகாணத்தில் அனேகர், பலவிதமாக கவர்ன்மெண்டாரால் தொந்தரை செய்யப்பட்டார்க ளென்பதை எர்ல் பெர்ஸி அறிந்திருப்பா ரென்று நம்புகிறோம்.

(18-8-1906)

---

## சுதேசீயக் கல்வி - பணம்

சுதேசீய யூனிவர்ஸிடி யொன்று கல்கத்தாவிலே ஸ்தாபித்து விட்டார்கள். ஸர். குருதாஸ் பானர்ஜி, ஸ்ரீ ராஸ விஹாரி கோஷ் முதலிய கீர்த்திமான்கள் அதன் பொருட்டு இரவும் பகலும் உழைத்து வருகிறார்கள். நாளுக்கு நாள் அவர்களுடைய முயற்சி தழைத்தோங்குமாறு இறைவன் அருள் புரிவாராக.

ஆனால், சென்னை மாகாணம் என்ன செய்கின்றது? ஸர். குருதாஸ் பானர்ஜி, டாக்டர் ராஸ விஹாரி கோஷ் முதலிய பெரியோர்களின் ஸ்தானத்திலே இங்கிருக்கும் ஜனத்தலைவர்கள் சுதேசீயக் கல்வியைப் பற்றிச் சிறிதேனும் சிந்தனை புரிகின்றார்களா? சாகிற வரை வக்கீலாகவோ, ஜட்ஜாகவோ அல்லது வேறு ஏதாகவோ வேலை பார்த்துக் கொண்டேயிருந்து பணம் சம்பாதித்துக் கொண்டிருக்குமளவிலேயே மூச்சுப் போய் விட வேண்டுமென்று நிச்சயம் பூண்டவர்களாக இருக்கிறார்கள். "இதுவரை பணஞ் சேர்த்துக் குவித்து வைத்திருப்பது போதும்; இனியேனும் சிறிது காலம் தேசநலத்தின் பொருட்டு ஏதேனும் செய்வோம்" என்ற யோசனை இவர்கள் மனதுறகு வரவே மாட்டேனென்கிறது.

செல்வத்திலும், உலக சுகங்களிலும் ஆசை வைக்கக்கூடாதென்று நாம் இந்த இடத்திலே

வேதாந்தம் பேச வரவில்லை. செல்வத்திலும், உலக சுகங்களிலும் நமது நாட்டாருக்கு ஆசை மிகுந்து, நம்மவர் அன்னியர்களுக்கு அடிமைகளாக நின்று பார்த்துக் கொண்டிராமல் வர்த்தகம், கைத் தொழில் முதலிய பல முயற்சிகளால் செல்வத்திலும் பெருமையிலும் அதிகரித்து வரவேண்டு மென்பதே நமது முக்கிய ஆவலாகும்.

என்றபோதிலும், மொத்தமாக அளவுக்கு மிஞ்சிப் பணம் சேகரித்து வைத்ததற்குப் பிறகுங் கூட லோகோபகார சிந்தனை பெறாமல், தமக்குச் சொற்ப வருமானம் கிடைக்கக் கூடிய சிறுதொழில் களிலேயே கவனத்தை யெல்லாம் செலுத்திவரும் விருத்தியாப்பியர்களிடம் நாம் மதிப்புக் கொள்ள முடியவில்லை. "பாடு பட்டுத் தேட" வேண்டுமென் பதில் நாம் ஆக்ஷேபம் சொல்லவரவில்லை. ஆனால் கவிஞர் சொல்லியிருப்பதுபோல நெடுங்காலமாகத் தேடி முடிந்த "பணத்தைப் புதைத்து வைத்துக் கேடுகெட்ட மானிடர்"களைப்பற்றி நமக்கு மிகுந்த வருத்த முண்டாகிறது.

இப்போது யூனிவர்ஸிடிகளில் கொடுக்கப்பட்டு வருகின்ற கல்வி முறைக்கு முற்றிலும் மாறான முறைமை ஏற்பாடு செய்து புது யூனிவர்ஸிடிகள் ஸ்தாபிக்க முயலவேண்டு மென்று கல்கத்தா வாசி களைப் போல ஆதரணை உயர்ந்த எண்ணங்கள் தோன்றாத போதிலும், இப்போது இங்கிருக்கும் பாடசாலைகளிலே கவர்ன்மெண்டாருக்கும் பாதிரி

களுக்கும் சொந்தமற்றவைகளை எடுத்துக் கொண்டு, அவற்றிலே கூடிய வரை சுதேசீய முறைமைகளை அனுசரிக்கும்படி ஏற்பாடு செய்து, மாணாக்கர்களெல்லாம் அங்கே வந்து சேரும் பொருட்டாக உபாத்தியாயர்களை நல்ல திறமையுள்ளவர்களாக நியமித்து, நாட்டிற்கு ஹிதம் செய்யவேண்டு மென்ற இம்மட்டுக்கூட நமது ஜனத்தலைவர்களுக்குத் தோன்றவில்லையே! இவர்கள் எவ்வாறு போயினும் போகட்டும் நாம் முன்னொரு முறை கூறியிருப்பதுபோல, வர்த்தகர்களும் ஸாவுகார்களும், ஜமீன்தார்களுமே இந்தக் குறையைத் தீர்க்கவேண்டும். அவர்களிடமே நாம் மறுபடியும் விண்ணப்பம் செய்துகொள்ளுகிறோம்.

ஆனால், இது ஏதோ நம்முடைய சொந்த விண்ணப்ப மென்று அவர்கள் அசிரத்தையாக இருந்து விடவேண்டாம். நம்மெல்லோரையும் பெற்றுப் பாலூட்டி வளர்த்து வரும் தெய்வ மாதாவின் விண்ணப்பம். இந்திய மாதா அன்னியர்களிடம் போய் ஒரு காசு கேட்க மாட்டாள். அன்னியர்கள் தான் நூற்றாண்டுக் கணக்குகளாக இவளிடமிருந்து பிச்சை வாங்கிச்செல்லுகிறார்கள். நமது தாய் தனது சொந்த மக்களிடம் கை நீட்டிப் பணம் கேட்கிறாள். குவித்து வைத்துக் கொண்டு இவளுக்கு 'இல்லை' என்பதாக எவன் சொல்லுகிறான்? அவனைத் தூர எடுத்தெறி! அவன் நம்மைச் சேர்ந்தவனல்லன். அவன் அநாரியன்.

(25-8-1906)

## கிராமங்களில் சுதேசீய முயற்சி

தென் இந்தியாவிலே கிராமாந்தரங்களில்கூட சுதேசீய தர்மம் விருத்தி பெற்று வருவதென்றறிந்து அளவற்ற திருப்தியடைகிறோம். செங்கல்பட்டு ஜில்லா மதுராந்தகம் தாலூகா ஒரத்தூர் கிராமத்திலிருந்து நமக்கொருவர் பின்வருமாறு எழுதுகிறார்:

சென்ற திங்கட்கிழமை ஒரு சுதேசீய மீட்டிங் சேர்ந்தது. இப்போது கிராமங்களில் சீமை வேஷ்டி வாங்கிக் கொடுப்பதை விட்டு விட்டு சுதேசீய வேஷ்டிகள் வாங்கிக்கொடுக்க வேண்டுமென்றும், இனி ஒருவரும் சீமை வேஷ்டிகளை கட்டக்கூடாதென்றும் தீர்மானமாயிற்று. ஊரார் எல்லாரும் அப்படியே செய்வதாய் சம்மதித்தார்கள்.

—

## ஓர் புதிய சுவதேசிய புகைக்கப்பல் கம்பெனி

தூத்துக்குடியிலே சுதேசிய முயற்சியை மேற்கொண்டு நடத்திவரும் நம்மவர்கள் இப்போது புதிதாக "சுதேசீய ஸ்டீமர் கம்பெனி" (Swadesi Steam Navigation Compang) என ஒன்று ஸ்தாபிக்கக்

கருதியிருப்பதாக முன்னமே அறிவித்திருக்கின்றோம். இப்போது அந்தக் கம்பெனியின் ஆரம்பப் பிரயத்தனங்கள் தொடங்கிவிட்டன. அதன் கொள் முதல் ரூ. 5,00,000. இவ்வைந்து லக்ஷம் ரூபாயும் பங்கொன்று 25 ரூ. வீதம் 20,000 பங்குகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது. இக் கம்பெனியில் பங்குகள் எடுத்துக்கொள்வோரெல்லாம் இந்தியர்களாகவாவது, லங்கைத்தீவின ராவது, பர்மா தேசத்தவராவது அல்லது ஜப்பானிய ராகவாவது இருத்தல் வேண்டும். கம்பெனியின் நடவடிக்கைகளைப் பார்த்துவரும் பொருட்டு மெஸ்ஸர்ஸ் ஏ.ஆர். ஹாஜி பக்கீர் மகம்மது செயிட் அண்டு ஸன்ஸ் கம்பெனியார் காரியதரிசிகளாக நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள் ஆனரபில் குரு சுவாமி அய்யரவர்கள், எம். கிருஷ்ணநாயர் அவர்கள், பாரிஸ்டர் பால்பீடர் பிள்ளை அவர்கள், வி.ஓ. சிதம்பரம் பிள்ளை அவர்கள் என்போரே லீகல் அட்வைசர்கள் (Legal advisers). நாஷனல் பாங்க் ஆப் இந்தியா (National Bank of India) இக் கம்பெனியாரது பாங்கர்கள். கம்பெனியினது ரிஜிஸ்தர் இருப்பிடம் தூத்துக்குடியில் கிரேட் காட்டன் ரோட்டில் இருக்கின்றது.

தூத்துக்குடிக்கும் கொழும்புக்கும் வியாபாரத்தையும் பிரயாணத்தையும் இலகுபடுத்துவதும் போக்குவரத்தைச் சாசமாக்கிடுவதுமே இந்தக் கம்பெனியாரது முக்கிய கருத்து. கம்பெனியின் மெம்பர்கள் அதாவது பங்காளிகள் கம்பெனியின்

நன்மையைக் கருதி, தம்மாலியன்றதைச் செய்ய வேண்டுமென்பது அவசியம். தாம் போகும் பொழுது கம்பெனியார் கப்பல்களிலேயே பிரயாணம் செய்யவேண்டும். இவ்விதமாய் பங்காளிகள் ஒருங்கே சேர்ந்து தமது கம்பெனியின் நன்மை தேட முயற்சி செய்யவேண்டுமென்பது மிக்க நன்மை பயக்கக் கூடியதே.

கம்பெனியில் ஜப்பானியர் பங்கெடுத்துக் கொள்வதில் நமக்கு மிகுந்த உபயோகமிருக்கின்றது. பங்கெடுத்துக் கொள்வது மாத்திரமல்லாமல் அவர்கள் நம்மவரில் சிலருக்குக் கப்பல் வேலையைக் கற்பிப்பார்கள். கம்பெனியினது பங்குகளில் 8,000 பங்குகள் ஹாஜி மகம்மது பகீர் செயிட் அண்டு ஸன்ஸ் எடுத்துக் கொண்டதாகத் தெரிய வருகிறது. பாக்கியா யிருக்கும் பங்குகளில் டைரெக்டர்கள 2,000 பங்குகள் எடுத்துக் கொண்டால், பாக்கி 10,000 பங்குகள் தானிருக்கின்றன. இவற்றில் நம்மவரில் அநேகர் பங்குகள் எடுத்துக் கொள்வாரென்பதற்குச் சந்தேகமில்லை. இதனை ஏற்படுத்திய தேசாபிமானிகள் சிறிதேனும் புறங் காட்டாமல் தைரியத்துடன் முன்சென்று தம் காரியத்தைச் செய்து முடிப்பாரென்றே நம்புகிறோம்.

(1-9-1906)

——

## கல்கத்தாவில் சுதேசீய சாமான்கள்

கல்கத்தாவில் ஒரு சபையார் ஜனங்களுடைய மனதில் சுதேசியம் உண்டுபண்ணுவதற்காகச் சுயநலத்தைப் பாராட்டாமலே நம் தேசத்துச் சாமான்களைக்கொள்கிரயத்திற்கே விற்கிறார்கள். அதுவுமன்றி, ஒரு வண்டி நிறைய சாமான்களை யேற்றிக்கொண்டு போய் விற்கிறார்கள். தினந்தோறும் சாயங்காலத்தில் பீடன் என்னுமிடத்தில் சுதேசி சந்தை கூட்டுகிறார்கள்.

(22-9-1906)

---

## சுதேசீய நிதி

தென் ஜில்லாக்களில் சென்று "சுதேசீய" உபந்நியாசங்கள் செய்துகொண்டிருந்த ஸ்ரீ. ஜி. சுப்பிரமணிய அய்யர் சென்னைக்கு வந்து சில தினங்களாய்விட்டன. இங்கே இவர் மறுபடியும் "சுதேசீய நிதி" சேர்க்கும்படி பலமான முயற்சிகள் செய்து வருகின்றார். தீபாவளி நெருங்கி விட்டது. ஆதலால், வாரந்தோறும் 4,5 இடங்களில் பொதுச் சபைகள் கூடி, சுதேசீய விஷயங்களையும் சுதேசீய நிதியின் அவசியத்தன்மையையும் பற்றி விவகரிக்க வேண்டுமென்று ஸ்ரீ ஐயர் தீர்மானஞ் செய்திருக்கிறார். மாணாக்கர்களுக்கும் பிறருக்கும் அரிய உற்சாக மூட்டி வருகின்றார்.

சென்ற வருஷத்திலே சேர்ந்த சுதேசீய நிதி என்னாயிற்றென்று சிலர் கேட்கக் கூடும். சுமார் 7,000 ரூபாய் மட்டுமே சென்ற வருஷம் சேர்ந்தது. இதை வைத்துக் கொண்டு தேசப் பொதுநலத்திற் குரிய பெருங்காரியம் என்ன சாதனை செய்து விடலாம்? இன்னும் இரண்டு மூன்று வருஷகாலம் இதே மாதிரியாகப் பெருந்தொகைகள் சேர்க்கப்படு மாயின் பிறகு பிரயோஜனகரமான காரியம் ஏதேனும் செய்யலாம். இதையும் சுதேசீய சம்பந்த மான பல விவரங்களையும் குறிப்பிட்டு ஸ்ரீ. ஜி. சுப்பிரமணிய அய்யர் ஓர் விளம்பரம் பிரசுரம் செய் திருக்கிறார். சென்ற தீபாவளியைக் காட்டிலும் இந்த முறை அவரது தேசாபிமான முயற்சி விசேஷமாகக் கைகூட வேண்டுமென்று திரு வருளைச் சிந்திக்கிறோம்.

(22-9-1906)

——

## சுதேசீயத்தின் வெற்றி

சுதேசீய முயற்சிக்கு மூன்று வகையான முக்கிய விரோதிகளிருக்கிறார்கள் முதலாவது, உண்மையாகவே (Free trade) "ப்ரீ ட்ரேட்" (வர்த்தக நிர்ப்பந்தமின்மை) என்ற கொள்கை யிலே நம்பிக்கை யுடையவர்கள். இவர்கள் சொல்வதென்னவென்றால்,''ஜனங்களின் ஸமஷ்டி

சேர்ந்துதான் தேசமாகிறது. ஒவ்வொரு மனிதனும் அவனவன் தனக்கு லாபமாயுள்ள நல்ல சாமான் எந்தத் தேசத்திலிருந்து வந்தபோதிலும் அதை வாங்கி உபயோகிப்பதனால் லாபமடைகிறான். எனவே, இதே முறைமையை தேசத்தாரனைவரும் அங்கீகரிப்பதால் தேச முழுதும் லாபமடைகிறது. தனது தேசத்துச் சாமான்களையே வாங்க வேண்டுமென்ற நிர்ப்பந்தமிருக்குமானால் மேற்படி லாபகரமான அனுஷ்டானத்திற்குக் கெடுதி விளைகிறது'' என்கிறார்கள்.

இந்தக் கொள்கை இங்கிலந்து முதலிய சுயாதீன முடையனவும், சிறியனவுமாகிய நாடுகளுக்குச் (ஒத்து வருமே யன்றி இந்தியாவுக்கு) சிறிதேனும் ஒத்து வரக்கூடிய தில்லை. ''பிரீட்ரேட் (நிர்ப்பந்தமற்ற வர்த்தகக்) கட்சியாரின் கோட்பாடுகள் இந்தியாவிற்குப் பொருந்தமாட்டா என்பதைக் காலஞ்சென்ற பம்பாய் ஹைகோர்ட் ஜட்ஜியாகிய ஸ்ரீ. ரானடே, ஸ்ரீ டெலாங் என்ற விற்பன்னர்கள் வெகு தெளிவாக எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். அன்னியருடைய இச்சைப்படியெல்லாம் ஆளப்பெறுகின்ற நாம் நமது கைத்தொழில்களை ரக்ஷித்துக் (Protection) கொள்ளாவிட்டால், நமக்கு வேறு என்ன கதி இருக்கிறது? இதைப்பற்றிய வாதப் பிரதிவாதங்களை மற்றொரு முறை விஸ்தாரமாக எடுத்து விவகரிப்போம்.

நமது இரண்டாவது விரோதிகள் இத் தேசத்திலே பிரசுரமாகும் ஆங்கிலேயப் பத்திரிகைத் தலைவர்கள். இவர்கள் பொய்யும், வஞ்சனையும் நிறைந்த விவகாரங்களால் ஜனங்களின் மனதைச் சுதேசீயத்தில் வெறுப்புக் கொள்ளும்படி செய்து விடுகிறார்கள். இதற்கு ஒரே நிவாரணம் தானிருக்கிறது. அதாவது, நம்மவர்கள் அன்னியப் பத்திரிகைகளை ஆதாயமல் கை விட்டுவிட வேண்டும். "தெருவிலே போகும் சனியனை தாம்பூலம் வைத்து அழைப்பதுபோல" நம்மவர்கள் ஆங்கிலேயப் பத்திரிகைகளுக்குப் பணம் கொடுத்து உதவி புரிகிறார்கள்.

நமது மூன்றாவது முக்கிய விரோதிகள் யாரென்றால், அன்னிய தேசத்துச் சாமான்களைத் தருவித்து, அவை சுதேசியச் சாமான்களேயென்று சொல்லி ஏமாற்றி விற்கும் வர்த்தகர்கள். இவர்கள் "உடன் பிறந்தே கொல்லும் வியாதி"க்குச் சமானமாகி நம்முடன் பிறந்தே நம்மைச் சூழக் கெடுக்கும் துரோகிகளாவார்கள். இந்த மூன்று முக்கிய விரோதிகளைத் தவிர வேறு பல குட்டிப் பிசாசுகள் இருக்கின்றன. அவற்றை யெல்லாம் நாம் பொருட்டாக்க வேண்டியது அவசியமில்லை.

இப்படி யெத்தனையோ விரோத மிருந்தும், அதை யெல்லாம் எதிர்த்து நமது நாட்டிலே சுதேசீயம் அபிவிருத்தி பெற்று வருவது மஹா சந்தோஷகரமான விஷயம். சுதேசீயம் அபிவிருத்தி பெறவில்லை யென்று சொல்பவர்கள்

விழிகண் குருடர்கள். சென்ற ஒரு வருஷ காலத்திற்குள் இந்தியாவிலே புதிதாகத் தோன்றி வேலை செய்துவரும் சுதேசீயக் கம்பெனிகளின் ஜாப்தா வொன்று கீழே பிரசுரம் செய்யப்பட்டிருக்கிறது. அதைப் பார்க்குமிடத்து சுதேசீய முயற்சி எவ்வாறு ஓங்குதல் பெற்று வருகிறதென்பது எல்லோருக்கும் தெளிவாகும்.

## (1905-06) ஒரு வருஷத்திற்குள் இந்தியாவில் ஸ்தாபன முற்றிருக்கும் சுதேசீயக் கம்பெனிகளின் ஜாப்தா

| பெயரும் இடமும் | முதல் (ரூபாய்) |
|---|---|
| பஞ்சு நெசவு யந்திரசாலை, லாஹோர் | |
| பயோனீர் கைத்தறி நெசவு கம்பெனி, ஜலந்தர் | |
| இந்திய சரக்கு சாலை, ஆமதபாத் | |
| கிருஷ்ணா சாய வர்த்தக, நெசவு கம்பெனி, வேய் | |
| பின்லி யந்திரசாலை கம்பெனி, பம்பாய் | |

பெயரும் இடமும்

சுதேசி ஐக்கிய சரக்குச்
சாலை, பம்பாய்

பாடன்கா வகைக் கம்பெனி,
பம்பாய்

ஆல் இந்தியா இன்ஷூரன்ஸ்
கம்பெனி, பம்பாய் 50,00,000

பாஸ்கர கைத்தொழில்
சாலை, ராம்பே

10. நெருப்புக்குச்சித் தொழிற்
கம்பெனி, பம்பாய்

எண்ணெய், மாவு யந்திரசாலை,
ஷோலாப்பூர்

12. இந்தியன் பரஸ்பர சகாய
கம்பெனி, பம்பாய்

13. பஞ்சு அறைவை, நெசவு
கம்பெனி, பர்ஸா

14. பிரதாப் பஞ்சு அறைவை,
கம்பெனி, ஆமல்னர்

15. ஸாஹா ஸ்டீமர் கம்பெனி,
பம்பாய்

16. ஷாஹூ சத்திரபதி அறைவை,
நெசவு கம்பெனி, கோலாப்பூர் 15,00,000

பெயரும் இடமும்

17. கைஸர் சுதேசிய கைத் தொழிற் சாலை, ஆபூ

18. பர்ஹன்பூர் தப்தி யந்திரசாலை, பர்ஹன்பூர்

19. இந்தியா பாங்க், பம்பாய்

20. சுதேதி யந்திரசாலை, புனா

21. சாயாஜி சர்க்கரை தொழிற்சாலை, கணதேவி

22. ஸ்டீமர் கம்பெனி, பம்பாய்

23. சுதேசிய பாங்க், பம்பாய்

24. கைத்தறி, நெசவுச் சாலை, ஷோலாபூர்

25. கைத்தறி, யந்திர நெசவுச் சாலை, பெல்காம் (தெரியாது)

26. தாமரை சோப்பு தொழிற்சாலை, பம்பாய் 1,00,000

27. மேற்கிந்தியா பாங்க், பம்பாய் 25,00,000

28. சர்க்கரை தொழிற்சாலை, ஐதராபாத்

29. குரோம் தோல் தொழிற்சாலை, சென்னை 1,00,000

| பெயரும் இடமும் | ரூபாய் |
|---|---|
| 30. யூனைடெட்-லைப் இன்ஸூரன்ஸ் கம்பெனி, சென்னை | 1,00,000 |
| 31. இந்தியன் சுதேசீய பரஸ்பர ஸகாய சங்கம், லாஹோர் | |
| 32. மத்திய அறைவை நெசவுச் சாலை, அகோலா | |
| 33. ஸயன்ஸ் கைத்தொழில் சங்கம், பெங்காளம் | 2,00,000 |
| 34. பெங்காள மண்வனைவுத் தொழிற்சாலை, பெங்காளம் | |
| 35. இஸ்மேல் அச்சு தொழிற்சாலை, டெல்லி | 5,00,000 |
| 36 ஆன்ட்ரு யூல் கம்பெனி யந்திரசாலை, பெங்காளம் | (தெரியாது) |
| 37. பாரத ஹிதேஷி அறைவை நெசவுயந்திரசாலை, கல்கத்தா | 10,00,000 |
| 38. இந்திய அறைவை நெசவு யந்திரசாலை, பெங்காளம் | |
| 39. கைத்தொழில் பாங்க், லூடியானா | |
| 40. லக்ஷ்மி யந்திரசாலை | ) |
| 41. லால்ஹாரா-கைத்தொழிற்சாலை | ) |
| 42. ஷோலாபூர்-யந்திரசாலை | ) முதல் |
| 43. பரோடா-ராஜ்யத்து யந்திர சாலைகள் | ) தொகை ) தெரியாது |
| 44. எவிச்பூர்-தொழிற்சாலை | ) |

(29-9-1906)

—

## சென்னையில் சுதேசீய மீட்டிங்குகள்

திங்கள் மாலை 6 மணிக்கு சென்னை திருவல்லிக்கேணி அரிசி மண்டி சௌக்கில் அந்த ஊரார் ஒரு கூட்டம் கூடினார்கள் சுமார் 1000 பேர் வரையில் வர்த்தகர்களும், தொழிலாளிகளும், மற்றோரும் வந்திருந்தார்கள். அப்போது மிஸ்டர் ஸ்வாமிநாதய்யரும், மிஸ்டர் ஜி. சுப்பிரமணியய்யரும் நமது நாட்டுப் பூர்வீகத் தொழில்கள் அன்னியர் போட்டியால் நாசமாகி வருவதைப் பற்றியும், அத் தொழில்களை நிலைநிறுத்தல் அத்தியாவசிய மென்பதைப் பற்றியும், புதுத் தொழில்களை ஸ்தாபிப்பதவசியமென்பதைப் பற்றியும் பேசினார்கள். இதுமேலான நோக்கத்துடன் சென்னையில் தொழிற்சங்கம் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கிற தென்றும், அந்தச் சங்கத்தார் சுதேசீய நிதி யென்று ஒரு பெரும் நிதி சேர்த்துவருகிறார்களென்றும் சொல்லப்பட்டது.

இந்த நிதியைச் சேர்ப்பதற்காக வரும் தீபாவளி யன்று வீடு வீடாக யாசகம் செய்யப்படு மென்றும், அப்போது அவரவர் தோன்றினதைக் கொடுக்க வேண்டுமென்றும் சொல்லப்பட்டது. வந்திருந்த எல்லோரும் அனுதாபங் காட்டி, நல்ல காரியத்தில் உதவி செய்வதில் தடையிருக்க மாட்டாதென்று உறுதி சொன்னார்கள். ஸ்தல வாசிகள் சிலரைக் கமிட்டியாக நியமித்து.

வசவண்டியர்களாக வர இஷ்டமுள்ள பிள்ளை களின் பெயர்களும் பதியப்பட்டு மீட்டிங்கு கலைந்தது.

(29-11-1906)

—

## தீபாவளியில் பணச்சேகரிப்பு

சுதேசீய நிதியின் பொருட்டாக தீபாவளியின் போது பணஞ்சேகரிக்கும் பொருட்டு மிஸ்டர் ஜி. சுப்பிரமணிய அய்யரும் மிகவும் அருமையான பிரயத்தனம் செய்து வருகிறார்கள். சென்ற வருடம் தீபாவளி சமயத்தில் மட்டுமே யன்றி வருஷ முழுதிலும் இடைவிடாமல் ஸ்ரீ. ஜி. சுப்பிர மணிய அய்யர் முயற்சி புரிந்தும் சுமார் 6,800 ரூபா மட்டிலுமே வசூலாயிற்று. பொது ஜனோப காரமான எவ்விதப் பெருங்காரியத்திற்கும் மேற்படி தொகை போதமாட்டா தென்று நாம் இங்கு வற் புறுத்த வேண்டியதில்லை. இவ்வருடமும் அவ் வாறே சொற்பத் தொகையோடு நின்றுவிடு மானால் நமது ஜனத் தலைவர்களின் நோக்கம் சிறிதேனுங் கைகூட இடமில்லாமற் போய்விடும்.

இவ்வருடம் பணவசூல் ஜாஸ்தியாக வேண்டு மென்ற நோக்கம் நம்மவர்களுக்கு இருக்கு மானால், தீபாவளி சமயத்தில் வாலிபர்களை மட்டிலுமே தெருத் தெருவாகப் பணம் சேகரிக்க அனுப்பி விடுவது போதமாட்டாது. வயது முதிர்ந்த

பெரியோர்கள், கண்ணியமுள்ள கிரகஸ்தர்கள், புகழ்பெற்ற வக்கீல்கள், செல்வாக்குடைய உபாத்தியாயர்கள் முதலியோர்களெல்லாம் தெருவழியே நடந்து, பணம் சேகரிக்கத் தொடங்கினாலொழிய யாதொரு காரியமும் சாயமாட்டாது. சர்க்கார் உத்தியோகம் பார்ப்பவர்கள் சுதேசீய முயற்சியிற் சேர்வதனால் கவர்ன்மெண்டாரின் விரோதம் இவர்களின்மீது ஏற்படுவதற்கு யாதொரு இடமுமில்லாது போயினும், இவர்கள் தமது சொந்தக் கோழைத்தன்மையால் மேற்படி முயற்சியினின்றும் ஒதுங்கி நிற்கின்றனர். இவ் வருடம் எல்லோரும் ஒருங்குசேர்ந்து தம்மால் இயன்ற வரை முயற்சி புரிந்து சுதேசீய நிதியைத தக்க நிலைமைக்கும் உபயோகத்தன்மைக்கும் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறோம்.

நமது சுதேசீய முயற்சி கைத்தொழில் விஷயத்தோடு நின்று போகக் கூடியதில்லை. இன்னும் எத்தனையோ விஷயங்களில் நாம் சுதேசீய மன்றாட்டங்கள் நடத்துவது பாக்கி யிருக்கிறது. ஈசன் நமக்கு வெகு சுலபமான கைத்தொழில் சுதேசீயத்தைப் பிரதம பரீக்ஷையாய் வைத்திருக்கிறார். இதிலேயே நாம் தவறி விடுவோமாயின் பிறகு இன்னும் வரக் கூடிய பெரிய பெரிய பரீக்ஷைகளுக்குச் சிறிதேனும் தகுதியில்லாதவர்களாகி விடுவோம். தேசாபிமானிகளாக தம்மைக் கருதிக் கொள்ளும் ஒவ்வொருவரும் இவ் விஷயத்தை ஆழ

ஆராய்ச்சி புரிந்து நடந்துகொள்ள வேண்டுமென்று விரும்புகிறோம்.

(6-10-1906)

## சுதேசீய மீட்டிங்குகள்

சுதேசீய நிதியின் தொழிற் சங்கத்தவர் அனுமதியில் சென்ற சனிவாரம் புரசைவாக்கத்தில் தீபாவளி யன்று வீடுவீடாய் வசூல் செய்யும் விஷயமாய்ப் பப்ளிக் மீட்டிங்கு ஒன்று கூடியது. கற்றோர்களும் மற்றோர்களுமாகப் பெருந்திரளாய்க் கூடியிருந்து, அங்கு உபந்நியசிக்கப்பட்ட விஷயங்களைச் சிரத்தையாய்க் கேட்டறிந்தார்கள். அப்போது பெருந்தொகையான சிறுவர்கள் வாலண்டியர்களாகப் பதிவுச் செய்யப் பெற்றதோடு, ஒரு செல்வாக்குள்ள பிரதிநிதிக் கமிட்டியொன்றும நியமிக்கப்பட்டது.

இவ்வாறே சௌகார்பேட்டையிலும் தியலாஜிகல் ஹைஸ்கூலில் ஒரு மீட்டிங் கூடி, அதில் ஸ்வாமி வித்யானந்த பரமஹம்ஸர் (பி.ஏ)வும் ஆஜரா யிருந்தார். பெருந்தொகையான கற்றறிவாளரும், மாணவரும் வந்திருந்தார்கள். மெஸஸ் பி சுப்பிரமணியய்யர் பி ஏ.எல்.டி., எம். கிருஷ்ணமாச்சாரியார் பி. ஏ. எல். டி இருவரும் வற்புறுத்தலாய் ஆங்கிலததில் உபந்நியாசித்த பிறகு மெஸஸ் ஜி. சுப்பிரமணியய்யர், சசிலேகர் பத்திராசிரியராகிய சேஷாச்சார்லு, ஏ. சி. பார்த்தசாரதி

நாயுடு இவர்கள் தமிழிலும் தெலுங்கிலும் உபந்நியாசித்தார்கள். அனேக வாத்திமார்களும். வர்த்தகர்களும், சௌகார்களும் ஒரு கமிட்டியாகக் கூடியதுமன்றி, சுமார் 23 மாணவர்கள் மேற்படிப் பேட்டைக்கு வாலண்டியர்களாக வந்தார்கள்.

——— (6-10-1906)

## தீபாவளி பணச் சேகரிப்பு

இதன் சம்பந்தமாகச் சென்னையிலே அனேக மாய் நாள் தவறாமல் சபைகள் நடத்தப்பட்டு வருகின்றன. செவ்வாய்க்கிழமை மாலை ஆண்டர் ஸன் ஹாலிலே நடந்த மீட்டிங்கில்கூட அனேக புது வாலண்டியர்கள் வந்து சேர்ந்தார்கள். தமிழ், தெலுங்கு, கன்னடம், இங்கிலீஷ் என்ற பாஷைக ளிலே நோடீஸ் கொடுக்கப்பட்டன. இன்னும் நோடீஸ்கள் வேண்டுவோர்கள் இந்த ஆபீஸில் வந்து கேட்டால் கொடுக்கப்படும். மாணாக்கர்கள் மிகுந்த உற்சாகம் கொண்டவர்களாகவே இருக் கிறார்கள். வயது சென்ற மனிதர்களிலும் எத்தனையோ பேர் வாலண்டியர்களாக இருக்க உடன்பட்டிருக்கிறார்கள்.

சுதேசிய முயற்சியிலே மிகுந்த சிரத்தை பாராட்டி வரும் வித்யாநந்த ஸ்வாமிகளிடம் நாம் மிகுந்த நன்றி பாராட்டுகிறோம். ஆனால் சென்னை நகரத்தில் மட்டும் இவர் இருந்து முயற்சி

பண்ணுவதில் ஜாஸ்தியான பலன் கிடைத்துவிட மாட்டாது. இம் மாகாணத்திலுள்ள ஒவ்வொரு ஊரிலும் ஒவ்வொரு கிராமத்திலும் இருக்கும் நமது சுதேசீய நண்பர்களும் சேர்ந்து தம்மால் இயன்ற அளவு பாடுபட்டு நமக்குத் துணை புரிந்தால்தான் நமது பெரு நோக்கம் கைகூடும்.

—— (6-10-1906)

## சென்னையில் சுதேசீய நிதி வாலண்டியர்கள்

தீபாவளி யன்று சுதேசீய நிதிக்குப் பொருள் சேகரிக்க உடன்பட்டிருக்கிற வாலண்டியர்களின் பொதுக் கூட்டம் ஒன்று ஆண்டர்சன் ஹாலில் செவ்வாய்க்கிழமை மாலை 5.30 மணிக்குக்கூடிற்று. அப்போது இன்னார் இன்ன வேலை செய்வதென நிச்சயம் செய்யப்பட்டதோடு சுதேசீய நிதி வசூல் நன்றாய் நடப்பதற்குள்ள வழிகள் யோசிக்கப் பட்டது.

—— (6-10-1906)

## நாஷனல் பண்ட் என்கிற சுதேசீய நிதியின் நோக்கங்கள்

**20,000 ரூபாய் தேவை - தீபாவளிப் பண்டிகை தினம் வீடுவீடாய்த் தண்டல் செய்யப்படும்**

நம் தேசத்தில் நெசவுத்தொழில் முதலிய அநேகவிதத் தொழில்கள் இப்போது சீமைச் சரக்கு

களின் போட்டியால் அழிந்து போய்க் கொண்டு வருகிறபடியால், தொழிலாளிகளும் கூலி வேலை செய்வோரும் பிழைப்பில்லாமல் கஷ்டப்படுகிறார்கள். இப்படி அழிந்து போகும் தொழில்களை முன்னுக்குக் கொண்டுவந்து, ஏழைகளுக்குப் பிழைப்புண்டாக்கவும், கண்ணாடிசாமான், ஸோப், மெழுகுவர்த்தி, தீப்பெட்டி முதலிய சாமான்கள் இப்போது நம் தேசத்தில் செய்யப்படாமல் அன்னிய தேசங்களிலிருந்து வருகிறபடியால், அந்தச் சாமான்களை நம் தேசத்திலேயே செய்யப்படும்படியாய் நம் பிள்ளைகளைச் செலவுக்குக் கொடுத்து ஜப்பான் முதலிய அன்னிய தேசங்களுக்கனுப்பி, அங்கே அவர்களை அந்தத் தொழில்களைக் கற்றுக் கொள்ளும்படி செய்து, அவர்கள் திரும்பி வந்ததும், நம்மூரில் அவைகளைச் செய்யும்படியாக உதவி செய்யவும் இந்தநிதி ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது.

இந்த நிதி போனவருஷமே ஸ்தாபிக்கப்பட்டு இதுவரையில் செலவுபோக 6,000 ரூபாய் பாங்கிபி லிருக்கின்றது. நோக்கங்கள் பெரியவைகளாயிருக்கிறபடியால், ஆறாயிரமல்ல ஆறு லக்ஷமிருந்தாலும் வேண்டும். இந்த வருஷம் 20,000 ரூபாயாவது வசூலாக வேண்டும். இந்த நிதியை என்ன விதமாய் வசூல் செய்வதாக யோசிக்கப்பட்டிருக்கிறதென்றால்:—

வருஷா வருஷம் தீபாவளிப் பண்டிகையன்று சென்னையிலும் வெளி ஜில்லாக்களிலுள்ள ஊர்

களிலும் தக்க மனுஷரை நியமித்து வீடுவீடாய்ப் போய் யாசகம் கேட்கப்படும். மற்றபடி அப்போதப் போது அவரவர் வீட்டில் சுபசோபனாதி சமயங்களில் இந்த நிதியின் பொருட்டு சௌகரிய மானபடி சம்பாவனைகள் கேட்கப்படும்.

வருகிற தீபாவளி யன்றைக்கும் மேற்கண்ட படி வசூல்கள் செய்யப்படும். தேசாபிமானிகளும், தருமவான்களும் உதவி செய்ய வேண்டுமென்று பிரார்த்திக்கிறோம்.

இந்த நிதியானது சரியானபடி செலவு செய்யப்படுவதற்காகத் தக்க பந்தோபஸ்துகள் செய்யப்பட்டிருக்கின்றன. ஹைகோர்ட் வக்கீல் மிஸ்டர் வி. கிருஷ்ணசாமி அய்யரும், ஆனரெபில் நவாப் ஸயத் மகமத் பகதூரும் இந்த நிதிக்கு டிரஸ்டிகள். திவான் பகதூர் கே. கிஷ்ணசாமி ராவ் பிரெசிடெண்ட்; திவான் பகதூர் பி. ராஜரத்தின முதலியார் வைஸ் பிரெசிடெண்ட். இவர்களனுமதி யின்றி ஒரு பைசாவாகிலும் செலவு செய்யப்பட மாட்டாது.

கனவான்கள் இந்த நிதிக்கு உதவிசெய்து, பட்டினியாலும் பிணியாலும் வருந்தும் ஏழைகளைக் காப்பாற்றும் பெரும் புண்ணியத்தைப் பெறும்படி பிரார்த்திக்கிறோம்.

— ஜி. சுப்பிரமணிய அய்யர்
டி. வி. அனுமந்த ராவ்
ஆனரரி செக்ரடெரிகள்

20-9-1906.

(13-10-1906)

## சுதேசீய நிதி

சென்னை நகரத்திலே சுதேசீய நிதி வசூல் அனேகமாக முடிந்துவிட்டது. இன்னும் மொத்த வசூல் இவ்வளவாயிற் றென்பது பிரசுரிக்கப்பட வில்லை. ஆனால், சுமார் 5,000 ரூபாய்க்கு மேல் 6,000 ரூபாய்க்குள்ளாக இருக்கு மென்று தோன்று கிறது. மாணாக்கர்கள் இந்த விஷயத்தில் மிகுந்த சிரத்தை யெடுத்துக் கொண்டார்கள். ஸ்ரீ. ஜி. சுப்பிரமணிய அய்யரும் மிகுந்த சிரமப்பட்டார். "வந்தே மாதர" ஊர்கோலங்கள் நடத்தியும் பொது ஜனங்களின் முன்பு ஓயாமல் உபந்நியா சங்கள் செய்தும் இவர் பட்ட பாடு கொஞ்சமில்லை. ஆனால், இன்னும் அனேக பெரிய வக்கீல்களும் மற்றுமுள்ள பெரிய மனிதர்களும் வீட்டுக் கட்டிலை விட்டு வெளியேறாமல் அசிரத்தையாக இருந்து விட்டபடியால் இந்த வருஷ வசூல் இத்தனை குறைவாகப் போய்விட்டது. முன்பின்னறியாமல் அயலூர்களிலிருந்து படிக்க வந்திருக்கும் மாணாக் கர்கள் சிரமப்பட்டு என்ன பிரயோஜனமிருக்கிறது? இது நிற்க.

சுதேச நிதிக்குப் பெருந்தொகைகள் கொடுத் தோர்கள் மிக சிலரே யாவர். ஸ்ரீ. வி. கிருஷ்ணசாமி அய்யர் 150 ரூபாய் கொடுத்தார். ரங்கூனிலிருந்து இங்கே வந்திருக்கும் ராவ் பகதூர் மதுரைப் பிள்ளை 100 ரூபாய் கொடுத்தார். இன்னும் சில பேர் கொடுத்திருக்கலாம். அவர்கள் பெயரெல்லாம்

வெளியாகவில்லை. நாட்டுக்கோட்டைச் செட்டிகளிலே 20 ரூபாய்க்கு மேல் எவரும் கொடுக்கவில்லை. குஜராத்தி பேட்டை சவுகார்களிலே சிலர் தலைக்கு 10 ரூபாய் வீதம் கொடுத்தார்கள். லாட் கோவிந்த தாஸ் முதலிய அனேகர் ஏதோ தமது ஜாதிக்குள்ளேயே இருக்கும் மனஸ்தாபங்கள் காரணமாகச் சுதேசீய நிதிக்குப் பணங்கொடாமல் நின்றுவிட்டது. வெகு வேடிக்கையாக இருக்கிறது. இவ் விஷயமான விவரங்கள் அடுத்த முறை பிரசுரிக்கப்படும்.

—— (20-10-1906)

## வானமாமலை மடத்து ஜீயர் ஸ்வாமிகள்

வானமாமலை மடத்து ஜீயர் ஸ்வாமிகள் இப்போது சென்னைக்கு எழுந்தருளியிருக்கின்றார் இம் மஹான் சென்னை சுதேசீய நிதியை ஆசீர்வதித்து அதற்கு 25 ரூபாய் கொடுத்திருப்பதுடன், இனி வருஷந்தோறும் தவறாமல் இன்னுமதிகமாக ரூபாய் கொடுத்துவிடுவதாக வாக்களித்திருக்கிறார் பெங்காளத்துப் பஞ்சநிதிக்கும் ஸ்வாமிகள் உதவி செய்வதாக எண்ணியிருக்கின்றார். மஹா தபஸ்வியாகிய இவர் ஈசுவர பக்திக்கு அடுத்த தகுதியிலே சுதேசபக்தியை வைத்திருப்பது நம்மோருக்கெல்லாம் பெரும் பாக்கியமாகும். ஞானத்தினாலே முதுமை பெற்ற போதிலும், வயதளவில்

வாலிபராகிய ஜீயர் ஸ்வாமிகள் நெடுங்காலம் மற்ற மடாதிபர்களுக்கும் குருமார்களுக்கும் தக்க முன்மாதிரியாக விளங்கியிருந்து நமது தாய் நாட்டின் நன்மையை வளர்க்கச் செய்ய வேண்டு மென்று இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(20-10-1906)

---

## சுதேசீய ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி

தூத்துக்குடிக்கும் கொழும்புக்கு மிடையே ஸ்டீம ரோட்டுதற்காக ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் மேற்படி சுதேசீய கம்பெனி 16-ம் தேதியன்று ரெஜிஸ்டர் செய்யப்பட்டது. பங்கொன்றுக்கு 25 ரூபாய் வீதம் 40,000 பங்குகள் சேர்ந்து, 2 லக்ஷம் ரூபாய் முதலுடன் இந்தக் கம்பெனி ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது.

பங்காளிகளனைவரும் ஆசியா கண்டத்தவர்களாகவே இருக்கவேண்டுமல்லாது, ஐரோப்பியர்களிடமிருந்து பங்குகள் பெற்றுக் கொள்ளப்பட மாட்டா.

இந்தக் கம்பெனியின் பிரெஸிடெண்ட் மிஸ்டர். பாண்டித்துரைத்தேவர் (பாலவனத்தம் ஜமீந்தார்) மெஸர்ஸ் ஹாஜி பகீர்மகமது சேட் கம்பெனியாரே செக்ரடெரிகள். அஸிஸ்டெண்ட் செக்ரிடெரியாக தூத்துக்குடி வக்கீல் மிஸ்டர் சிதம்பரம் பிள்ளை

நியமிக்கப்பட்டிருக்கிறார். தூத்துக்குடி நாஷனல் பாங்கியாரே இந்தக் கம்பெனியின் பொக்கிஷதாராவார்கள். இவர்களின் ஆபீஸ் தூத்துக்குடி பெரிய காட்டன் ரோட் 85-ம் இலக்கத்தில் இருக்கிறது.

டைரக்டர்களிலே ஒரு கோடீசுரப் பிரபுவும், ஒரு ஜமீந்தாரும், மதிப்புக்கொண்ட 13 பாங்கர்களும் வர்த்தகர்களுமிருக்கிறார்கள். பங்குகளின் பொருட்டு அப்ளிகேஷன்கள் வந்து குவிந்த வண்ணமாயிருக்கின்றனவென்பதறிந்து சந்தோஷமடைகிறோம்.

(20-10-1906)

---

## பள்ளடத்தில் சுதேசீயம்

மற்றப் பல இடங்களில் தீபாவளிப் பண்டிகையன்று சுதேசீய நிதிக்காக வீடுவீடாய்ப் பணம் வசூல் செய்யப்படுவதுபோல, பள்ளடத்திலும் வசூல் செய்யப்பட்டது. தீபாவளியன்று பெரும் பாகம் வசூலாகிவிட்டது. இன்னும் சில இடங்களில் பாக்கியிருக்கின்றது. மிஸ்டர் குமரப்ப செட்டியாரும் மிஸ்டர் சீதாராமய்யரும் இந்த விஷயத்தில் மிகுந்த சிரத்தை வகித்து வேலை செய்கிறார்கள். பள்ளடத்தில் தற்சமயம் கலெக்டர் முகாம் செய்திருக்கிறார். அதையும் பார்க்காமல்

இந்த இரண்டு கனவான்களும் தேச நன்மைக் காகப் பாடுபடுவது மிகவும் மெச்சத்தக்கது.

(20-10-1906)

—

## பெங்காளத்திலே தேசத் திருநாள்

அக்டோபர் மாதம் 16-ம் தேதி கல்கத்தாவிலேயும் பெங்காளத்திலுள்ள பலவிடங்களிலேயும் சுதேசப் பெருந் திருநாளாகக் கொண்டாடப்பெற்றது. சென்றவருஷம் அக்டோபர் மாதம்10-ம் தேதி பெங்காள மாகாணம் துண்டிக்கப் பெற்றபோது அந்தத் துண்டிப்பை ஜனங்கள் அங்கீகாரம் செய்ய மறுத்து தேச ஐக்கியத்தை உணர்த்தும் பொருட்டாக இந்த நாள் கொண்டாடப்பெற்றது. ஆனால் பெங்காளிகள் எப்போதுமே பரம்பரையாகக் கொண்டாடி வருகின்ற ரக்ஷாபந்தன நாளும் அந்த நாளுடன் ஒன்றி வந்து சேர்ந்து விட்டபடியால் மேற்படி கொண்டாட்டங்கள் வெகு சிறப்பாக நடைபெற்றன. மாகாணத் துண்டிப்பு நாள் துக்க நாளாகவே கருதப்பட்டபோதிலும் ரக்ஷாபந்தன நாள் ஐக்கிய முணர்த்துகின்ற சோபனத் தினமாகக் கருதப்படுகிறது. அன்று மித்திரர்கள் ஒருவருக் கொருவர் சந்தித்துக் கைகளிலே மஞ்சட் கயிறு கட்டிக் கொண்டு நேசம் பாராட்டுவதுண்டு. ஆனால், இதுவரை எப்போதும் இல்லாதவாறு சென்ற வருஷம் முதலாக

பெங்காளத்திலும் பிற இடங்களிலும் புதுமையான ஐக்கிய உணர்ச்சி பிறந்து, சுதேசீயம் தளிர்த்து வருகின்றபடியால் இவ் வருஷம் கல்கத்தாவில் அத் திருநாள் உண்மையான பக்தியுடன் வெகு விமரிசையாக நடத்தப்பெற்றது. மற்ற மாகாணங்களில் உள்ளோர் வெளிச் செய்கைகளால் ஒன்றும் உணர்த்தாவிட்டாலும், மனதளவில் பெங்காளத்தாருடன் மிகுந்த ஒற்றுமை யுணர்ச்சி கொண்டிருப்பார்களென்பதில் சந்தேகமில்லை.

அக்டோபர் மாதம் 16-ம் தேதியே இந்தியா புதிதாக ஜனனம் புரிந்த திருநாள். முற்காலங்களிலெல்லாம் இந்திய ஜனங்களுக்குள்ளே சிற்சில வேறுபாடுகள் இருந்தன. இனி இந்தியாவுக்குள் ஒருமை ஏற்பட்டுவிட்டது.

இந்தியா ஒரே நாடு. இந்தியர்கள் ஒரே ஜாதியார். இதைக் குறிப்பிடும் திருநாள் நமக்கெல்லாம் உயிர்போன்ற இனிமை யுடையதாகும். அடுத்த வருஷம் முதல் மேற்படி திருநாளைச் சென்னையிலும் கொண்டாடுதற்குரிய முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன.

அமெரிகா வாசிகள் ஜூலை 4-ம் தேதியைச் சுயாதீனத் திருநாளாகக் கொண்டாடுகிறார்கள். இந்தியாவிலுள்ள நாம் சுயாதீனத்திற்கு மூலாதாரமாகிய ஐக்கியத்தைக் குறிப்பிடும் பொருட்டு மேற்படி திருநாளை வழங்க நிச்சயித்திருக்கின்றோம். பெங்காளத்தார் அன்றைய தினம் கங்காஸ்நாநம்

செய்துவிட்டு, அதிக ஆசாரம் எடுத்துக்கொள்ளாமல் பாதி உபவாஸமாக இருந்து விடுகின்றார்கள். சந்தோஷ தினத்தன்று பட்டினியிருக்க வேண்டிய அவசியம் என்ன ஏற்பட்டதென்று சிலர் சந்தேக முறலாம். நமது சந்தோஷம் ஆத்ம சம்பந்த மானது. ஆத்ம சம்பந்தமான சந்தோஷமும் இந்திரிய சம்பந்தமான சந்தோஷமும் ஒன்றுக்கொன்று விரோதமானவை. ஆதலால், ஆத்ம சம்பந்தமான மகிழ்ச்சியென்று நாம் கொண்டிருக்கும் மேற்படி திருநாளில் இந்திரிய சம்பந்தமான சுகங்களைக் கூடிய வரை நீக்கி வைத்தல் பொருத்த முடையதே யாகும்.

—— (27-10-1906)

## சுதேசீய நிதி

சென்னை மாகாணத்தாரிலே எத்தனையோ குடித்தனங்களெல்லாம் குலைந்து சீர்கெட்டுத் தடுமாறிப்போய் விடும்படியாக ஆர்பத் நாட் கம்பெனி அழிவடைந்ததுடன், நம்மவர்களால் மிகவும் சிரத்தையுடன் சேகரிக்கப்பட்டதாகிய நாஷனல் பண்ட் (சுதேசீய நிதியி)லும் பெரும் பகுதியை வாரிக்கொண்டுபோய் விட்டது.

சென்ற வருஷம் சேகரிக்கப்பட்டதிலே செலவு போக மிச்சமிருந்த 6,000 ரூபாயும், இந்த வருஷம் சேகரிக்கப்பட்ட பணத்திலே சுமார் 2,200 ரூபாயும்

தீர்ந்து போய் விட்டது. இந்த வருஷ வசூலிலே இன்னும் பாக்கி சுமார் 2,000 ரூ-க்கு மேல் 3,000 வரை நாசமடையாமல் இருக்கலாமென்று தோன்று கிறது. திங்கட்கிழமை யன்று இன்ஸால்வென்ட் விண்ணப்பம் கொடுக்கப்போகிற ஆர்பத் நாட் கம்பெனியார் சனிக்கிழமை யன்று சுதேசீய நிதி பணத்திலே 2,200 ரூபாயை வாங்கி வரவு வைத்துக் கொண்ட ஆச்சரியம் நினைக்க நினைக்க ஜாஸ்தி யாகிறது. இனி ரூபாய்க்கு 4 அணாவாகவோ அல்லது அதைக் காட்டிலும் குறைவாகவோ கடனாளிகளுக்கெல்லாம் கவர்ன்மென்ட் காரியஸ் தர் பகுத்துக்கொடுக்கும்போது சுதேசீய நிதிக்கு ஏதேனும் சொற்பத் தொகை தேறக்கூடும். தர்மப் பண மாதலால் கொடுத்த தொகை அவ்வளவையும் ஸர்க்கார் காரியஸ்தரிடம் விண்ணப்பஞ் செய்து, மறுபடி பெற்றுக்கொள்ளலாமென்ற எண்ணத்தின் பேரில் சிற்சில முயற்சிகள் நடந்து வருகின்றன வென்று தெரிகிறது. தொலைந்த தெல்லாம் போக பாக்கி இம்மட்டிருக்கிறதென்பது கூட ஜனங் களுக்குத் தெரிய இடமில்லாமல், நாஷனல் பண்ட் அதிகாரிகள் இந்த வருஷ வசூல் கணக்கை இன்னும் பத்திரிகைகளில் வெளியிடாம லிருப்பதற்கு முகாந் தரங்கள் விளங்கவில்லை. வசூல் முடிந்து சுமார் 2 வாரங்களாகியும் இன்னும் ஏன் கணக்கெண்ணி முடியவில்லையோ அறியோம். காரியதரிசிகளில் ஒருவரும் ஷை நிதிக்கு மூல புருஷரும் ஆகிய ஸ்ரீ ஜி. சுப்பிரமணிய அய்யர் நிதிக்கு ஆரம்பத்திலேயே நேர்ந்த நஷ்டத்தைப் பற்றி மிகவும் வருத்தப்

பட்டுக் கொண்டிருப்பதாக அறிகிறோம். நிதியின் பிரஸிடென்டாகிய திவான் பகதூர் கே. கிருஷ்ண ஸாமி ராவ் ஆர்பத் நாட் விழுந்து விட்டதிலிருந்து தாமே அதிகமான சொந்த நஷ்டமடைந்தவராகி மனங் கொதித்துக்கொண்டிருக்கிறார். "ஐயோ! அரையணாவும் காலணாவுமாகச் சேர்த்த சுதேசீய நிதி நொடிப் பொழுதில் அன்னியரின் வாய்க்கு இரையாகி விட்டதே" என்று ஜி. சுப்பிரமணிய அய்யரவர்கள் பிரலாபித்துக்கொண்டிருக்கிறாராம்.

இனி, நடந்து போனதைப்பற்றி வருந்திப் பயன் யாதிருக்கின்றது? சுதேசீய முயற்சியின் பலத்தைப் பரிசோதனை பண்ண வேண்டியே ஈசன் இந்த விபத்தை அனுப்பியிருக்கிறாரென்று நம்புகிறோம். மேலும் சுதேசீய நிதிப் பணத்தை அன்னிய தேசத்தாரின் கம்பெனியிலே போட்டு வைத்ததற்கு இதற்கு ஒரு தண்டனையாகப் பாவித்துக் கொள்ளலாம். தக்க நாட்டுக்கோட்டைச் செட்டிமாரிடம் ஏன் பணத்தை ஒப்புவித்திருக்கக் கூடாது?

சுதேசீய பாங்க் ஒன்று ஸ்தாபிப்பதற்கு இதுவே சரியான சமயம். இதைப்பற்றி விஸ்தாரமாக அடுத்த தடவை எழுதுகின்றோம்.

இந்த வருஷத்துடன் சுதேசீய நிதி சேர்ப்பதைக் கைவிட்டு விடுவோமானால் அப்பால் நம்மவர்களைப்போல உபயோக மில்லாத

மனிதர்கள் வேறு யாரும் கிடையாது. ஜனங்கள் அதைரியப்பட்டு விடலாகாது. கஷ்ட நிஷ்டூரங் களையெல்லாம் சகித்துக்கொண்டு மீட்டு மீட்டும் முயற்சி புரிந்து காரிய சாதனம் செய்வதே புருஷ லக்ஷணமாகும். ஆனால், எல்லாவற்றிற்கும் சுதேசீய நிதியின் வசூல் கணக்கு சீக்கிரம் பிரசுரமாக வேண்டும்.

(மேற்கண்ட குறிப்பு நாம் எழுதியதற் கப்பால் "பேட்ரியட்" பத்திரிகையிலே இவ் வருஷம் சுதேசீய நிதி இந் நகரத்தில் ரூ 4,088-5-8 என்றும், அதிலே 2,000 ரூபாய் ஆர்பத் நாட் கம்பெனியார் விழுங்கிவிட்டார்கள் என்றும் தெரிகிறது. "சுதேச மித்திரன்" பத்திரி கையிலே "நாஷனல் பண்ட் "சேதத்தைப் பற்றிய பிரஸ்தாபமே யில்லாமலிருக்கின்றது.)

—— (27-10-1906)

## சென்னையிலே தீபாவளிக் கதைகள்

### 1. ஒரு கிறிஸ்தவ உபதேசியின் கதை

சென்னை செம்புதாஸ் தெருவிலே ஒரு கிறிஸ்தவ உபதேச ஸ்திரீ இருக்கிறாள். இவளிடம் வாலிபர்கள் சென்று சுதேசீய நிதிக்குப் பணம் கேட்டார்கள். அவள் கடுகடுத்த முகத்துடன் காசு கிடையாதென்று சொல்லி விட்டாள். வாலிபர்கள் சரியென்று சொல்லி

அப்பாலே நடந்தார்கள். போன வாலிபர்களை மேற்படி உபதேச ஸ்திரீ மறுபடியும் சத்தமிட்டுக் கூப்பிட்டாள். இவர்கள் பணமகப்படப் போகிற தென்றெண்ணித் திரும்பி வந்தார்கள்.

அப்போது அவள் சொன்னாள் :- சகோதரர்களே, சுதேசீயம் மிகவும் கெட்ட உணர்ச்சி. இதற்காகப் பாடுபடாதேயுங்கள் உங்களது மதத்தைச் சீர்திருத்திக் கொள்ளுங்கள். இந்தியாவிலே பிறந்தவராகிய ஏசுநாதரை வழிபடுங்கள் இது தான் நியாயமான சுதேசீயம்'' என்றாள்.

''அப்படியா, அம்மா? ஏசுநாதர் இந்தியாவிலேயா பிறந்தார்? மிகவும் சந்தோஷமாயிற்று. நாங்கள் உபதேசம் கேட்க மற்றொரு சமயம் வருகிறோம். இப்போது வேலையிருக்கிறது'' என்று சொல்லிவிட்டு மாணாக்கர்கள் நடந்து விட்டார்கள்.

——

## ஒரு நாட்டுக்கோட்டைச் செட்டியார்

தரும சிந்தையுள்ள ஒரு செட்டியாரை தாஷனல் பண்டுக்காகச் சிலர் உதவி கேட்கத் தம்மிடம் வந்தபோது சிறிது நேராக வந்தவர்களுடன் பேசிவிட்டு, தம் மனதில் உதவி செய்வதாக நிச்சயம் செய்து கொண்டு, இன்ன தொகை கொடுப்பதென்று நிச்சயமாகாமல் யோசனை

செய்தார். பிறகு 10 ரூபாய், 15 ரூபாய், 20 ரூபாய் இந்த மூன்று தொகைகளையும் மூன்று சீட்டுகளிலெழுதி அவைகளைக் குலுக்கிப் போடச் சொன்னார். பக்கத்திலிருந்தவர் அப்படியே செய்ய, 20 ரூபாய்ச் சீட்டு விழுந்தது. உடனே 20 ரூபாயைப் பெட்டியி லிருந்து கொடுத்து புஸ்தகத்தில் கையெழுத்து செய்தார். இப்படிப் பட்ட விஷயத்தில் தம் மனசு தமக்கே தெரியாமல் சீட்டுப் போட வேண்டியதாயிருந்தது ஆச்சரியமே!

—— (27-10-1906)

## சுதேசீய நிதியும் வெளிஜில்லா ஸ்தலங்களும்

சிற்சில இடங்களில் அங்கு நாஷனல் பண்டுக்காக வசூலாகும் தொகையை அங்கேயே ஏதேனும் உபயோகமான விஷயத்துக்கு உபயோகப்படுத்த வேண்டிய எண்ணத்துடன் அதை யங்கேயே வைத்துக் கொள்ளலா மென்று யோசனையி லிருப்பதாகத் தெரிகிறது. இது சரியான யோசனை யல்ல. அங்கங்கே வசூலாகும் தொகையானது சொற்பமாகவே யிருக்குமாகையால் அதைக் கொண்டு எந்தப்பெருங்காரியமும் செய்தல் சாத்திய மாகாது. அப்படியன்றி வெளி ஜில்லாக்களில் குக்கிராமங்களில் வசூலாகும் தொகைகள் கூட சென்னை நிதிக்கு அனுப்பிக்கப்படுமானால் பெரும் நிதியொன்று ஏற்பட்டுப்பெருங்காரியம் செய்யலாம்.

சென்னையில் பெருங்காரியம் செய்யப்படு மாயின் அது ராஜதானி ஜனங்கள் எல்லோர்க்கும் பலன் தருவதாகும். உதாரணமாக, சென்னையில். ஒரு தொழிற்கல்விச்சாலை ஸ்தாபிக்கும் பட்சத்தில், ராஜதானியில் எவ்விடத்திலிருந்தும் பிள்ளைகள் வந்து வாசிக்கலாம். அல்லது சிறுவர்களை ஜப்பான் முதலிய அன்னிய தேசங்களுக் கனுப்புவதா யிருந்தால் எந்த ஜில்லாவில் வசிக்கும் சிறுவ னானாலும் அவனை யனுப்பலாம். அங்கங்கு வசூ லாகும் பணம் அங்கங்கே தங்கிப்போகும் பட்சத்தில் இவ்விதக் காரியமொன்றும் சாயாது. நம்முடைய ஒற்றுமைக்கும் சாதகமாகாது. பிரிவுபடும் முறைமைக்கே இந்த யோசனை யுற்றதாகும்.

—— (27-10-1906)

## சுதேசிக் கப்பல்

ஒரு தகுதியுள்ள நாட்டுக்கோட்டைச் செட்டி யார் எழுதுகின்றார்:-

யாவரும் தென்னிந்தியாவில் தேசாபி- மானமும், அன்னிய தேசம் சென்று ஜீவனம் செய்யும் வல்லமையும் இல்லை என்று சொல்லு கிறார்கள். ஆனால், இப்படி சொல்லுகிறது சரியாகத் தோன்றுகிறதில்லை. நம்முடைய தேசத்திலிருக்கும் வர்த்தகர்களான நாட்டுக் கோட்டைச்செட்டிகள் சிலர்சேர்ந்து ஏற்றுமதி,

இறக்குமதிகளுக்குச் சுலபமாய் இருக்கும் பொருட்டும் வியாபாரம் நன்றாக நடக்கும் பொருட்டும் ஓர் சுவதேசிக் கப்பல் வைத்திருக்கிறார்கள். இதனால் நம்முடைய தேச ஜனங்கள் எவ்வளவோ நன்மையை அடைகிறார்கள். ஜனங்கள் அன்னிய தேசம் செல்வதற்கும் சார்ஜ் (charge) ரொம்பவும் இல்லாமல் சௌக்கியமாய் இருக்கிறது. இதுவே மாதிரியாக நம்முடைய தேசத்து நாட்டுக்கோட்டைச் செட்டியார்களும், இன்னும் இதர வர்த்தகர்களும் சேர்ந்து சுவதேசப் பொருள்களையே கொண்டு வியாபாரம் செய்வார்கள் என்று நம்புகிறோம்.

இக்காலத்தில் நம்முடைய தேசத்தின் நற்கதி வர்த்தகர்கள் கைகளில்தான் இருக்கிறது. ஆகையால் நம்முடைய தேச வர்த்தகர்கள் யாவரும் ஒன்றுசேர்ந்து, அன்னியர் பொருள்களை விலக்கி வங்காளத்தாரைப் போல, சுதேசப் பொருள்களையே கொண்டு வியாபாரம் செய்து, தேச நன்மையின் பொருட்டு இன்னும் அநேக கப்பல்கள் கட்டி உதவி செய்வார்களென்று நம்புகிறோம்.

(3-11-1906)

## சுதேசி ஸ்டீம் நாவிகேஷன்
## கம்பெனி லிமிடெட்
## தூத்துக்குடி

1882-ம் வருஷத்து இந்தியன் கம்பெனி ஆக்டுப்படி 1906-ம் வருஷம் அக்டோபர் மாதம் 16.ந் தேதியில் ரிஜிஸ்டர் செய்யப் பெற்றது.

### மூலதனம்

கம்பெனியின் மூலதனம் ரூபாய் 10,00,000. இது பங்கு 1க்கு ரூபா 25 வீதம் 40,000 பங்குகளாக இந்தியர், இலங்கையர் முதலிய ஆசியா கண்டத்தாரிடமிருந்து சேர்க்கப்படும்.

### அக்கிராசனர்

பாலவநத்தம் ஜமீந்தாரவர்களும் மதுரைத் தமிழ்ச்சங்க அக்கிராசன ரவர்களுமாகிய ஸ்ரீமான் பொ. பாண்டித் துரைசாமித் தேவர் அவர்கள்

### டைரக்டர்கள்

மெஸர்ஸ் யச். எ. ஆர். ஆஜிபக்கீர் முகமது சேட் அன் சன்ஸ். மிஸ்டர் முகம்மது ஹாசிம் சேட் அவர்கள்

மிஸ்டர் பொ. பாண்டித் துரைசாமித் தேவர் அவர்கள்

மிஸ்டர் சி. வ. நல்லபெருமாள் பிள்ளை அவர்கள்

மிஸ்டர் அ. மு. ம. அருணாசலம் பிள்ளை அவர்கள்

5. மிஸ்டர் சி. ச. வ. கிருஷ்ண பிள்ளை அவர்கள்

6. மிஸ்டர் பி. வெங்கட ராமானுஜுலு நாயுடு அவர்கள்

மிஸ்டர் சி. த. ஆ. ஆறுமுகம் பிள்ளை அவர்கள்

8. மிஸ்டர் அ. ச. வெ. வேலாயுதம் பிள்ளை அவர்கள்

9. மிஸ்டர் வ. அ. ஆ. ஆதி நாராயணன் செட்டியார் அவர்கள்

10. மிஸ்டர் வ. அ. வெ. ச. வெங்கிடாசலம் செட்டியார் அவர்கள்.

மிஸ்டர் ஏ. சி. வ. திருச்சிற்றம்பலம் செட்டியார் அவர்கள்

12. மிஸ்டர் எ.ஆ.ஆ. ஆறுமுகம் செட்டியார் அவர்கள்

13. மிஸ்டர் ச. சு. தெய்வநாயகம் பிள்ளை அவர்கள்

14. மிஸ்டர் மா.வெ. மாயநாடார் அவர்கள்

15. மிஸ்டர் இஸ்மால் ஹாஜி அப்துல் ரகிமான் சேட் அவர்கள்

இவர்களும் 1-வது பொதுச்சபை கூட்டத்தில் (Its ordinary Meeting) தெரிந்தெடுக்கப்படும் 20 மெம்பர்களும்.

### காரியதரிசிகள்

மெஸர்ஸ். யச் ஏ. ஆர். ஹாஜிபக்கீர் முகமது சேட் அன் ஸன்ஸ்-கௌரவ காரியதரிசிகள்

மிஸ்டர் வ.உ. சிதம்பரம் பிள்ளை அவர்கள்- துணைக் காரியதரிசி.

### சட்டாலோசனை யதிபர்கள்

மிஸ்டர் சி. விஜயராகவாசாரியார் அவர்கள் டிஸ்டிரிக்ட் கோர்ட்டு வக்கீல், சேலம்.

ஆனரெபில் மிஸ்டர் கே. ஆர். குருசாமி அய்யரவர்கள் பி. ஏ. பி. எல். ஹைக்கோர்ட்டு வக்கீல், திருநெல்வேலி.

ஆனரெபில் மிஸ்டர் யம். கிருஷ்ணன் நாயர் அவர்கள் பி.ஏ.பி.எல். ஹைக்கோர்ட்டு வக்கீல், கள்ளிக்கோடு.

மிஸ்டர் பி. எல். வெங்கு அய்யரவர்கள் பி. ஏ. பி. எல். டிஸ்டிரிக்ட் கோர்ட்டு வக்கீல், தூத்துக்குடி.

### பொக்கிஷதார்கள்

இந்தியா நாஷனல் பாங்கு, தூத்துக்குடி.

### ரிஜிஸ்டரான ஆபீஸ்

நெ. 85, பெரிய காட்டன் ரோடு, தூத்துக்குடி

### ரேவுகள்

தூத்துக்குடிக்கும் கொழும்புக்கும் கம்பெனியார் தீர்மானிக்கும் மற்ற இடங்களுக்கும் ஸ்திரமாகவும்

சவுகரியமாகவும் ஸ்டீமர்கள் நடைபெறச் செய்து பிரயாணத்தையும் வியாபாரத்தையும் சவுகரியப் படுத்தல்.

இந்தியர்களையும் இலங்கையர்களையும் மற்றும் ஆசியா கண்டத்து ஜாதியார்களையும் கப்பல் நடாத்துந் தொழிலில் பழக்குவித்து அதன் மூலம் வரும் லாபத்தை யடையும்படி செய்தல்.

இந்தியர்களுக்கும் இலங்கையர்களுக்கும் மற்றும் ஆசியா கண்டத்து ஜாதியார்களுக்கும் கப்பல் நடாத்துந் தொழிலையும், கப்பல் நிர்மாணஞ் செய்யும் தொழிலையும் செய்து காட்டிக் கற்பித்தல்.

இந்தியா, இலங்கை மாணவர்க்கும் மற்றும் ஆசியா கண்டத்து மாணவர்க்கும், கப்பலோட்டுந் தொழிலையும், கப்பல் நிர்மாணஞ் செய்யும் தொழிலையும் சாஸ்திர சம்பந்தமாகக் கற்பிக்கும் கலாசாலைகள் ஏற்படுத்தல்.

கப்பல் நடாத்துந் தொழிலிலும் வியாபார முறையிலும் இந்தியர்கள், இலங்கையர்கள் முதலிய ஆசியா கண்ட வாசிகளுக்குள் ஐக்கிய பாவனையை யுண்டுபண்ணி ஒற்றுமையாக வுழைக்கச் செய்தல்.

பற்பல வியாபார ஸ்தலங்களிலுள்ள வியா பாரங்கட்கடுத்த கொள்வன, கொடுப்பன தெரிந்து

கொள்வதற்காக இந்தியா, இலங்கை முதலிய ஆசியா கண்டத் தேசத்தார்களை ஏஜெண்டுகளாக நியமித்தல்.

ஸ்டீமர்கள், ஸ்டீம் லாஞ்சுகள் படவுகள் முதலியன நிர்மாணஞ் செய்வதற்கும், அவை களைச் செப்பனிடுவதற்கும், சுத்தப்படுத்து வதற்கும் துறைகள் ஏற்படுத்தல்.

கம்பெனியார் தீர்மானிக்கும் சுதேசியக் கைத் தொழில்களையும் வியாபாரங்களையும் செய்தல்.

### பங்குகட்கு மனுக்கள்

பங்குகளுக்காக அனுப்பப்படும் மனுக்கள் இதனடியிற் சேர்க்கப்பட்டிருக்கும் மாதிரியில் எழுதிப் பங்கு 1-க்கு ரூபாய் 5 வீதம் சேர்த்து அனுப்பப்பட வேண்டும். பாக்கித் தொகை கம்பெனியார் கேட்குங் காலத்தில் செலுத்தப்பட வேண்டும்.

### டயரக்டராவதற் குரியவர்

10 அல்லது அதற்கு மேற்பட்ட பங்குகளைக் கொண்ட பங்காளிகளில் ஒவ்வொருவரும் டயரக்டராவதற்கு அருகரா வர்

### ஈவுத் தொகை

தூத்துக்குடிக்கும் கொழும்புக்கும் வியாபாரமும் பிரயாணமும் நல்ல அபிவிர்த்தியான நிலைமையி லிருக்கிறது. அதனால் கம்பெனியின் செலவுக்கும்

ரிசர்வ் பண்டுக்கும் வேண்டுவன கழித்துக் குறைந்தது நூற்றுக்கு நூறு வீதம் ஈவுத்தொகை கிடைக்குமென்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

### மிமோரண்டமும் ஆர்ட்டிகிளும்

கம்பெனியின் மிமோரண்டமும் ஆர்ட்டிக்கிள்களும் அடங்கிய புத்தகங்கள், பங்குகளுக்கனுப்பப்படவேண்டும் மனுப்பிரதிகள் முதலியவைகளைத் தூத்துக்குடி கம்பெனி ஆபீசிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். மிமோரண்டமும் ஆர்ட்டிக்கிள்களும் அடங்கிய புத்தகம் 1க்குக் கிரயம் ரூபா 0-8-0.

### கரஸ்பாண்டென்ஸ் வகையரா

சகல கடிதங்களும், பங்குமனுக்களும் மணியார்டர்களும் தூத்துக்குடியிலிருக்கும் கம்பெனியின் செக்ரிட்டெரி அவர்களுக்கு அல்லது அசிஸ்டண்டு செக்ரிட்டெரி அவர்களுக்கு அனுப்பப்பட வேண்டும்.

சுதேசாபிமானமுள்ள இந்தியர்களும் இலங்கையர்களும் மற்றும் ஆசியா கண்டத்துவாசிகளும் சுதேச நன்மை ஒன்றையே கருதி ஏற்படுத்தப் பெற்றிருக்கும் இக் கம்பெனியில் மிகுதியான பங்குகள் எடுத்தும் மற்றும் வேண்டுவன செய்தும் கம்பெனியைச் சீக்கிரம் முன்னுக்குக் கொண்டு வரவேண்டுமெனப் பிரார்த்திக்கலாயிற்று.

பங்கு மனு மசோதா

சுதேசி ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி லிமிடெட்டின் மிஸ்டர் செக்ரிட்டெரி அவர்கள்
தூத்துக்குடி.

ஐயா,

மேற்படி கம்பெனியில் நான்... பங்குகள் எடுத்துக் கொள்வதற்கு அனுமதி கொடுக்கும்படி தங்களை வேண்டிக் கொள்கிறேன். கம்பெனியின் மிமோரண்டத்திலும், ஆர்ட்டிக்கிள்ஸ் ஆவ் அசோஷியேஷனிலும் கண்ட நிபந்தனைகளையும் ஷரத்துகளையும் நான் சம்மதித்து என்னைப் பங்காளியாக ரிஜிஸ்டர் செய்து கொள்ள இதன் மூலமாகத் தங்களுக்கு அதிகாரம் கொடுத்திருக்கிறேன்.

தங்கள் உண்மையுள்ள

கையொப்பம்
பெயர்
(பூரா) விலாசம்
சாக்ஷி

(3-11-1906)

---

## மறுபடியும் எட்டயபுரம் ஜமீந்தார்!

எட்டயபுரம் ஜமீந்தாரவர்களைப் பற்றி நாம் ஓயாமல் எழுதி, நேயர்களைச் சலிப்புறுத்தும்

பொருட்டு மன்னிப்புக் கேட்டுக் கொள்ளுகிறோம்! ஜமீந்தாரவர்களும் நம்மிடம் மனஸ்தாபம் கொள்ள லாகாது. சுதேசீய முயற்சியிலே அளவற்ற ஆவல் கொண்ட நாம் நமது நாட்டுப் பிரபு குல திலகர்க ளாகிய எட்டயபுரம் ஜமீந்தாரைப் போன்றவர்கள் மேற்படி முயற்சியிலே சிரத்தைக் குறைவாக இருப்பதைப் பார்க்கும்போது நமது மனம் மிகவும் புண்படுகின்றது. ஜமீந்தாரவர்கள் திருந்திவிட்டா ரென்று சென்ற தடவை சந்தோஷமாக எழுதி யிருந்தோம். இப்போது மேற்படி ஊரிலிருந்து மறு படியும் பின்வருமாறு கடிதம் வந்திருப்பதை விசனத்துடன் பிரசுரிக்கிறோம் :

''தற்காலம் இவ்வூரில் சுதேசீய நிதி விஷய மாய் சுமார் ரூபா 150 வரை வசூல் செய்து இருக்கிறோம். 150 அல்ல ரூபா 5,000 வரை வசூலாக விருந்தது இவ்வூர் உத்தியோ கஸ்தனால் நிறுத்தப்பட்டுப் போய்விட்டது. ம-ா-ா-ஸ்ரீ குமரரெட்டு நாயக்கர் அவர்கள் இந் நிதியின் நோக்கத்தையும் அவசியத் தையும் நன்றா யுணர்ந்து தானே நேரில் வீடு வீடாய்ப் போய் வீடு 1க்கு அணா 2-க்குக் குறையாமல் வசூலித்து ஒரு நாளில் சுமார் ரூபா 100 வரை சேர்த்திருந்தார். இதற்குள் மேற்படி உத்தியோகஸ்தர் ஜமீந்தாரிடம் போய் ''இவ் விஷயம் கவர்ன்மெண்டுக்கு விரோதமானது. சுதேசீய முயற்சி, வந்தே மாதரக் கூட்டம், புல்லர் போன்றோரைத்

தொலைத்தல் ஆகிய இவ் விஷயங்களில் தலையிடுவோரைக் கவர்ன்மெண்டார் ஒரு நாளும் மறக்காமல் தங்கள் மனதினுள் ளேயே விரோதத்தை வைத்துக் கொண்டு வேறே எந்த விதமாயாவது இடையூறு செய் யாமல் விடார். ஆகையால், உடனே இவ் வந்தேமாதரச் சத்தத்தையும், வசூலையும் நிறுத்திவிட வேண்டும்'' என்று ரகசியோப தேசம் செய்துவிட்டார் ஜமீந்தார் சொற்படி நாயக்கரும் இதில் சம்பந்தப்பட இணங்கு கின்றிலர். ஆனால் நாயக்கர் மனதுக்குள் நல் லெண்ணமும் ஜமீந்தாருக்காகத் தாக்ஷிணியமு முடையவரா யிருக்கின்றார்.

இம்முயற்சி இத்தனை தூரமாவது நடை பெற்றது நம்களம் சிவஞான சுவாமியால் கந்த பிள்ளை, ராக்கப்பப் பிள்ளை, கடை சுப்பு பிள்ளை, குமரரெட்டு நாய்க்கர் முதலியோரை வசூல் சபைக்குச் செக்ரிடெரிகளாக நியமித்ததி னால் தான். ஜெமீந்தார்...... ஹெட்மாஸ்டர் இவர்களைக்கூட நல்ல வழிக்குக் கொண்டு வந்தும் மேற்கூறப்பட்ட ஒரு பாவியால் எல்லாம் கெட்டதே என்று வருத்தப்படாத மனிதர் இவ்வூரில் ஒருவருமே யில்லை. இந்த ஜமீனைச் சேர்ந்த 500 கிராமங்களிலும் பரவக் கூடிய சுதேசியத்துக்குப் பெரிய சத்துரு ஆகையால் தாங்கள் தயவுசெய்து இந்த உத்தியோகஸ்தருக்கு மிஸ்டர் வெங்கோபா

சார்க்குக் கொடுத்ததுபோல் குந்த கொரடாப் பூசை "இந்தியா" மூலமாகக் கொடுக்க வேண்டும். ரகசியமாய் ஜமீந்தாரிடம் சொன்ன விஷயமானதால் இன்னும் பகிரங்கமா யெழுத முடியவில்லை."

மேலே கடிதத்தில் கூறப்பட்ட உத்தியோகஸ்தரிடம் நாம் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறோம். "சகோதரா! நீர் சுய நலத்தின் பொருட்டாக நற்காரியங்களைத் தடுப்பது தர்மமில்லை. ஜமீந்தாரைப் போலச் செல்வமும் பதவியும் கொண்ட மனிதர்கள் சுதேசீயத்தில் தலையிடுவார்களானால் நாடெல்லாம் நலமடையும். இதை நீர் கவனிக்காமல் ஏதோ குறுகின ஆலோசனையுடன் வேலை செய்வது தகுமா? உம்மைப்பற்றி நமது கடிதக்காரர் எழுதியிருப்பது வாஸ்தவமோ பொய்யோ நாம் அறியமாட்டோம். அவர் எழுதியிருப்பது மெய்யானால் உம்மையும் உம் போன்றோரையும் ஜமீந்தாரவர்கள் கூடிய சீக்கிரம் வேலையினின்று நீக்கிவிட வேண்டுமென்று தெய்வத்தைக் கோருகின்றோம்.

—— (3-11-1906)

## நாஷனல் பண்டு அல்லது சுதேசீய நிதி

அர்பத்னட் கம்பெனி முழுகிப் போனதால் நாஷனல் பண்டுக்கு நேரிட்ட நஷ்டம் ரூபா 7,728-15-0. இதில் ரூபா 5,538-15-0 போன வருஷத்து வசூலைச் சேர்ந்தது. பாக்கி 2,200

ரூபாய் இந்த வருஷத்துத் தீபாவளி வசூல். இன்று வரையில் கைமிருப்பு பணம் 3,000. இன்னும் வெளி ஜில்லாக்களிலிருந்து வர வேண்டியது இருக்கின்றது. இந்தப் பணத்தை இனி கவர்ன்மெண்ட் பத்திரங்கள் வாங்கி வைப்பதாகவும், சில தொகை மட்டும் மதராஸ் பாங்கியில் கரன்ட் டிபாஸிட்டாகப் போட்டு வைப்பதாகவும் தீர்மானம் செய்யப்பட்டிருப்பதாக அறிகிறோம்.

---

## சுதேசீய பாங்க்

தீபாவளியன்று சுதேசீய பணவசூல் நடந்த காலமுதலாக இந்நகரத்திலே இதுவரை சமையலறைக்கு வெளியே எந்த விஷயமும் தெரியாத மாதர்கள்கூடப் பொதுநல சம்பந்தமான காரியங்களைப் பற்றிப் பேசத் தொடங்கி விட்டார்கள். அக்கிரஹார மத்திகளிலே சில ஜனத்தலைவர்கள் செய்த உபந்நியாசங்கள் மூலமாகவும், நோட்டீஸ்கள் மூலமாகவும் தேசநலம் பற்றிய பிரஸ்தாபங்கள் சமையல் வீடுகளுக்குள் ளெல்லாம் புகுந்து விட்டன. அப்பால் ஆர்பத்நாட் கம்பெனி விழுந்தது. இதனால் பல குடும்பங்கள் பாழாகி விட்டபடியால், இதைப்பற்றி விவகாரம் செய்யாத பெண்கள் கூட்டமே கிடையாது. அன்னிய பாங்கிகளில் பணம் போடுவது பெருந்தீமை யென்ற விஷயம் ஸ்திரீகள் மனதிலேகூட அழுந்தி விட்டது.

ஒரு பிராமண ஸ்திரீசுதேசீய நிதி ஆர்பத்நாட் கம்பெனியில் சேதமாய் விட்டதைப் பற்றிப் பேசும் போது பின்வருமாறு கூறினார்:-

''இந்நாட்டிலே நடக்கும் அன்னிய வர்த்தக முயற்சிகளைச் சீர்குலைத்து, அவற்றிற்கு விரோதமாகச் சுதேசீயத்தை நிலைநிறுத்த வேண்டுமென்ற பகிரங்கமான நோக்கத்துடன் ஸ்தாபிக்கப்பட்டதாகிய நாஷனல் பண்ட் பணத்தை இந்தப் பாழான சுதேசிகள் வெள்ளைக்காரன் பாங்கிலே கொண்டு போடுவது என்ன புத்திசாலித்தனம்! வெள்ளைக்காரன் அந்தப் பணத்தைத் தனது வர்த்தக அபிவிருத்தியின் பொருட்டாகவே பயன்படுத்திக் கொள்ளுவா னல்லவா? அப்போது இவர்களின் சுதேசீய நோக்கம் ஏதாகி முடிந்தது?''

இந்த ஆக்ஷேபத்திற்கு மறுமொழி நம்மால் யோசிக்க முடியவில்லை. ஒரு வேளை நாஷனல் பண்ட் அதிகாரிகளால் யோசிக்க முடியுமென்று நம்புகிறோம். இது நிற்க.

* * *

சுதேசீய பாங்கிகள் தேச முழுதும் மூலைக்கு மூலை கிளம்புவது இந்தச் சமயத்தில் அத்தியாவசியமாகும். இதைப் பற்றி முன்னமே பிரஸ்தாபம் செய்திருந்தோம். சுதேசீய பாங்கிகளிருந்தால் நமக்கு அளவிறந்த லாபமுண்டு. நம்மவர்களுக்கு அதனால் வர்த்தக அனுபவமும்

உலகப் பயிற்சியும் மிகுதியாக ஏற்படும். பிரிடிஷ் பாங்க் தலைவர்கள் ஐரோப்பிய காப்பித் தோட்ட முதலாளிகள் முதலியவர்களுக்குப் பண உதவி செய்து இந்நாட்டிலே அன்னியரின் முயற்சி களைப் பிரபலப்படுத்துவது போல, நமது பாங்க் தலைவர்கள் நம்மவர்களுக்குப் பண உதவி செய்து பல தொழில்களிலே பிரபலப்படுத்த இடமுண் டாகும். அதுவுமன்றிச் சுதேச பாங்க் தலைவர் கள் இன்ஸால்வென்டாய்ப் போன போதிலும். சில ஜனங்கள் மட்டும் நஷ்ட மடைவார்களே யல்லாமல் தேசப் பணம் தேசத்திலேயே யிருக்குமே யன்றி வெளியேற மாட்டாது. அந்நிய பாங்கிகள் முழுகிப் போகுமானால் அதன் பயன் யாதெனில், நம்மவர்கள் ஏழ்மைப்பட்டு அன்னிய தேசத்தார் செல்வ மிகுதி பெறுகிறார்கள்.

மேலும், சுதேசிய முயற்சிகள் தலையெடுக்கத் தொடங்கி அன்னிய வர்த்தக முயற்சிகள் நஷ்ட மடையத் தொடங்குமானால் அன்னிய தேச பாங்க் தலைவர்கள் பொறாமை கொண்டு நம்மவர் களுக்குப் பணம் முன் கொடுத்துப் பின் வாங்க மனமில்லாமல் நிறுத்திவிடக் கூடிய காலமேற் படும். அப்போது சுதேசிய பாங்கிகளில்லாது போய் விடுமானால் சுதேசிய முயற்சியே திகைத்துப் போய் விடும்.

பம்பாயிலே சில தினங்களின் முன்புதான் ஸர் பி. எம். மேடா முதலியவர்கள் சேர்ந்து ஒரு

முதல்தரமான சுதேசீய பாங்க் ஸ்தாபித்தார்கள். புதன்கிழமை மாலை வந்த பம்பாய்த் தந்தி யொன்றிலே, அந் நகரத்தில் மற்றுமொரு சுதேசீய பாங்க் "இந்தியன் நாஷனல் பாங்க்" என்ற பெயருடன் சமீபத்தில் ஸ்தாபிக்கப்படப் போகிற தென்று தெரிவிக்கப்படுகிறது இந்தப் பாங்கியின் முதல் பணம் ஒரு கோடி ரூபா. ஆனரபில் ஸ்ரீ விட்டல்தாஸ் என்ற ஹிந்து கனவான் இதற்குப் பிரஸிடெண்டாக இருப்பார் மேற்படி இரண்டு சுதேசீய பாங்கிகளும் நன்கு தழைக்க வேண்டு மென்று திருவுளத்தைப் பிரார்த்தித்துக் கொள்ளு கின்றோம்.

வாய்ப் பேச்சிலே மஹா சதுரர்களாகிய சென்னை ஜனத் தலைவர்கள் இவ் விஷயத்தில் எவ்விதமான முயற்சியு மில்லாமல் குழந்தைகளைப் போலிருக்கிறார்கள்.

(3-11-1906)

---

## திருவாங்கூர் விவசாய வியாபாரக் கம்பெனி

திருவாங்கூர் விவசாய வியாபாரக் கம்பெனி யார் தமது கம்பெனியின் நோக்கம், மூலதனம், வியாபார முறைமை, பங்கு விஷயம் முதலியவை யடங்கிய பத்திரிகை யொன்று நமது பார்வைக்கு அனுப்பி யிருக்கிறார்கள். இக் கம்பெனியின் முக்கிய ஸ்தலம் (ஹெட் குவார்டர்ஸ்) புனலூரில் இருக்கிறது. இதன் நோக்கங்களைக் கவனிக்கு

மிடத்து இக் கம்பெனியார் சொந்த லாபத்துடன் தேசப் பெரு நலத்தையும் கருத்தில் கொண்டவர்க ளாகி இதனைத் தொடங்கினார்க ளென்பது தெளிவாகப் புலப்படுகிறது. நமக்கு வந்திருக்கும் பத்திரிகை முழுதினையும் மற்றொரு முறை பிரசுரம் புரிவோம். பொதுவாகக் கூட்டு வியாபாரம் செய்வதின் அவசியத் தன்மையைப் பற்றி மேற் பத்திரிகையிலே கூறப்படும் பின்வரும் அமிசங்கள் நன்கு கவனிப்பதற்குரியன.

1. உத்தியோகம், வியாபாரம், கைத்தொழில், கிருஷி, கூலி வேலை-இவ்வைந்தும் பெரும்பாகம் அன்னிய நாட்டாரால் 150-வருஷ காலமாகக் கைப்பற்றப்பட்டு, உயிரைவிடச் சிறந்த கோடிக் கணக்கான செல்வம் அன்னிய நாட்டை வெகு வேகமா யடைவதனா லுண்டான நம் தேசத்தின் வறுமையைச் சிந்தித்து, நிவிர்த்தி செய்யக் கடமைப்பட்டிருக்கிற நாம் உதாஸீநமா யிருந்தால் தன்னைத் தானே தாழ்மைப்படுத்திக் கொள்வதாக ஏற்படுகிறது.

2. நம் தேச வறுமையை நிவர்த்திக்கக் கூடிய மார்க்கங்களை நாம் நன்றா யறிந்து அகந்தை, லோபம், இரக்கமில்லாமை, ஸ்வய நலம் பாராட்டல் பொறாமை, சோம்பல், ஐக்கியமின்மை முதலிய தீய குணங்களால் நாம் வியாபிக்கப்படாம லிருந்தால் நம் தேசத்தின் வறுமைக்கும், அவ் வறுமையால் பூறா வுணவு கிடைக்காமல் பரிதவிக் கிற ஜனங்களுடைய கஷ்டத்துக்கும், உணவு

குறைவால் நேரிடும் பிணி, அகால மரணம், புஷ்டிக் குறைவு கொலைகளவு, முதலிய ஸம்ப வங்களுக்கும் உத்திரவாதஞ் சொல்ல நேரிட மாட்டாது.

3. ஒருவனைச் சுகியென்று சொல்வதற்கு அவனவயவங்கள் பூறாவும் நல்ல ஸ்திதியி லிருக்க வேண்டும். அதுபோல் நம்முடைய அவயவங்களான ஸகோதரர்கள் மேற்கண்ட ஸ்திதியிலிருக்கும் பொழுது அவர்களுடைய கஷ்ட நஷ்டங்களை நிவிர்த்திக்கிற மார்க்கங் களைக் கைக்கொள்ளாமல் நம்முடைய பொரு ளையும், காலத்தையும் நமக்கே தீங்கு செய்யக் கூடிய அன்னியர் விஷயங்களில் செலவு செய்கிற நம்மை நாகரிகமுடைய அன்னியர் கள் இனியாவது பரிஹஸிக்கவும், பரிதாபப் படவும், நேரிடாமலிருக்க முயற்சி செய்ய வேண்டியது அவசியம்.

4. நம் தேசத்தின் வறுமையை நீக்க முக்கியமான ஸாதனம் நசித்துப் போன கைத்தொழிலை மறுபடி தலையெடுக்கச் செய்வதே. இங்கிலீஷ் கம்பெனிகளின் போட்டி யில் தனித்தனியாகச் செல்கிற நம்முடைய கைத்தொழில்கள் தலையெடுக்க முடியா தென்றே கருதி இந்தக் கம்பெனி அமைக்கப் பட்டது.

மேலும் நம்முடைய தேசம் ஈஸ்டிந்தியா கம்பெனியாரால் பிடிக்கப்பட்ட தென்பதை

புணர்ந்தவர்களுக்குக் கூட்டு வியாபாரத்தின் செல்வாக்கும், லாபமும், மதிப்பும் விசேஷமாய் தெரியவரும்.

(10-11-1906)

---

## சென்னையிலே

### ஓர் இந்திய பாங்க்

சென்னையிலே ஓர் இந்திய பாங்க் ஸ்தாபிக்கப்பட வேண்டியதின் அவசியத் தன்மையைப் பற்றி நாம் பல முறையும் வற்புறுத்திப் பேசியிருக்கின்றோம். இப்போது சென்னையிலே முக்கிய தனவந்தரும் மிகுந்த செல்வாக்குடையவருமாகிய ஸ்ரீ லாட் கோவிந்ததாஸ் ''இந்தியன் பேட்ரியட்'' பத்திரிகையிலே ஒருகடிதமெழுதி யிருப்பதில் மேற்கண்டவாறு ஓர் பாங்க் ஸ்தாபிக்க வேண்டுமென்று சிபாரிசு செய்திருப்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் படித்தோம். வெறும் வாய்ப்பேச்சுக்காரர் முயற்சியிலே ஒரு பாங்க் ஸ்தாபனமாய் விடமாட்டாது. லாட் கோவிந்ததாஸ் போன்ற பிரபுக்கள் தேசாபிமானத்தின் பேரில் உழைத்தால் மட்டுமே இம்மாதிரிப் பெருங் காரியங்கள் எளிதில் நிறைவேறக்கூடும். இவர் பொது ஜனங்களுக்குச் செய்து கொண்டிருக்கும் அறிக்கையை நமது நாட்டு மகாராஜாக்கள், ராஜாக்கள், நாட்டுக் கோட்டைச்

செட்டிகள், மற்றுமுள்ள வர்த்தகர்கள், ஜமீந்தார்கள் முதலியவர்க ளெல்லாம் சிரத்தையுடன் கவனித்து இவரது நோக்கம் கைகூடுமாறு தம்மால் இயன்ற முயற்சிகள் புரிய முற்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறோம். இந்தச் சமயம் தவறினால் இது போன்ற வேறு சமயம் வாய்ப்பது மிகவும் கஷ்ட மாகும்.

சுதேசீய பாங்க் வேண்டு மென்று இப்போது ஜனங்கள் அளவிறந்த தாகம் கொண்டிருக்கிறார்கள். ஆதலால் "பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்து வைத்தும்", அந்நிய பாங்கிகளில் கொட்டி வைத்தும் இருக்கும். சுதேசிக ளெல்லாம் உடனே கண்விழித்து லாட் கோவிந்ததாஸருக்குக் கடிதங்க ளெழுதி, காரியங்களைப் பக்குவத்திற்குக் கொண்டு வருவார்களென எதிர்பார்க்கின்றோம்.

10-11-1906

—

## பெங்காள ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி

சுதேசீய உணர்ச்சி இந்த நாட்டாருக்குள் வேரூன்றி வருவதற்கும், இங்குள்ளவர்கள் ஆங்கிலேயரை யொப்பப் பெருமுயற்சிகள் செய்யத் துணிந்து விட்டதற்கும் ஒரு சாட்சி வேண்டுமானால், பெங்காள ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனியையுஞ் சொல்லலாம். அவர்கள் 10-லட்சம் ரூபாய்

போட்டு இரண்டு கப்பல்கள் வசங்கி சிட்டாகாங்கி லிருந்து ரங்கூனுக்கும், ரங்கூனிலிருந்து சிட்டா காங்குக்கும் ஓட்டி வருகிறார்கள். இந்தியர் களுக்குப் பிடிவாதமிருந்தால் எந்த முயற்சிதான் கைகூடாது? (10-11-1906)

---

## சுதேசீய நிதி முழுகிப் போனதும் நமது நன்மைக்கே

ஆர்பத்னட் கம்பெனி டிபாஸிட்டிலிருந்த சுதேசீய நிதி 8000-மும் முழுகிப் போயினமையால் நம்மவர்களுக்கு மிகுந்த நன்மைகள் ஏற்பட்டு விட்டன. எத்தனைதான் கல்வி யிருப்பினும் பயனில்லை. "பட்டால்தான் தெரியும்." சுதேசீய நிதி வருஷா வருஷமும் விருத்தி முகம் காட்டி வருவதில் இனிமேல் சேரும் தொகைகள் ஏராளமாய் பெருகக் கூடும். அவ்வளவையும் நிதித்தலைவர்கள் ஒருக்கால் ஆங்கில பாங்குகளில்தான் போட்டு வைக்கக்கூடும். தேசாபிவிர்த்திக் கென்று தேடிய திரவியத்தை அந்நியர்களிடம் கொடுத்துவைப்பது நீதியோ!

சுதேச பாங்குகள் அதிகமில்லாமையால் வெள்ளையர்களின் பாங்குகளில் போடும்படி ஜனத்தலைவர்களுக்கு யோசனை போயிற்று. இனி அங்ஙனம் போடுவாரோ! ஒருக்காலும் இனி

அன்ய பாங்குகளில் சுதேசீய நிதியை வைக்க மாட்டார்கள். சற்றுத் தூக்கத்துடன் இருந்த ஜனத்தலைவர்களை, சு'தேசீய நிதி முழுகிப் போயிற்று' என்ற சம்பவமானது தட்டி எழுப்பி விட்டது. இனி ஒரு பத்து வருஷங்கள் கழித்து மொத்தமாக 10-லக்ஷம் ரூபா சுதேசீய நிதிக்கு நஷ்டம் நேர்ந்தது என்ற வார்த்தையைவிட இந்த 8000 ரூபா போனமை ஒரு பெரியதல்ல. இங்ஙனம் இழந்து போனதிலிருந்து ஒரு பெரிய நன்மை தோன்றியிருக்கிறது. இனி சுதேசீய நிதியைச் சுதேசபாங்குளில்தான் போடுவார்கள். அன்னியர்களிடம் கொடுத்துவைப்பது தேசத் துரோகவிஷயம் என்பதை நன்கு அறிந்து கொண்டனர். இனிமேல் நமது நிதிக்கு எவ்வித ஆபத்தும் நேராதபடி இந்த விபத்து செய்திருக்கும் உபகாரம் எவ்வளவு சிலாக்கியமானது!

நமக்கு நேரும் துன்பங்களெல்லாம் கெடுதி போல் தோன்றி, பெருத்த நன்மையைப் பயப்பதற்கு அஸ்திவாரமாக அமைவதும் பகவான் செயலே! எல்லாம் நமது நன்மைக்கே!

(பாலபாஸ்கரன்) (17-11-1906)

---

## வாலிபர்களும் சுதேசீயமும்

பாபு சுரேந்திரநாத்பானர்ஜி தமது பம்பாய்ப் பிரசங்கத்திலே வாலிபர்களுக்குப் பின்வருமாறு போதனை செய்தார்:-

"வாலிபர்கள் சுதேசிய முயற்சியிலே தலையிடக் கூடாதென்று சில பேதைகள் சொல்கிறார்கள். அது மருள் வார்த்தை. அதை நீங்கள் கேட்க வேண்டாம். புருஷார்த்தங்களின் ஸித்திக்கு சுதேசிய முயற்சியைப் போன்ற அத்தனை அனுகூலமான வேறு பாடசாலை கிடையாது. ஆதலால் வாலிபர்களே, நீங்களெல்லோரும் சுதேசியத்தைப் பெருந் தர்மமாகக் கைக் கொள்ளுங்கள். உங்களுடைய வாலிபத்தின் ஊக்கத்தையெல்லாம் இதிலே காண்பியுங்கள். பெங்காளத்தில் வாலிபர்கள் தான் சுதேசியக் கொடியை உயர்த்திக்கொண்டு நிற்கிறார்கள். வாலிபர்களே சுதேசியத்தின் பொருட்டாகப் பலவிதமான சங்கடங்களுக்குட்பட்டு புனிதத் தன்மை பெறுகின்றார்கள். இந்தியா முழுதிலுமுள்ள வாலிபர்களெல்லாம் அதனைப் பின்பற்ற வேண்டுமென்று பிரார்த்தனை செய்து கொள்ளுகிறேன்."

(1-12-1906)

---

## பாபு பானர்ஜியும் சுதேசியமும்

பாபு சுரேந்திரநாத் பானர்ஜி பம்பாயில் சுதேசிய விஷயமாய்ச் சொல்லியதாவது:-

''சுதேசீயமானது முக்கியமாய் மாணாக்கர்கள் முதலிய வாலிபர்களால் நடைபெற்று வெற்றியடைய வேண்டி யிருக்கின்றது. இத்துடன் வியாபாரிகள் இதில் எடுக்கவேண்டிய முயற்சி அதி முக்கியமானது. சுதேசீய சாமான்கள் செய்வதோடு அவற்றைச் சற்றேறக் குறைய குறைந்த விலைக்கும் விற்கவேண்டும். குறைந்த விலைக்கு விற்றாலல்லாமல் நமக்குப் போட்டியாய் நிற்கும் பரதேசிச் சாமான்களை அகற்ற முடியாது. அதிக லாபத்தைக் கருதாமல் சுதேசீயத்தின் அபிவிர்த்தியை மட்டுமே கருத வேண்டும். இவ்வாறு கொஞ்ச காலம் நடத்தினால் கூடிய விரைவில் பரதேசிச் சாமான்கள் மெல்ல மெல்ல ஒதுங்கி விடும். இதுவே வியாபாரத்தின் இரகஸ்யம்.''

(1-12-1906)

## சென்னையில் ஒரு சுதேசி பாங்கி

சென்னையில் ஒரு சுதேசி பாங்க் ஸ்தாபிக்கும் அதிசயத்தைக் குறித்து மகாஜன சபையிலே சிலர் கூடி ஆலோசித்ததில் ஒருபங்குக்குரூபா 500-வீதம் 4000 பங்குகள் சேர்த்து 20 லட்சம் ரூபாய் மூலதனம் உண்டாக்க திவான்பகதூர் பி ராஜரத்தின முதலியாரும், திவான்பகதூர் ஆதிநாராயணய்யரவும் மிஸ்டர் சீதாராம் செட்டியும், மிஸ்டர் அண்ணாமலை செட்டியும், மிஸ்டர் P. R. சுந்தரமய்யரும்,

மிஸ்டர் முரளிதாஸ் சம், மிஸ்டர் D. நடேச அய்யரும் மிஸ்டர் M. A. M. முத்தய்யா செட்டியும், மிஸ்டர் M. K. R. வெங்கடாசலம் செட்டியும் ஒரு கமிட்டியாய் நியமிக்கப்பட்டார்கள்.

இன்னும் இரண்டுவாரம் கழித்து மறுபடியும் சபைகூடலாமென்று தீர்மானிக்கப்பட்டது பம்பாய் பாங்கின் கிளை ஒன்றை இங்கு ஸ்தாபிப்பதைப் பற்றிய யோசனை இப்போது கவனிக்கப்பட வேண்டாமென்றும் தீர்மானிக்கப்பட்டது. மிஸ்டர் P. R. சுந்தர ஐயரும் மிஸ்டர். முத்தய்ய செட்டியாரும், மிஸ்டர், S. சீனிவாச அய்யரும் தற்காலத்துக்கு கமிட்டிக் காரியதரிசிகளாய் நியமிக்கப்பட்டார்கள்.

(8-12-1906)

---

## சென்னை சுதேசீய நிதி-தொழிற் சங்கம் மானேஜிங் கமிட்டியாரின் தீர்மானம்

வெளி ஜில்லாக்களில்தொழில் அபிவிர்த்தியில் அக்கறையுள்ள சபைகளும்கனவான்களும் நெசவுத் தொழில் செய்யும் வகுப்பாரில் புத்திமான்களான சிறுவர்களைப் பொறுக்கி, அவர்கள் விசை நாடாத் தறிகளைக் கொண்டு நெசவு கற்றுக்கொள்ள விருப்பம் உள்ளவர்களாய் இருக்கும் பட்சத்தில், அவர்கள் அப்படிக் கற்றுக் கொள்வதில் நேரிடும்

செலவில் எவ்வளவு பாகம் தாங்கள் பொறுக்க இஷ்டப்பட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவிக்கும் படி கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

நெசவுத்தொழில் கற்றுக்கொள்ளும் பொருட்டுப் பொறுக்கி அனுப்பப்படும் சிறுவர்கள் நெசவுத் தொழிலினாலேயே ஜீவிக்கக் கூடியவர்களாக இருக்கவேண்டும். சென்னையில் மிஸ்டர் P. தியாகராய செட்டியார் வைத்திருக்கும் நெசவுத் தொழிற் சாலையில் சேர்த்துக்கொள்ளப்பட்டு ஒரு மாதம் அல்லது இரண்டு மாத தவணைக்குள் நெசவுத்தொழில் வேலையில் தேர்ச்சி அடையக் கூடும். சிறுவர்களினுடைய போக்குவரத்து செலவு களிலும், இவ்விடம் வேலை கற்றுக்கொள்ளும் காலம் வரைக்கும் நேரிடும்போஜன செலவுகளிலும் ஒரு பாகம் நேஷனல் பண்டு தொழிற் சங்கத்தாரால் ஏற்றுக் கொள்ளப்படும். இந்தக் கருத்தை நிறை வேற்றும் பொருட்டு அந்தந்த ஊர்களிலுள்ள சுதேசீய கனவான்கள் முன்னின்று சென்னையில் உள்ள தொழில் சங்கத்தாரின் கமிட்டியுடன் சேர்ந்துதகுந்த ஏற்பாடு செய்ய இஷ்டமுள்ளவர்கள் மேற்படி சங்கத்தாருக்கு எழுதிக்கொள்ளும்படி கேட்கப்பட்டிருக்கிறார்கள்.

சுதேசீய நிதியின் தற்கால ஐவேஜியை ஒட்டி நமது தேசத்தின் கைத்தொழிலை அபிவிர்த்தி செய்யக்கூடிய அபிப்பிராயங்கள் வேறு ஏதேனும் உளதாயின், அந்த அபிப்பிராயத்தையும் தெரிந்து

கொள்ள மேற்படி சங்கத்தார் ஆவலுள்ளவர்களாக இருக்கிறார்கள்.

(8-12-1906)

---

## சுதேசீய நிதியும் தொழிற் சங்கமும்

சென்னை சுதேசீய நிதி தொழிற்சங்கத்தார் சமீபத்தில் தேசத்தில் தொழில் அபிவிர்த்தியாகும் விஷயமாய் இரண்டு சுற்றுக் கடிதங்கள் விடுத்திருக்கிறார்கள். அதாவது ஒன்று இந்த மாகாணத்தில் ஆங்காங்கு நம்மவர்களால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் ஸ்கூல்களின் மானேஜர்களுக்கு அனுப்பப்பட்டிருக்கிறதாவது இந்த ஸ்கூல்களில் தற்காலம் சொல்லுவிக்கப்படும் படிப்பானது யூனிவர்ஸிட்டிப் பரீட்சைகளுக்குப் போகும் சிறுவர்களுக்கு வேண்டிய படிப்பை ஒத்திருப்பதாலும், கீழ்வகுப்புகளில் படிக்கும் சிறுவர்களில் முக்கால்வாசிப் பேருக்கு அப்படிப்பட்ட யூனிவர்ஸிட்டிப் பரீட்சைகளுக்குப் போக இயலாமல் அவர்கள் கற்கும் படிப்பானது ஜீவனத்துக்கு உபயோகப்படாமல் போய் விடுகிற படியாலும், இவ்வாறு விளையும் பெரும் தீங்கை நிவர்த்தி செய்யும் பொருட்டு, அந்தந்த ஸ்கூல்களில் கீழ் வகுப்புகளிலேயே பிள்ளைகளுக்குத் தொழிற்படிப்பு கற்றுக் கொடுக்கும்படியான ஏற்பாடு செய்யப்பட வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கின்றது.

மற்றொன்று வெளி ஜில்லாக்களில்எங்கெங்கே தொழில் சபைகள் இல்லையோ, அங்கங்கே அப்படிப்பட்ட சபைகள் ஸ்தாபிக்கப்படவேண்டும் என்று தேசாபிமானிகளைக் கேட்டுக் கொண்டிருப்பது.

இந்த இரண்டு சுற்றுக் கடிதங்களும் நமது தேசத்தில் தொழில் அபிவிர்த்தியாவதற்கு முக்கிய ஹேதுக்களாக இருப்பதால், இவைகளின் நோக்கங்கள் நிறைவேற வேண்டும் என்றுகோருகிறோம்

(8-12-1906)

---

## சுதேசிய நிதி

சுதேசிய நிதியின்வசூல்களைப்பற்றி அடிக்கடி பத்திரிகைகளிலே வரவேற்புக்கள் பிரசுரமடைந்து வருகின்றன. ஆனால் அப்போதப்போதுகிடைக்கும் தொகைகள் மட்டும் குறிக்கப்படுகின்றனவேயல்லாமல், மொத்தத் தொகைசேர்த்துப் போட்டுக் கொண்டே வரும் வழக்கத்தைநிறுத்தி விட்டார்கள் இதனால் பொது ஜனங்களுக்கு ஷை நிதியின் விருத்திநிலை தெரிய இடமில்லாமலிருக்கிறது. இனியேனும் இந்தப் புது வழக்கத்தை நிறுத்தி முன்பு போலவே மொத்தத் தொகையையும் சேர்த்துப் பிரசுரம் புரிந்து வருவார்களென்று நம்புகிறோம்.

---

15-12-1906

## சுதேச நிதி

"சுதேச நிதி"யின் காரியதரிசி ஸ்ரீ.ஜி.சுப்பிர மணிய ஐயர் அடியிற்கண்ட விஷயத்தைப் பத்திரி கைகளின் மூலமாய்ப் பொது ஜனங்களுக்குத் தெரி விக்கிறார்:— சுதேச நிதி நிர்வாக சபையார் இம் மாதம் 8-ந் தேதி கூடிய கூட்டத்தில் செய்த தீர்மானங்களின் பிரகாரம் (1) தென்னிந்தியாவி லுள்ள வாலிபர்கள் கைத்தொழில் கல்வியை விர்த்தி செய்யும் பொருட்டு இயன்ற திரவியம் கடனாகக் கொடுக்கப்படும். அப்படித் தொழிற் கல்வி கற்க விருப்பும் மாணாக்கர்களின் உள்ளூரி லுள்ள சபையார்களாவது தக்க மனிதர்களாவது அவவிதம் கொடுக்கப்படும் கடனுக்குச் சிபார்சு செய்யவேண்டும். விசை நாடாத்தறிகள் வாங்கிக் கொடுக்கலாம் என்பது இவற்றிலொன்று. இதற்கும் மேற்கூறியபடி சிபார்சு வேண்டும்.

(2) ஜப்பானுக்குப் போய் சோப்பு மெழுகு வத்தி, பென்சில், தீக்குச்சி, சிமெண்டு (சாந்து) முதலியவைகள் செய்யும் தொழில் கற்கும் இரண்டு மாணாக்கர்களுக்கு ஒரு வருஷ காலத்துக்கு மாதம் 1.க்கு தனித்தனி ரூபா 50-வீதம் உபகாரச் சம்பளம் கொடுக்கப்படும். அப்படிப்பட்ட சகாயம் பெற விரும்புபவர்கள் பி.ஏ.பரீக்ஷை கொடுத்திருக்க வேண்டும்.

(3) இந்தியாவில், சபையாரால் ஒப்புக் கொள்ளப்பட்ட கைத்தொழிற் கலாசாலைகளில்

தேசவு படிப்பதற்காக இரண்டு மாணாக்கர்களுக்கு மாதம் 1க்குத் தனித்தனி ரூபா 25-வீதம் உபகாரச் சம்பளம் கொடுக்கப்படும். இதற்கும் பி.ஏ.பரீக்ஷை தேறி யிருக்க வேண்டும்.

உபகாரம் பெற இஷ்டமுள்ளவர்கள் வருகிற ஜனவரி 15-தேதிக்குள் சபையின் காரிய தரிசிகளுக்கு மனு செய்து கொள்ளவேண்டும்.

(22-12-1906)

---

## சுதேசீயமும்
## ஸ்ரீ.ஜி. சுப்பிரமணிய ஐயரும்

சுதேசீய அபிமானியாகிய ஸ்ரீ.ஜி.சுப்பிரமணிய ஐயர் எழுதுகிறார்:-

சுதேசீயம் இப்பொழுது என்ன நிலைமையி லிருக்கின்றது? சுதேசீய முயற்சி உண்டாய் ஒரு வருஷமேயா யிருக்கிறது. அது தொடங்கின காலத்தில் அதைப் பார்த்து எத்தனை பேர் பரிகாஸம் செய்தார்கள்! எத்தனை பேர் அலக்ஷியமாய் நினைத்தார்கள்! இப்பொழுது சுதேசீயம் எத்தனை அற்புதங்களைச் செய்துவிட்டது. கல்வி யறிவுள்ள இந்தியர்களை யெல்லாம் காங்கிரஸ் மகா சபை எவ்வாறு ஒன்றுகூட்டி இந்தியர்க

ளெல்லாரும் ஒரே ஜாதியாரென்று காண்பித்ததோ, அவ்வாறே சுதேசிய முயற்சியானது இந்தியாவிலுள்ள பலகோடி பொது ஜனங்களையும் ஒருங்கு சேர்த்து அவர்களுக்குள் இருக்க வேண்டிய அந்நியோந்நிய அன்பையும் ஒற்றுமையையும் விர்த்தி செய்துவிட்டது. காங்கிரெஸ் சபையார் சென்ற 21-வருஷங்களிலும் செய்யக் கூடாத அநேக நன்மைகளைச் சுதேசீயமானது ஒரு வருஷத்திற் செய்துவிட்டது.

சுதேசியமானது கேவலம் பங்காளத்தில் மட்டுமில்லாது வடக்கே இமயமலையிலிருந்து தெற்கே கன்னியா குமரி வரை எட்டிப் பரந்துவிட்டது. பொது ஜனங்களின் மனத்தில் சுதேசீய மென்பது நன்றாய்ப் பதிந்துவிட்டது. எங்கு பார்த்தாலும் சுதேசத் தொழிற்சாலைகள் ஏற்படுத்தவேண்டுமென்ற முயற்சிகள் நடந்து வருகின்றன. பட்டணங்களில் மட்டுமல்ல; சிறிய கிராமங்களிலும் பட்டிகளிலும் சேரிகளிலும் சுதேசியத்தின் ஊக்கம் காணப்படுகின்றது. இந்த ஊக்கத்தின் முழுப்பயனும் வெகு சீக்கிரத்தில் விளையாவிட்டாலும் நமது சந்ததிகளாவது சுதேசியத்தின் பெரும் பயன்களை அனுபவிப்பார்களென்பதிற் சிறிதும் சந்தேகமில்லை.

ஆதலால் பொது ஜனங்களெல்லாம் இப்பொழுது காணப்படும் ஊக்கத்தைத் தளர

விடாமல் இன்னும் நாளுக்கு நாள் அதிக ஊக்கமும் முயற்சியும் காட்டி நமது தேசத்தின் நன்மைக்கு உழைப்பார்களாக.

(22-12-1906)

——

## ஸர்பெரோஸிஷா மேட்டாவும் சுதேசீயமும்

இந்தியாவில் தேசாபிமானிகள் என்ற தூய பெயர் சூடித் துலக்குகின்ற அநேக கனவான்களுள் சிலர் மெய்யாகவே இந்தியாவாகிய தாய்நாட்டிற் குழைக்க வேண்டுமென்ற பேராவலுள்ளவர்களா யிருக்கின்றார்கள். சிலர் நாட்டிலுள்ள பல ஜனங் களினுடைய மனத்தையும் கவர்ந்து, அதனால் உயர்ந்த கீர்த்தியையும் பதவியையும் பெற்றுவிட லாமென்ற நோக்கத்தோடு தேசாபிமானம் காட்டு கின்றார்கள். இன்னும் சிலர் தேசாபிமானம் என் பதைத் துணையாகக் கொண்டு அதனால் பெரும் பொருள் சம்பாதிக்கலாமென்று நினைத்து வாழ் கின்றார்கள். வேறு சிலர் ஜனங்களிடம் மதிப்புப் பெற்று அதனால் கவர்ன்மெண்டாரிடமிருந்து உயர்ந்த பட்டங்களையும் ஸ்தானங்களையும் பெற்றுவிடலாமென்று எண்ணுகிறார்கள்.

இத்தனை பிரிவுகளுள் ஒவ்வொருவரும் எந்தப் பிரிவைச் சேர்ந்தவர்களென்பது சீக்கிரத்தில் வெளியாகாவிட்டாலும் சில சில சந்தர்ப்பங்களில் மிக நன்கே விளங்கிவிடுகின்றது. உதாரணமாக பாம்பே கனவானாகிய ஸர்.பெரோஸிஷா மேட்டாவை எடுத்துக்கொள்ளலாம். இவர் சென்ற அநேக வருஷகாலமாகப் பெரிய தேசாபிமானி யென்ற பெயர்படைத்த மகான், ஜனங்களிடம் அள வற்ற மதிப்பையும் நம்பிக்கையையும் பெற்றவர். ஒரு பிரபலமான வக்கீலாகவு மிருக்கின்றார். காங் கிரெஸ் மகா சபைக்கு ஒரு ஆபரணமாய் விளங் கியவர். ஆனால், அவர் சுதேசீய விஷயத்தில் சிறிது வெறுப்புக் காட்டுகின்றதாய் ஒரு புகார் உண்டா யிருக்கின்றது.

இப்பொழுது வங்காள சகோதரர்களால் தொடங்கப்பட்டிருக்கும் சுதேசியமானது இந்தியா வுக்கு எண்ணற்ற நன்மைகளைச் செய்யவல்லது என்பதை இந்தியாவில் மெய்யன்புள்ள எல்லா அறிஞர்களும் ஒப்புகின்றார்கள். வங்காளத்தில் பாபு சுரேந்திர நாத் பானர்ஜி, பஞ்சாப் ஸ்ரீ லாலா லஜபத் ராய், புனா ஸ்ரீ பாலகங்காதர திலகர், எல்லாருக்கு மேலாய் ஸ்ரீ தாதாபாய் நௌரோஜி முதலிய அநேகஅறிஞர்கள் சுதேசியம் மிகவும் நன்மையான காரிய மென்று சிறிதே னும் அபிப்பிராயபேதமின்றி ஒப்புக் கொண்டிருக் கிறார்கள். அங்ஙனமிருந்தும் நமது தேசாபிமானி யாகிய ஸர் மேட்டாவினுடைய இருதயத்தில்

இவ்வித வெறுப்பான எண்ணம் உதித்ததற்குக் காரணம் நன்கு விளங்கவில்லை. சுதேசியம் தொடங்கிய கால முதல் அவருடைய இருப்பும், காட்டும் அநுதாபமும் அவ்வளவு திருப்திகரமாக வில்லை. இதற்கு ஒரே காரண மிருக்கின்றது. கவர்ன்மெண்டாருடையமனவருத்தத்துக் காளாகப் படா தென்ற சில தேசாபிமானிகளுமிருக் கின்றார்கள்.

சென்னையிலுள்ள தேசாபிமானிகள் எவ்வாறு கவர்ன்மெண்டாரைச் சந்தோஷப்படுத்தி லாப மடைய வேண்டுமென்று விரும்பி இப்போது ஜனங்களின் வாயில் மண்ணை வாரிப் போடு கிறார்களோ, அவ்வாறே வேறு]சிலர் இந்தியர் களுக்கு எது சம்பவித்தாலும் தாங்கள் கவர்ன் மெண்டாரிடம் வைத்திருக்கும் அபிமானத்தைக் குறைத்துவிட்டால் மோசம் வந்து விடுமென் றெண்ணுகின்றார்கள். இப்படிப்பட்டவர்களில் ஸர் மேட்டாவும் ஒருவரா யிருப்பாரோ வென்று சந்தேகிக்கிறோம்.

பொதுவாய் ஸர் முதலிய பட்டம் பெற்றவர் களுக்கே கவர்ன்மெண்டாரிடம் மிகுந்த அபிமான முண்டு. உண்மையாய் அபிமானமில்லாவிட்டாலும் வெளிக்காவது அபிமான முள்ளவர்கள் போல் நடிக்கவேண்டும். சுதேசிய முதலிய விஷயங்களில் தலைப்படுவோரைக் கவர்ன்மெண்டார் அவ்வளவு பிரியமாய் நடத்தமாட்டார்கள். இந்தக் காரண மொன்றே ஸர் மேட்டாவைச் சுதேசீயத்தில்

பற்றில்லாதவராகச் செய்துவிட்டதென் றெண்ணு கின்றோம். ஆனால், ஸர் மேட்டாவினுடைய தேசாபிமானத்தின் ஆழ்ச்சி இப்பொழுதுதான் விளங்கிற்று.

என்ன துக்கம் வந்தாலும், என்ன நஷ்டம் வந்தாலும் தேச நன்மையே கதியென்றுழைப் பவனே தேசாபிமானியன்றிச்சுய நன்மையைக் கருத்தில் வைத்துக்கொண்டு வெளிக்கு வேஷம் போடுபவர்களுடைய மேற்பூச்சு எப்பொழுதாவது ஒரு காலத்தில் வெளிக்கு வந்துவிடு மென்பதில் ஐயமில்லை.

(29-12-1906)

---

## சுதேசியமும் அந்நிய நாட்டுச் சரக்கு விலக்கமும்

சுதேசியமானது இந்தியாவில் அபிவிர்த்தி யடையவேண்டுமானால், அதற்குத் தக்க உபாயம் அந்நிய நாட்டுச் சரக்குகளை விலக்குவதே யாகும். அந்நிய நாட்டுச் சரக்குகளை விலக்கிக்கொண்டே சுதேசியத்தை விர்த்திசெய்வதென்றும், சுதேசியம் நன்றாய்ப்பட்டபின் அந்நிய சரக்கை முற்ற நிறுத்துவதென்றும் இவர்[1] அபிப்பிராயப்படுவது பெரும்பிழை.

---

1இவர் என்று இங்குத் தாதாபாய் நௌரோஜியைக் குறிப்பிடுகிறார். —பதிப்பாசிரியர்.

அந்நிய நாட்டுச் சரக்குகளைச் சிறிது சிறிதாகவாவது விலக்கினால்தான் சுதேசியமான சாமான்கள் எவ்வெவை நமக்கு வேண்டியிருக்கிறதென்ற குறைபாடுகள் தோன்றும். பரதேசிச் சரக்குயென்ற காரணத்தால் நமக்கு ஒரு அருவருப்பும் வெறுப்பும் உண்டானாலன்றிச் சுதேசி சாமான்களைச் செய்யவேண்டுமென்ற ஆவசியமும்ஆசையும் உண்டாகமாட்டாது. இந்தக் காரணத்தைக் கொண்டு கல்கத்தா ஸ்ரீ. விபினசந்திரபாலரும், பூனா ஸ்ரீ திலகரும் பஞ்சாப்ஸ்ரீலஜபதிராய் முதலிய சிலரும் சுதேசியத்தையும் அந்நிய நாட்டுச் சரக்கு விலக்கத்தையும் பற்றி காங்கிரெஸ் சபையில் பலமாய்ப் பேசித் தீர்மானங்கள் செய்ய வேண்டுமென்று வற்புறுத்துகின்றார்கள்.

இவ்விஷயத்தில் பாபு சுரேந்திரநாத் பானர்ஜி முதலிய தேசாபிமானிகளும் சம்மதிக்கின்றார்கள். ஆனால், பாம்பே ஸர் பெரோஸிஷா மேட்டாவும் அவர் வகுப்பைச் சேர்ந்த சென்னை வாசிகளாகிய சில கவர்ன்மெண்டபிமானிகளும் இதற்கு உடன்படுகின்றார்களில்லை. என்றாலும் மேற்கூறிய இரண்டு விஷயங்களும் எவ்விதமாயாவது காங்கிரெஸ் சபையில் புகுந்து விடுமென்பது திண்ணம்

சுதேசிய விஷயமாய்ப் பேசுவதற்குக் காங்கிரெஸ் சபையாருக்குஇஷ்டமில்லாமற் போய் விடும் பக்ஷத்தில் காங்கிரெஸ் சபையினரால்

இந்தியாவுக்கு ஒரு நன்மையும் பிறவாது. ஸ்ரீ தாதாபாயின் அபிப்பிராயம் சுதேசியத்துக்கு அனுகூலமாயிருக்குமென்றே எண்ணுகின்றோம்.

(29-12-1906)

—

## ''சுத்த சுதேசியம்''

சில தினங்களுக்கு முன் கல்கத்தா பொருட் காட்சியைத் திறந்த ராஜப்பிரதிநிதியாகிய லார்ட் மின்டோ சுதேசியத்தைப்பற்றிப் பேசிய பொழுது ''சுத்த சுதேசியம்'' என்று-அதாவது சுதேசி யத்துக்குச் ''சுத்தம்'' என்றுமோர் அடைமொழி கொடுத்துப் பேசினார். லார்ட் மின்டோவின் அபிப்பிராயத்தில் இரண்டு சுதேசியங்கள் காணப் படுகின்றன. அவற்றுள் ஒன்று ''சுத்த சுதேசியம்'' ஆயின், மற்றொன்று ''அசுத்த சுதேசியம்'' போலும்!

இந்தியருடைய சுதேசமாகிய இந்தியாவின் கைத்தொழிலை அபிவிர்த்தி செய்யவேண்டுமென்ற உண்மையான நோக்கத்தோடு நிஷ்கபடமாய் உழைப்பதுதான் சுத்த சுதேசியமாம். ஆனால், இராஜரீக விஷயமாய் கவர்ன்மெண்டாருக்கும் பிரஜைகளுக்கும் ஒற்றுமைக் குறைகள் ஏற்பட்டு, அதனால் குடிகளுக்கு உண்டான வெப்பத்தையும் எரிச்சலையும் காட்டுவதற்காக அந்நிய நாட்டுச்

சரக்குகளை வாங்கப்படாது என்று பிரசங்கம் செய்தலும் அந்தக் காரணத்தைக் கொண்டே சுதேசக் கைத்தொழிலை விர்த்தி செய்யவேண்டுமென்று முயல்வதும் சுத்த சுதேசியமாக மாட்டாதாம். ஆகவே இப்பொழுது வங்காள மாகாணப் பிரிவினையினாலும் கல்வியிலாகாமசோதாமுதலிய திருத்தங்களாலும் வங்காளிகளுக்குக் கவர்ன்மெண்டார்மீது கோபமுண்டாயிருப்பதாகவும் அக் கோபத்தின் காரணமாய் வங்காளிகள் சுதேசீயத்தைத் தொடங்கி யிருப்பதாகவும், ஆதலால் இப்பொழுது அந்நிய நாட்டுச் சரக்குகளை விலக்கி விடவேண்டுமென்று முயல்வதும் பிரசங்கங்கள் செய்வதும் சுத்த சுதேசியமென்று சொல்ல மார்க்கமில்லை யெனவும் பொருள் படும்படியாய் லார்ட் மின்டோ பேசினார்.

ஒரு தேசத்தின் இராஜரீக வியவகாரங்களுக்கும் கைத்தொழில் முதலிய விஷயங்களுக்கும் யாதொரு சம்பந்தமுமே யில்லை யென்று ஸ்தாபிக்கின்றார். இராஜரீக விஷயமாய்க் குடிகளடைந்த நஷ்டத்தைச் சுதேசிய முதலிய கைத்தொழிலபிவிர்த்திகளைக் கொண்டு சரிப்படுத்திவிடவேண்டுமென்று வாதாடுவது சுத்த சுதேசியமுமாகாது, நன்னோக்கமுமாகாது என்று அபிப்பிராயப்படுகின்றார். யாதொரு உட்களங்கமுமின்றித் தேசக் கைத்தொழிலை அபிவிர்த்தி செய்வதே நோக்கமாக ஜனங்கள் உழைப்பார்களானால் அவ்விஷயங்களில் கவர்ன்மெண்டார் தக்க உதவி புரிய முயல்

வர்க ளென்றும் வரக்குறுதி கூறினார். மிகவும் நன்றாயிருக்கின்றது இவருடைய அபிப்பிராயம்! பெயர் மாத்திரத்தில் உயிர் வேறு, உடம்பு வேறு என்றிருக்கின்றமையால் உயிரை யின்றி உடம்பு தானே வளருமெனவும், உடம்பின்றி உயிர் வளரு மெனவும் ஆதலால் இவை இரண்டையும் ஒன்றாய்ப் பிணைப்பது ''சுத்த'' மன்றெனவும் கூறுவது எவ்வளவு நியாயமுடையதோ அவ்வளவு நியாய முடையதாயிருக்கின்றது நமது ராஜப்பிரதிநிதியின் அபிப்பிராயம்! உயிரும் உடம்பும் எவ்வாறு இரண்டறக் கலந்து நிற்கின்றனவோ அவ்வாறே ஒரு தேசத்தின் இராஜரீக விஷயமும் கைத்தொழில் விஷயமும் கலந்து நிற்கின்றன. என்பதில் எள்ளளவும் ஐயமே யில்லை.

எந்தத் தேசத்தில் பிரஜைகளுக்கு ராஜரீக சம்பந்தமான ஸ்வதந்திரங்கள் அதிகமாய் இருக்கின்றனவோ அந்தத் தேசத்திற்றான் கைத்தொழிலும் விர்த்தியாகின்றது; இன்னும் கைத்தொழில் எந்தத் தேசத்தில் மும்மரமாய் நடக்கின்றதோ அந்தத் தேசத்துப் பிரஜைகள்தாம் இராஜரீக ஸ்வதந்திரங்களை இலகுவில் அடைகிறார்கள். இவை யிரண்டும் ஒன்றற்கொன்று இன்றியமையாதனவாயும், ஒன்றையொன்று இயக்கும் கருவியாயும் இருக்கின்றனவே யன்றி வேறில்லை.

ஒரு மனுஷனுக்கு இரண்டு விஷயத்தில் சக்தியிருக்கும் பொழுது ஒரு சக்தி இயலாத விடத்து

மற்றொரு சக்தியை உபயோகித்துத் தான் வெற்றி யடைவான். அதுபோலவே, பிரிட்டிஷ் பிரஜை களைப் போன்ற இராஜரீக ஸ்வதந்திரங்கள் இந்தியருக்கு எப்பொழுது இல்லை யென்றாய் விட்டதோ அப்பொழுதே இந்தியர் கைத் தொழிலைக் கொண்டாவது இராஜரீக ஸ்வதந் திரங்க ளடைய வழி பார்க்கத்தான் செய்வார்கள். ஏன், பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் தங்கள் வியாபாரங்களைக் கொண்டுதானே இந்தியாவுக்கு அரசரானார்கள்? முப்பது கோடி ஜனங்கள் வாழும் பொன் விளையும் புண்ணிய பூமியாகிய இந்தியா வுக்கு நாலாயிரம் மைல் தூரத்திலுள்ள ஐரோப்பியர் சக்ரவர்த்தி யெனப் பட்டம் பூண்வதற்கு அவர்களுடைய கைத்தொழிலும் வியாபாரமும்தானே காரணம்? அப்படியானால் இராஜரீகத்துக்கும் கைத்தொழிலுக்கும் யாதொரு சம்பந்தமுமில்லையென ராஜப்பிரதிநிதி கூறுவதன் பொருளென்ன? நிஷ்கபடமான நோக்கத்தோடு சுதேசியம் நடக்குமானால் அதற்குக் கவர்ன்மெண் டார் உதவி செய்வார்களாம் இதுவரையும்! கவர்ன் மெண்டார் என்னென்ன அசாத்திய உதவி புரிந்து விட்டார்கள்? எத்தனை கைத்தொழிற்சாலை ஏற் படுத்தி விட்டார்கள்? இந்தியப் பிரஜைகளுக்கு என்னென்ன அநுதாபம் காட்டியிருக்கிறார்கள்? இந்தியர்களைத் தலை நிமிரவொட்டாமல் கீழே தள்ளி அமுக்கிமிதித்து விடவேண்டுமென்பதல்லவா லார்ட் கர்ஸன் முதலிய புண்ணிய புருஷர்களின் உட்கருத்து?

பிரஜைகளுடைய வாழ்வே தன் வாழ்வென்றெண்ணி நடக்கவேண்டியது அரசிலக்கணமாயிருந்தும் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் இந்தியர்களுடைய வாழ்வே தம் வாழ்வென்றெண்ணி, எப்பொழுதாவது எவ்விஷயத்திலாவது நடந்திருக்கின்றார்களா? தங்களுடைய சுகத்தையும் லாபத்தையும் மட்டும் கருதுவது கவர்ன்மெண்டாருடைய இயல்பாயும் உடன்பிறந்த குணமாயு மிருக்கும்பொழுது இந்தியர்களுக்கும் சுதேசியத்துக்கும் அநுதாபம் காட்டி நடப்பதால் லார்ட் மின்டோ கூறுவது உண்மையான மொழிதானா?

சுதேசியம் ''சுத்த''மாயிருக்க வேண்டுமென்று கூறிய லார்ட் மின்டோ தமது மொழி சுத்தம்தானா என்பதை உற்றுணர்ந்து பேசினாரா? இல்லவே யில்லை. இதற்கு முன் இவரைப் போன்ற எத்தனையோ ராஜப்பிரதிநிதிகள் என்னென்ன வாக்குறுதிகளெல்லாமோ செய்திருக்கிறார்களே, அப்படி நடந்தார்களா? இந்தியர்களையும் பிரிட்டிஷ் பிரஜைகளையும் ஒன்றுபோல் நடத்துவதாய்ச் சொன்னவர்கள் அப்படிச் செய்து விட்டார்களா? சொல்வதொன்றும் செய்வதொன்றுமாயிருக்கும்மனிதர்களுடைய வாக்கை யார்தான் நம்புவார்கள்?

இப்பொழுது சுதேசியத்தைப் பாதுகாத்துக் கடைக்கண் பார்க்க வேண்டுமென்று ஒருவரும் கவர்மெண்டாரைக் கேட்டுக்கொள்ளவில்லையே! சுதேசியம் தானே உண்டாயிற்று; தானே வளர்

கின்றது; தானே எண்ணில் நன்மைகளை இந்தியா வுக்குச் செய்யக் காத்திருக்கின்றது. அதற்கு ஒருவருடைய உதவியும் வேண்டியதில்லை. ஒருவேளை கவர்ன்மெண்டார் சுதேசியத்தைப் பாதுகாத்து உபகாரம் செய்வதிலும் அதற்கு அபகாரம் செய்யாமலிருந்தால் அதுவே போதுமானது தங்கள் கைகளும் கால்களுமே தமக்குத் துணையென்ற உயர்ந்த பரிசுத்த நோக்கத்தோடு இந்தியர்கள் தொடங்கியிருக்கும் சுதேசியத்துக்கு ஒருவருடைய உதவியும் வேண்டியதில்லை. எமது அருமைச் சுதேசியத்தைச் ''சுத்த'' மென்றும், ''அசுத்த'' மென்றும் அடைமொழி கொடுத்துப் பேசவேண்டிய அவசியமுமில்லையென்றெண்ணுகிறோம்.

(29-12-1906)

---

## சுதேசி ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி லிமிடெட் தூத்துக்குடி

1882-ம் வருஷத்து இந்தியன் கம்பெனிஸ் ஆக்டுப்படி 1906-ம் வருஷம் அக்டோபர் மாதம் 16-ந் தேதியில் ரிஜிஸ்டர் செய்யப்பெற்றது.

குறிப்பு: -11-1906இல் வெளியிடப்பட்டதில் சில மாற்றங்கள் உள்ளத்தைக் காண்க.

### மூலதனம்

கம்பெனியின் மூலதனம் ரூபா 10, 00, 000. இது பங்கு 1 க்கு ரூபா 25- வீதம் 40,000 பங்குக ளாக இந்தியர், இலங்கையர் முதலிய ஆஷியா கண்டத்தாரிடமிருந்து சேர்க்கப்படும்.

### அக்கிராசனரும் காரியதரிசியும்

பாலவநத்தம் ஜமீன்தாரவர்களும், மதுரைத் தமிழ்ச்சங்க அக்கிராசனரவர்களுமாகிய ஸ்ரீமான் பொ. பாண்டித்துரைசாமித்தேவர் அவர்கள்.

### டைரக்டர்கள்

ஸ்ரீ பொ. பாண்டித்துரைசாமித்தேவர் அவர்கள்

ஸ்ரீ சிவ. நல்ல பெருமாள் பிள்ளை அவர்கள்

ஸ்ரீ அ. மு. ம. அருணாசலம் பிள்ளை அவர்கள்

ஸ்ரீ. சி. ச. வ. கிருஷ்ணபிள்ளை அவர்கள்

ஸ்ரீ.பி.வெங்கிடராமானுஜலு நாயுடு அவர்கள்

திரு.சி. த.ஆ. ஆறுமுகம்பிள்ளை அவர்கள்

திரு.அ.ச. வெ. வேலாயுதம் பிள்ளை அவர்கள்

திரு.வ. அ. ஆ. ஆதிநாராயணன் செட்டியார் அவர்கள்

திரு அ. வெ. ச. வெங்கடாசலம் செட்டியார் அவர்கள்.

திரு.ஏ. ஆ. ஆ. ஆறுமுகம் செட்டியார் அவர்கள்

திரு.ந. சு.
அவர்கள்

திரு.மா. வெ. மாயநாடார் அவர்கள்

இஸ்மால் ஹாஜி அப்துல் ரகிமான் சேட் அவர்கள்

14. திரு.அ. சோலைமலைத் தேவரவர்கள் வைத்தீஸ்வரன் கோவில்

இவர்களும் 1-வது பொதுச்சபை கூட்டத்தில் (Ist ordinary Meeting) தெரிந்தெடுக்கப்படும், 20 மெம்பர்களும்.

துணைக் காரியதரிசி

மிஸ்டர் வ.உ. சிதம்பரம்பிள்ளை அவர்கள் துணைக் காரியதரிசி

சட்டாலோசனை வதிபர்கள்

மிஸ்டர் சி. விஜயராகவாசாரியார் அவர்கள், டிஸ்டிரிக்ட் கோர்ட்டு வக்கீல், சேலம்.

ஆனரெபில் மிஸ்டர் கே. ஆர். குருசாமி அய்யரவர்கள் பீ. ஏ. பி. எல். ஹைகோர்ட்டு வக்கீல், திருநெல்வேலி.

ஆனரெபில் மிஸ்டர் எம். கிருஷ்ணன் நாயர் அவர்கள் பி.ஏ.பி.எல். ஹைக்கோர்ட்டு வக்கீல், கள்ளிக்கோடு.

மிஸ்டர் பி.எல். வெங்கு அய்யரவர்கள் பி.ஏ.பி.எல் டிஸ்டிரிக்ட் கோர்ட்டு வக்கீல், தூத்துக்குடி.

### கம்பெனியின் பொக்கிஷதாரர்கள்

திருநெல்வேலி தென் இந்தியா பாங்கி லிமிடெட்

தூத்துக்குடி வ. பி. ரா. சு. ராம. அ. கடை

அ. எ. அ. கு. கடை

அ. கு. அ. கு. சோ. ம. கடை

### ரிஜிஸ்டரான ஆபீஸ்

நெ. 85, பெரிய காட்டன் ரோடு, தூத்துக்குடி

### நோக்கங்கள்

தூத்துக்குடிக்கும் கொழும்புக்கும் கம்பெனியார் தீர்மானிக்கும் மற்ற இடங்களுக்கும் ஸ்திரமாகவும் சவுகரியமாகவும் ஸ்டீமர்கள் நடைபெறச் செய்து பிரயாணத்தையும், வியாபாரத்தையும் சவுகரியப்படுத்தல்.

இந்தியர்களையும் இலங்கையர்களையும் மற்றும் ஆஷியா கண்டத்து ஜாதியார்களையும் கப்பல் நடாத்தும் தொழிலில் பழக்குவித்து, அதன் மூலம் வரும் லாபத்தை யடையும்படி செய்தல்.

இந்தியர்களுக்கும் இலங்கையர்களுக்கும் மற்றும் ஆஷியாகண்டத்து ஜாதியார்களுக்கும் கப்பல் நடாத்தும் தொழிலையும், கப்பல் நிர்மாணஞ் செய்யும் தொழிலையும் செய்து காட்டிக் கற்பித்தல்.

இந்தியா, இலங்கை மாணவர்க்கும் மற்றும் ஆஷியாகண்டத்து மாணவர்க்கும் கப்பலோட்டுந் தொழிலையும், கப்பல் நிர்மாணஞ் செய்யும் தொழிலையும் சாஸ்திர சம்பந்தமாகக் கற்பிக்கும் கலாசாலைகள் ஏற்படுத்தல்.

கப்பல் நடாத்துந் தொழிலிலும் வியாபார முறையிலும் இந்தியர்கள், இலங்கையர்கள் முதலிய ஆஷியா கண்ட வாசிகளுக்குள் ஐக்கிய பாவனையை யுண்டுபண்ணி ஒற்றுமையாக யுழைக்கச் செய்தல்.

பற்பல வியாபார ஸ்தலங்களிலுள்ள வியாபாரங்கட் கடுத்த கொள்வன, கொடுப்பன தெரிந்து கொள்வதற்காக இந்தியா, இலங்கை முதலிய ஆஷியா கண்டத் தேசத்தார்களை ஏஜெண்டுகளாக நியமித்தல்.

ஸ்டீமர்கள், ஸ்டீம் லாஞ்சுகள், படவுகள் முதலியன நிர்மாணஞ் செய்வதற்கும், அவைகளைச் செப்பனிடுவதற்கும் சுத்தப்படுத்துவதற்கும் துறைகள் ஏற்படுத்தல்.

கம்பெனியார் தீர்மானிக்கும் சுதேசீயக் கைத் தொழில்களையும் வியாபாரங்களையும் செய்தல்.

### பங்குகட்கு மனுக்கள்

பங்குகளுக்காக அனுப்பப்படும் மனுக்கள் இதனடியிற் சேர்க்கப்பட்டிருக்கும் மாதிரியில் எழுதிப் பங்கு 1க்கு ரூபாய் 5 வீதம் சேர்த்து அனுப்பப்படவேண்டும். பாக்கித் தொகை கம்பெனியார் கேட்குங் காலத்தில் செலுத்தப்படவேண்டும்.

### டயரக்டராவதற் குரியவர்

100 அல்லது அதற்கு மேற்பட்ட பங்குகளைக் கொண்ட பங்காளிகளில் ஒவ்வொருவரும் டைரக்டராவதற்கு அருகராவர்.

### ஈவுத்தொகை

தூத்துக்குடிக்கும் கொழும்புக்கும் வியாபாரமும் பிரயாணமும் நல்ல அபிவிர்த்தியான நிலைமையி லிருக்கின்றது. அதனால் கம்பெனியின் செலவுக்கும், ரிசர்வ் பண்டுக்கும் வேண்டுவன கழித்துக் குறைந்தது நூற்றுக்கு நூறுவீதம் ஈவுத்தொகை கிடைக்குமென்று கணக்கிடப்பட்டிருக்கிறது.

### மிமோரண்டமும் ஆர்ட்டிகிளும்

கம்பெனியின் மிமோரண்டமும் ஆர்ட்டிக்கிள்களும் அடங்கிய புத்தகங்கள், பங்குகளுக்கனுப்பப்பட வேண்டும் மனுப்பிரதிகள் முதலியவைகளைத் தூத்துக்குடி கம்பெனி ஆபீசிலிருந்து பெற்றுக்

கொள்ளலாம். மிமோரண்டமும் ஆர்ட்டிக்கிள்களும் அடங்கிய புத்தகத்துக்குக் கிரயம் ரூபா 0-8-0.

கரஸ்பாண்டென்ஸ் வகையறா

சகல[1] கடிதங்களும், பங்கு மனுக்களும், மணியார்டர்களும் தூத்துக்குடியிலிருக்கும் கம்பெனியின் செக்ரட்டெரி அவர்களுக்கு அல்லது அஸிஸ்டண்டு செக்ரட்டெரி அவர்களுக்கு அனுப்பப்பட வேண்டும்.

சுதேசாபிமானமுள்ள இந்தியர்களும் இலங்கையர்களும் மற்றும் ஆசியாக் கண்டத்து வாசிகளும் சுதேச நன்மை ஒன்றையே கருதி ஏற்படுத்தப் பெற்றிருக்கும் இக்கம்பெனியில் மிகுதியான பங்குகள் எடுத்தும் மற்றும் வேண்டுவன செய்தும் கம்பெனியைச் சீக்கிரம் முன்னுக்குக் கொண்டுவர வேண்டுமெனப் பிரார்த்திக்கலாயிற்று.

பங்கு மனு மசோதா

சுதேசி ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி லிமிடெட்டின் மிஸ்டர் செக்ரட்டெரி அவர்கள்.

தூத்துக்குடி.

ஐயா,

மேற்படி கம்பெனியில் நான்...பங்குகள் எடுத்துக்கொள்வதற்கு அனுமதி கொடுக்கும்படி தங்களை வேண்டிக் கொள்கிறேன். கம்பெனியின் மிமோரண்டத்திலும், ஆர்ட்டிக்-

கின்ஸ் ஆவ் அசோஷியேஷனிலும் கண்ட நிபந்தனைகளையும், ஷரத்துகளையும் நான் சம்மதித்து, என்னைப்பங்காளியாக ரிஜிஸ்டர் செய்துகொள்ள இதன் மூலமாகத் தங்களுக்கு அதிகாரம் கொடுத்திருக்கிறேன்.

கையொப்பம் தங்கள் உண்மை யுள்ள
பெயர்
(பூரா) விலாசம்
சாக்ஷி தெய் (29-12-1906)

---

## சைனாவில்
## அன்னிய தேசச் சரக்கு விலக்கம்

சைனாவில் அமெரிக்க தேசத்தாருடைய வர்த்தகம் பலத்து வருவதும், அவர்கள் அத்தேசத்தில் நாளுக்கு நாள் விருத்தியடைந்து வருவதும் தெரிந்த விஷயம். ஆனால், சைனாவானது முன்னிருந்த தூக்கத்தை விட்டு முன்னமே எழுந்து விட்டது. கொஞ்சகாலமாய் அவர்கள் அன்னிய நாட்டாரின் நடமாட்டமும் வியாபாரமும் அதிகமாய்வருவதைக் கண்டு அதை நீக்க வேண்டுமென்கிற எண்ணத்தைக் கொண்ட விஷயம் முன்னமே உலகமெங்கும் பரவிவிட்டது. முன்னமே அவர்கள் அன்னிய நாட்டுச் சரக்கை விலக்கிவிடத் தீர்மானித்திருப்பதும் அறிந்திருக்கிறோம். அந்தஊக்கத்தால் அமெரிக்க ரெயில்வே கம்பெனிக்கு நாசம் விளைத்

தும் உலகம் அறிந்திருக்கிறது. இப்படி இருக்க இம் மாதம் இரண்டாம் தேதி வந்த தந்தியால், பின் வரும் விஷயங்கள் அறியப்பட்டன:—

அன்னிய தேசச் சரக்கு விலக்கத்தின் பொருட்டாக அமைந்துள்ள சங்கத்தார் ஒன்று கூடினர். அப்போது கூடிய கூட்டம் கணக் கிடக் கூடாதது. அப்படிக் கூடி ''இனிமேல் முன்னிருந்த ஊக்கத்திலும் பன்மடங்கு அதிக மாய் கொள்ள வேண்டும். இனி அனேக புதிய வழிகளும் கொண்டு அன்னிய நாட்டின் அபி விருத்தியை முற்றும் தடுத்துவிடவேண்டும்'' என்று உக்கிரமாய்ப் பேசி அவரவர் ஆயுதம் கைக்கொண்டேனும் சுதேசியத்தை நிலை நிறுத்துவோமென ஆரவாரித்தார்களாம். அச் சபையில் பின்வரும் தீர்மானங்கள் செய்யப் பட்டன.

1. எங்கும் கைத்தொழிற் சாலைகள் ஏற் படுத்தி, அன்னிய நாட்டுச் சரக்கைத் தலை யெடுக்க ஒட்டாமல் செய்ய வேண்டும்.

2. நமது நாட்டுச் செல்வம் சிறிதேனும் வெளியில் போகக் கூடாது.

3. இச் சங்கத்தில் சேர்ந்தோ ரனைவரும் அன்னிய தேசச் சரக்கை ஜனங்கள் விலக்கும் படி அங்கங்கே தூண்டுவதற்கு உழைத்து ஜனங்களின் ஊக்கத்தை விருத்திபடுத்தி வருவார்கள்.

4. முதல்முதல் இந்த "சுதேசீய ஊக்கத்தைப் போதித்துக் காலஞ்சென்ற 'பங்க்ஹாவை' என்பவரின் உத்ஸவத்திற்கு இச் சபையே, வேண்டிய திரவியம் கொடுக்க விருக்கிறது என்கிற தீர்மானங்கள் நடந்தன.

சீனதேசம் சுய ஆட்சியைப் பெற்றிருப்பதால் இந்த விசயம் அவர்களுக்கு வெகு சுலபம். இன்னும் முற்றும் வேருன்றாத அமெரிக்கரது வியாபாரம் இவர்கள் ஊக்கத்துக்கு எதிர் நிற்பதும் கடினம். அதற்கு ராஜாங்கம் போதுமான உதவி புரியவும் காத்திருக்கின்றது. ஆகையால் அது பிடித்ததைச் சாதிப்பதற்குத் தடையே யில்லை. அதனால் நமது ஆசியாவுக்கு உண்டாகும் பெருமை பெரிதன்றோ!

கொஞ்சம் கொஞ்சமாய்க் கீழ்த் தேசத்தி லிருந்து ஆசியா விருத்திக்கு வருவது நன்றாய்த் தெரிகிறது. இந்தியாவிலும் அதேஊக்கம் தளராத தாகக் கடவுளைக் கருதுகின்றோம்.

(5-1-1907)

——

## தென்னிந்தியாவும் சுதேசீயமும்

நமது ராஜாங்கத்தார் வங்காள ஜனங்களின் அபிப்பிராயத்துக்கு விரோதமாய் இரு பிரிவாக் கினதே சுதேசீய முண்டானதற்குக் காரண மெனச்

சிலர் அபிப்பிராயப்பட இடமுண்டு. சுதேசீய மென்றாலென்ன? தனது தாய் நாட்டின்கண் உண்டாகும் பேரன்பே சுதேசீயம். அந்த அன் பானது ஒரு மனிதன் பிறக்கும்போதே உடன் தோன்றி விடுகிறது. ஒரு ஊரில் பிறந்தவன் அந்த ஊர் புல்பூண்டு முளையாத பாழ்நிலத்தி லமைந் திருப்பினும் அதைப் பல விதமாய்ப் புகழ்ந்து பேசுவது வழக்கம். அதன்காரணம் அந்தமண்ணில் பிறந்ததாலுண்டா யிருக்கும் பேரன்புதான்.

ஒருஊரில் பிறந்த மிருகங்களும் அந்த ஊரின்கண் அளவில்லா அபிமானத்தை யடைகின்றன. ஒரு ஊரிலிருந்து விலைக்கு வாங்கின மாடானது வெகுதூரம் கொண்டு போகப்பட்டபோதிலும், வழி யறிந்து அந்த ஊர் வந்து சேருவது வழக்கம். ஆகையால் இச் சுதேசியம் உண்டானதின் காரணம் பங்காளப்பிரிவினை யென்பதையே நாம் ஓர் காரண மாய்க் கொண்டால், இதைவிடப் பெருஞ்செயல்கள் செய்திருக்கும் போதெல்லாம் நாம் ஏன் சும்மா விருந்தோம்? இதை ஆலோசிக்குமிடத்தில், சுதேசீய மென்பது என்னாட்டிலும் எப்போதும் குடிகொண்டுள்ள தென்பது புலப்படுகின்றது.

ஆனால் நமது தேசத்தில் அன்னிய அரசாட்சி யின் கொடுமையால் சுதேசத் தொழில்களும் ஊக்கங்களும் குறையத் தொடங்கி அந்த அன்னிய நாட்டுக் கைத்தொழிலே அபிவிருத்தி யடைந்து வரத் தொடங்கிவிட்டது! நமது நாசத்தை முற்றும் கோறினவரென ஜனங்களுக்கு நன்கு புலப்பட்ட

தாகையால் அச் சுதேசீய ஊக்கத்தைக் கைக் கொண்டனர். அது இந்தியா முழுதும் பரவி எழுத்தறியா ஏழைகளும் அதனுண்மையை அறிந்து அதைப்பற்றிப் பெரும்பேச்சுகள் பேசத் தொடங்கிவிட்டனர்.

ஆனால் தென்னிந்தியா அதன்பால் கொண் டிருக்கும் ஊக்கம் எவ்வளவென்பதை யோசிப் போம். இத் தென்னிந்தியாவில் வங்காளத் தவ்வளவு ஊக்கம் இல்லை எனவும், எல்லோ ரிடத் திலும் தேசாபிமானம் ஊன்றவில்லை எனவும் சிலர் பேசுவதைக் கேட்டு விஸனிக்கிறோம். தென்னிந்தி யாவில் சுதேசீயம் எப்போதும் குடிகொண்டிருக் கின்றது. வங்காளிகளைப் போல் வாய்க் கூச்சல் போட ஒருவருமில்லை என்றாலும் உள்ளாழ்ந்த சுதேசிக ளென்பதில் சந்தேகமில்லை. தென் தேசத்து ஸ்திரீகளனைவரும் பரதேசத்துத் துணி உடுப்பதில்லை என்றால் ஜனத்தொகையில் ஏறக் குறைய பாதிபேர் சுதேசிக ளல்லவா? ஆடவர் களிலும் அனேகமாய் எல்லோரும் சுதேசத் துணிகள் உடுத்துவதை யாம் கண்ணறியக் காண் கிறோம். ஆனால் சில சில்லரைச் சாமான்கள் மாத்திரம் அன்னிய தேசத்திலிருந்து உபயோகப் பட்டு வருகிறது. அதையும் விலக்கத் தொடங்கி யிருக்கின்றனர்.

இச் சுதேசியம் முக்கியமாய்த் தென் னிந்தியாவில் திருநெல்வேலி ஜில்லாவில் நன்றாய் வேரூன்றி விட்டது. நாளுக்குநாள் அங்கே விருத்தி

யாய் வருகிறது. B. I. S. N. என்கிற கம்பெனி யுடன் போட்டி போட்டு வெற்றி பெற்றுவரும் சுதேச நாவிகேஷன் கம்பெனியே தென்னிந்தியர் களுடைய விடாமுயற்சியை மேன்மேலும் விருத்தி படுத்திவரும். அக் கம்பெனியின்பால் அன்பு பூண்டு உழைத்துவரும் தூத்துக்குடி வர்த்தகர்களின் பெருமை விருத்தி யடைவதாகக் கடவுளைப் பிரார்த்திக்கின்றோம்.

— —

## அன்னிய நாட்டுச் சரக்கை விலக்குவதில் உறுதி

பஞ்சாப் தேசத்தில் தாசில் என்னும் பட்டணத்தில் அயல் தேசத்துச் சர்க்கரையை வாங்கக்கூடா தெனத் தீர்மானித்திருந்தனர். அவ்வூரில் மூன்று வர்த்தகர்கள் மாத்திரம் அயல் தேசச் சர்க்கரை வியாபாரஞ் செய்துவந்தனர். பஞ்சாப் தேசத்தில் அந்தந்த ஊரிலும் "பஞ்சாயித் தோரால்" எந்தக் குற்றங்களும் கவனிக்கப்பட்டு, சீர்திருத்தங்கள் நடக்கவேண்டும். நமது நாட்டில் கூட கிராமங்களில் அப்படிப்பட்ட "பஞ்சாயித்" கூட்டத்தார் கூடுவதை நாம் பார்த்திருக் கின்றோம். ஆகையால் அதன் வித மின்ன தென்பதை யாம் சொல்ல வேண்டுவ தில்லை.

அந்தப் பஞ்சாயித்தார் அவ் வர்த்தகர்களின் செய்கையைக் கேட்டதும் அவர்களை வரவழைத்துக் கேட்டதில் அதில் இரண்டுபேர் தங்கள் தப்பை ஒப்புக்கொண்டு இனிச் செய்கிற தில்லை என உறுதி கூறி, எந்தத் தண்டனைக்கும் உட்படுவதாய் ஒப்புக்கொண்டனர். இருவருக்கும் பத்து பத்து ரூபாய் அபராதம் விதித்து அவர்களை அனுப்பி விட்டார்கள். மூன்றாவது வியாபாரியோ அதிகப் பணக் கொழுப்புடையவ னாகையால் பஞ்சாயித்தாருக்கு கீழ்ப்படியாமல் "நீங்கள் என்ன செய்தாலும் என்னுடைய வியாபாரத்தை நிறுத்த மாட்டேன்" என இறுமாப்பாய்ப் பேசினான்.

பிறகு பஞ்சாயித்தார் இவனுடன் வியாபாரம் செய்பவர்களனைவரையும் கூப்பிட்டு இனி இந்த வர்த்தகனுடன் வியாபாரமே செய்யக்கூடாதென்று கட்டளை யிட்டனர். அதற்கு எல்லோரும் உடன்பட்டனர். மறுநாள் ஏராளமான பஞ்சு மூட்டைகள் அவனுக்கு விற்கும்படியாய் வந்திருந்தும், அதை ஒருவரும் வாங்கவில்லை. மறுநாள் உடம்பு ரொம்ப அசௌக்கியமாம். மருந்து வாங்க ஷாப்புக்குச் சென்றபோதுமருந்துகிடைக்காமல் போய்விட்டது. பிறகு இவனுடைய கதி என்ன?எங்கு பார்த்தாலும் இவனுக்கு விரோதிகளாகவே இருந்தனர். இதையெல்லாம் கண்டவுடன் பணக் கொழுப் பெல்லாம் அடங்கி இனி வேறு கதியில்லை என பஞ்சாயித்தாரை வந்து அடைந்து, "என்னை மன்னித்து விடவேண்டும். யான்செய்ததெல்லாம் பிசகு. இனிக் குற்றம்செய்வதேயில்லை" என்று முறையிட்டனன்.

பஞ்சாயித்தார் மனமிரங்கி 50ரூபாய் அபராதம் விதித்ததுடன் அவனிடத்திலிருந்த அயல் நாட்டுச் சர்க்கரை முழுதையும் திருப்பி அனுப்பிவிட்டனர். அன்னிய தேசச் சரக்கை விலக்குவதில் பஞ்சாப் தேசத்தார் அவ்வளவு உறுதி கொண்டிருக்கிறார்கள்.

இந்தியாவில் ஒவ்வொரு பட்டணங்களிலும் கிராமங்களிலும் அம்மாதிரியான கட்டுப்பாடு ஏற்பட்டு என்றைக்குத்தான் பொது நன்மைக்கு ஒருமுகமாய் நின்று உழைப்பார்களோ தெரியவில்லை. நமது தேசக் கிராமவாஸிகளும் அம்மாதிரியே பஞ்சாயித் கூடி, அந்தந்த கிராமத்தில் வெளிநாட்டுச் சரக்கு வாங்கக் கூடாதென்று கட்டாயப்படுத்த வேண்டும்.

(12-1-1907)

---

## சுதேச எச்சரிக்கைக் கமிட்டி

சென்ற 12-ந் தேதியன்று கல்கத்தாவில் கூடிய ஒரு பெரிய கூட்டத்தில் பாபு சுரேந்திரநாத் பானர்ஜி ஒரு பிரசங்கஞ் செய்தார். அதில் வங்காளத்திலுள்ள ஒவ்வொரு பட்டணத்திலும் ஒவ்வொரு கிராமத்திலும் சுதேசீயக் கமிட்டியொன்று ஸ்தாபிக்க வேண்டுமென்றும், இந்தக் கமிட்டியார் தத்தமூரின் சுதேசீயத்தைப் பற்றிய

பிரசங்கங்கள் செய்து அந்நிய நாட்டுச் சரக்கை வர வொட்டாது தடுப்பதற்கு வேண்டிய முயற்சி செய்ய வேண்டு மென்றும் பேசினார். அவ்வாறே வங்காளத்தில் ஒவ்வொரு பட்டணத்திலும் ஒரு கமிட்டி ஏற்படப் போகின்றது. அந்நிய சரக்கை விலக்குவதற்கு என்னென்ன முயற்சிகள் செய்ய வேண்டுமோ அம் முயற்சிகளைச் செய்வார்கள்.

இவ்விதம் சென்னையிலுள்ள ஒவ்வொரு பட்டணத்திலும் ஒருகமிட்டிஏற்பட்டு சுதேசியத்தை விர்த்தி செய்யுமானால் மிகவும் நன்றாயிருக்கும்.

(19-1-1907)

---

## தூத்துக்குடி சுதேசிய ஸ்டீமர் கம்பெனி

தூத்துக்குடியைத் தென் இந்தியாவின் பாரிஸாய் என்று கூறலாம். அதிலும் முக்கியமாக, ஸ்ரீ. வி. ஒ. சிதம்பரம் பிள்ளை சுதேசியத்தின் பொருட்டு எடுத்துவரும் முயற்சிகள் மிகவும் வியந்து பேசுதற்குரியன. ஸ்டீமர்கள் விலைக்கு வாங்குவதிலே ஆரம்பத்தில் மேற்கூறப்பட்டிருக்கும் கம்பெனியாருக்குச் சிறிது சிரமம் ஏற்பட்டது. அதன் பேரில் ஷை கப்பெனியின் துணைக்காரிய தரிசியாகிய ஸ்ரீ.V.O. சிதம்பரம் பிள்ளை எவ்வளவு சிரமங்கொண்டேனும் கப்பல்கள் வாங்காமல் திரும்புவது கிடையா தென்ற மன வுறுதியுடன்

பம்பாய்க்குப் புறப்பட்டனராம். கடைசிவரை இவர் மனநோக்கம் நிறைவேறி விட்டது பற்றி மிகவும் சந்தோஷமடைகின்றோம். சென்னை ''சுதேசமித்திரன்'' பத்திரிகைக்கு ஸ்ரீ. சிதம்பரம் பிள்ளை பின்வருமாறு எழுதியிருக்கின்றார்:

''நமது 'சுதேசிய ஸ்டீமர் நாவிகேஷன் கம்பெனி லிமிடெட்டு'க்குச் சென்ற டிசம்பர் மாதம் 22-ந் தேதியில் கிரயத்துக்கு வாங்கப் பெற்ற ஸ்டீமர் நிகழும் ஜனவரி மாதத்தில் தூத்துக்குடி வந்து சேருமென சுதேசப் பத்திரிகைகளில் கூறியிருந்தோம். ஆனால், ஸ்டீமரின் சொந்தக்காரர் ஸ்டீமரைப் புதுப்பித்து நமக்கனுப்ப வேண்டுமெனக் கருதி, ஸ்டீமரை செப்பனிடுங் களத்துக்கனுப்பி ஸ்டீமரில் சில வேலைகள் செய்த நிமித்தமாக, ஸ்டீமர் முன் குறித்த தேதியில் ஐரோப்பாவை விட்டுப் புறப்படவில்லை. இப்பொழுது ஸ்டீமரின் வேலைகளெல்லாம் முடிந்துவிட்டனவென்றும், ஸ்டீமர் வருகின்ற பிப்ரவரி மாதம் 4-ம் தேதியில் ஐரோப்பாவினின்றும் புறப்பட்டு மணி ஒன்னரைக்கு 12 அரை மைல் விரைவில் பம்பாய்க்குப் பிப்ரவரி மாதம் முடிவுக்குள் வந்துசேருமென்றும் ஸ்டீமரின் சொந்தக்காரர்களுக்குத் தந்திகளும் நிருபங்களும் வந்திருக்கின்றன.

நிகழும் ஜனவரி மாதம் 24-ந் தேதியில் கிரயத்துக்கு வாங்கப்பெற்ற ஸ்டீமரும்,

இன்னும் இரண்டு தினங்களில் கிரயத்துக்கு வாங்கப்பெறும் இரண்டு ஸ்டீம் லாஞ்சுகளும் பிப்ரவரி மாதம் 10-ம் தேதிக்குள் ஐரோப்பாவை விட்டுப் புறப்பட்டுப் பிப்ரவரி மாதம் முடிவுக்குள் பம்பாய் வந்து சேரும். மார்ச் மாத முதல் கம்பெனியின் ஸ்டீமர்கள் தூத்துக்குடிக்கும், கொழும்புக்கும் தினசரி நடைபெறும். ஸ்டீமர்களுடையவும், ஸ்டீம் லாஞ்சுக்களுடையவும் பெயர்களையும் இருப்பிடங்களையும் குறித்துத் தற்காலஞ் சொல்லா திருத்தல் நலமென்று தோன்றியதாக, இதுகாறும் அவைகளைப் பத்திரிகைகளில் வெளிப்படுத்தாது விட்டனம். இன்னும் சில தினங்களில் ஸ்டீமர்கள், ஸ்டீம் லாஞ்சுகள் சம்பந்தமான யாவற்றையும் நமது ''மித்திரனில்'' வெளிப்படுத்தக் காத்துக் கொண்டிருக்கின்றோம்.''

(2-2-1907)

—

## சுதேசியத்தைப்பற்றி டாக்டர் ஏ. கே. குமாரஸாமியின் கருத்து

சென்ற வாரம் புதன்கிழமை மாலை சென்னை மஹாஜன சபை மண்டபத்திலே டாக்டர் ஏ. கே. குமாரஸாமி ''இந்தியக் கைத்தொழில்கள் சித்திர

வித்தைகள் என்பவற்றிற்கு மேல்நாட்டு நாகரீகத்தால் ஏற்பட்ட பயன்'' என்ற விஷயத்தைப் பற்றி உபந்நியாசம் புரிந்தார்.

டாக்டர் குமாரஸாமி கொழும்புவாசி. ஆனரபில் ராமநாதனுக்கு சமீப பந்து. இவர் உபந்நியாசஞ் செய்தபோது மிஸ்டர் சங்கரன் நாயர் அக்கிராசனம் வகித்தார். ஆங்கிலேய ராஜாங்கம் வந்தபிறகு இந்நாட்டுச் சித்திர வித்தைகளும், கைத்தொழில்களும் வீணாக அழிந்து போய் விட்டதைப்பற்றி குமாரஸாமி மிகவும் உருக்கத்துடன் விஸ்தாரமாக ஒரு மணி நேரம் பிரசங்கம் புரிந்தார். நமது மூதாதைகளின் டம்பமற்ற உடையையும், வழக்கங்களையும் பற்றி வியந்து பேசினார். உபயோக மற்றவையும், வீண் டம்ப முடையவையு மாகிய ஆடைகளையும், வழக்கங்களையும் விரும்பலாகாதென்று வற்புறுத்தினார். சுதேசீய முயற்சி வெறுமனே துணிகள், ராஜ்ய உரிமை என்ற விஷயங்களில் மட்டுமே அடங்கிவிடலாகா தென்றும், சுதேச பாஷை, சுதேசப் பயிற்சி, சுதேச ஒழுக்கம் முதலிய எல்லா வற்றிலும் பரவவேண்டுமென்றும் அபிப்பிராயப் பட்டார். இவர் தமது விவகாரங்களைத் தக்க திருஷ்டாந்தங்களுடன் நன்கு விளக்கினார்.

ஆனால், அன்னிய தேசவஸ்துக்களை யெல்லாம் பொதுப்படையாக விலக்கிவிடக் கூடாதென்றும், அவற்றுள்ளும் நல்ல பதார்த்தங்களை

நாம் வாங்கிக் கொள்ளவேண்டும் என்றும் சொல்லவந்த இவர், அன்னிய வஸ்து பஹிஷ்காரம் இன்ன காரணத்தின் பொருட்டு ஆரம்பித்திருக்கிற தென்பதை நன்கு அறிந்துகொள்ள வில்லை யென்று தோன்றுகிறது. ரெயில் வண்டியையும், தந்தியையும், இங்கிலீஷ் புஸ்தகங்களையும் விலக்கிவிட இப்போது காலம்வந்து விட்டதென்று நாம் சொல்லுகிறோமா? நமது ஆஹாரத்திலும் வஸ்திரத்திலும் அன்னியர்கள் கை வைக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்றுதானே நமது முதற் கோரிக்கை ஏற்பட்டிருக்கிறது! இதில் அன்னிய வஸ்திரங்கள் ஒருவேளை விசேஷமாயிருந்தாலும் நமக்கு வேண்டியதில்லை யென்று சொல்லுகிறோம். இவ்வாறு சொல்வதின் காரணங்கள் இன்னவென்பதையே சென்ற இரண்டு வருஷங்களாகச் சுதேசிகள் மூலைக்கு மூலை ஓயாமல் முறையிட்டு வருகிறார்கள். இக்காரணங்களுக்கு டாக்டர் குமாரஸ்வாமி என்ன மறுமொழி சொல்லுகிறார்?

(2-2-1907)

---

## அம்பட்டர் சுதேசீயம்

சில தினங்களுக்கு முன் பாரிஸால் பட்டணத்திலுள்ள அம்பட்டர்களெல்லாம் ஒரு கூட்டம் கூடி சுதேசி யல்லாத சாமான்களைத் தாங்கள்

உபயோகிப்பதில்லையென்று சத்தியம் செய்தது மன்றிப் பரதேசிச் சாமான்களை உபயோகிப்பவர்களுக்கு க்ஷவரம் செய்வதில்லையென்றும் தீர்மானித்து விட்டார்கள். இதை இதர மாகாண சுதேசிகள் தயவுசெய்து கவனிக்க வேண்டும்.

(2-2-1907)

——

## ஜய ஜய சுதேசியம்!

சுதேசீயம் பூரணமான ஜெயம் பெற்று விட்டதென்பதில் ஒரு அணுவும் சந்தேகமில்லை. இந்தியாவிலுள்ள ஸர்வ ஜனங்களும் சுதேசீயத்தை ஒத்துக்கொண்டார்கள். டெக்காவிலுள்ள மகமதியர் சுதேசீயக் கிளர்ச்சி கொண்டு நிற்கின்றார்கள். டெக்காவில் மகமதியர்கள் எத்தனையோ சுதேசீயக் கூட்டங்கள் கூடி சுதேசீயப் பிரதிக்ஞைகள் செய்து கொண்டார்கள்.

இந்துக்கள், மகமதியர்கள், பார்ஸிகள், சீக்கியர்கள், சமணர்கள் ஆகிய எல்லா மதஸ்தர்களும் தங்களுக்கெல்லாம் பொதுவான ஜனன மாதாவாகிய இந்தியாவின்மேற் பக்தி காட்டத்தொடங்கி விட்டார்கள். இனி ஒருவர் தயவும் வேண்டியதில்லை. இனி யார் என்ன சொன்னாலும் பரங்கிகளும் பரங்கிப் பத்திரிகைகளும் நம்மை எவ்விதம் நகைத்துக் கேலி செய்தாலும் நாம் பயப்பட வேண்டியதில்லை.

இந்தியாவின் மக்களாகிய எல்லா மதத்தினரும் ஒன்று சேர்ந்து கொண்டார்கள். சர்வேசுவரனும் நமது பக்கமே நிற்கின்றார். இந்தியாவுக்கு நற்காலம் வெகு சீக்கிரத்தில் உண்டாகப்போகிறதென்பதற்கு இனிச் சாக்ஷியும் வேண்டுமா?

(16-2-1907)

---

## சுதேசீயம்

இது விஷயமாய் சென்ற சில வருட காலங்களாக இந்தியா முழுமையும் முயற்சிகள் நடந்து வருகிறது. கனம் கோகலே, விபின சந்திரபால், திலகர், ஜி. சுப்பிரமணிய அய்யர், லாலா லஜபதிராய் ஆகிய இவர்களும் இன்னும் சில இந்திய சிரோன்மணிகளும் அடிக்கடி ஊர் விட்டு ஊர் போய் ஜனங்கள் உணரும்படி பிரசங்கங்கள் செய்து வருகிறார்கள். ஆனால், இவர்கள் மாத்திரம் தங்களுக்கு ஒய்வுண்டான போது சென்று பிரசங்கங்கள் செய்தால் போதுமா? போதாது.

சிலசிறுவர்கள் சேர்ந்துகொண்டு வேறு வேலையில்லாமல் இந்திய விஷயங்களை நன்றாய்ப் படித்துக்கொண்டு அந்தந்த மாகாணத் தலைவருடன் கலந்து கொண்டு தினப்படி ஒரு இடத்தில் நின்று தெளிவாய் ஜனங்களுக்குச் சொல்லி,

அவர்கள் நடக்க வேண்டிய பாதையையும் காண்பித்து அவர்கள் தெரிந்து கொள்ள வேண்டியவைகளையும் சொல்லிக் கொடுக்க வேண்டும். இவ்விதம் ஓயாமல் செய்தாலல்லாது எல்லோரும் இந்த முயற்சியின் சரியான கருத்தைத் தெரிந்து கொள்வது உண்டாக மாட்டாது. அதற்காகச் சென்னையில் படித்த சிறுவர்களில் நால்வரைச் சேர்த்து, அவர்கள் காலையில் மிஸ்டர். ஜி. சுப்பிரமணிய அய்யர், மிஸ்டர் கோவிந்தராகவய்யர் இவர்களைப் போன்றவர்களைப் பார்த்து அபிப்பிராயங்களைக் கலந்துகொண்டும், பகலில் வெளி மாகாணங்களில் சுதேச கூட்டங்களில் பேசப்படுவதைப் படித்து அந்த மாகாணத் தலைவர்களுடைய அபிப்பிராயங்களையும் படித்துத் தெரிந்துகொண்டும் சாயங்கால வேளையில் முக்கியமான இடங்களுக்குச் சென்று ஜனங்களுக்கு உபந்நியாசம் செய்வதே சரியாகும். இந் நான்கு பேர்களையும் மாதச் சம்பளத்தில் அமர்த்திக்கொண்டு அவர்கள் வெளி ஜில்லாக்களில் போய் பிரசங்கங்கள் செய்யும் போது அவர்களுக்கு வழிச்செலவும் படியும் நன்றாகக் கொடுத்து சென்ற விடத்தில் அவர்களுக்கு ஒரு விதமான அபிப்பிராயப் பேதங்களால் தொந்தரவு உண்டாகாமலும் பார்ப்பது சென்னை கமிட்டியாரின் வேலையாகும்.

இவ்விதம் இரண்டு வருஷம் விடாமல் முயற்சி செய்வோமானால் இந்த ராஜதானி முழுமையும் சுதேசீயம் பரவி எல்லோரும் தேசத்தின் நன்மை

யையும், பெருமையையும், கீர்த்தியையும், அவர்களுடைய மேன்மையையும் நாடியே நடந்து கொள்ளுவார்கள். நான் சென்ற காங்கிரஸ் காலத்தில் கல்கத்தா நகரம் சென்று அங்கு நடந்து வரும் முயற்சியையும் அங்குள்ளவர்களுக்கு உண்டாயிருக்கும் ஊக்கத்தையும் பார்த்ததில் நாம், அதே விஷயமாய் படும் கவலை மெத்த குறைவெனச் சொல்லவேண்டும். இவ்விதம் நான்கு சிறுவர்களை மேற்சொல்லிய அலுவலில் அமர்த்தி இரண்டு வருஷம் நடத்தச் செலவு மாதம் 1-க்கு ரூபா 200 ஆகலாம். இது ஒரு பெரிய தொகையல்ல. சென்னை கமிட்டியாருக்கு நம் மாகாணத்திலுள்ள 200 கனவான்கள் மாதம் 1க்கு ரூபாய் ஒன்று வீதம் அனுப்பினாலும் இந்தப் பெரிய காரியம் நடந்துவிடும். இந்தத் தொகை பெரிதல்லவாகையால், நம் பெரியோர்கள் இம் முயற்சியை எடுத்துக்கொள்ளவேண்டு மென்பதாகக் கேட்டுக் கொள்ளுகிறேன். நாம் அமர்த்தும் சிறுவர்கள் அனுபோகம் பெற நமக்கு மெத்த உதவியாகும். எப்படியெனில், மகா ஜனங்கள் யாவரும் தெரிந்து கொள்ளும் பொருட்டும், சட்ட நிரூபண சபை சமாசாரங்களையும், அவ்விடத்தில் நடக்கும் நடவடிக்கைகளையும், அப்படியே முனிசிபல் கார்பரேஷனில் நடக்கும் நடவடிக்கைகளையும் அப்போதப்போது எடுத்துக்காட்டுவார்கள். இது வரையில் அம்மாதிரி எடுத்துச் சொல்ல ஒருவருமில்லாமல் அநேகர் அவைகளைப் பற்றி ஒன்றும் தெரியாதவர்களாய் இருந்து வருகிறார்கள்.

ஆகையால் நண்பர் யாவரும் இம் முயற்சியை அனுஷ்டானத்துக்குக் கொண்டுவரவேண்டியது.

(டி. எஸ். நடேசய்யர்)

(16-2-1907)

---

## பரோடா காயக்வார் மகாராஜாவும் சுதேசியமும்

பரோடா காயக்வார் மகாராஜா தமது ஜுபிலி உற்சவத்தின்போது சுதேசீயத்தைப்பற்றி ஓர் உபந்நியாசம் புரிந்தார். அப்போது அவர் சொன்னதாவது:

"இந்தியா ஒருபோதும் கைத்தொழில் செய்து அளவற்ற செல்வம் வளர்த்துச் செல்வத்தைப் பாராட்டுவதே பெருமையென்று நினைக்கவில்லை. அற்பப் பொருளாகிய செல்வமே முக்கியப் பொருளென்று இனி எப்போதும் நினைக்கப் போவதும் கிடையாது. ஆனால் இந்தியா கைத்தொழில் விஷயத்தில் சுயாதீனம் பெற முயன்றால்தான் இப்போதிருக்கும் தாழ்ந்த நிலை மாறி மற்ற தேசவாஸிகளுடன் சமான நிலைமையை யடையலாம். இதற்குக் கைத்தொழில் புரிந்து செல்வமேற்படுத்திக்கொள்வதே தக்க அஸ்திவாரமாகும். அன்னியரைச் சார்ந்திராமல்

செல்வ நிலை விஷயத்தில் ஸ்வதந்திரம் பெற்றிருக்கவேண்டுமென்ற ஆசையே இப்போது எல்லா இடங்களிலும் ''சுதேசியம்'' என்று புகழ்மிகுந்து விளங்குகின்றது. இந்த சுதேசியமில்லாமல் ஒரு தேசமும் அபிவிருத்தியடைய முடியாது.''

கவர்ன்மெண்டாரின் அதிருப்திக்குப் பயந்து, சுதேசியத்திற்கு விரோதிகள் போல நடித்துக் கொள்ளும் கோழைப் பிரபுக்கள் சக்ரேசனாகிய பரோடாமகாராஜாவின் வசனத்தைக்கவனிப்பார்களென நம்புகிறோம்.

(16-3-1907)

---

## சேலத்தில் சுதேசியம்

சேலத்தில் சுதேசிய ஊக்கம் மிகவும் மும்முரமாயிருப்பதாய்க் கேள்விப்பட்டு மிகவும் சந்தோஷமடைகின்றோம். சென்ற வெள்ளிக்கிழமை யன்று பொதுஜன ஒரு பெரிய கூட்டம் கூடியதில் மிஸ்டர் ராஜகோபாலாசாரியார் அக்கிராசனம் வகித்தார். ஒரு சுதேச பண்டகசாலை ஸ்தாபிக்கப்பட்டது. சுமார் 120 பங்குகளுக்கு மேல் சேர்க்கப்பட்டது.

இன்னொரு பொது ஜனக் கூட்டமும் கூட்டப்பட்டது. அதில் மிஸ்டர் நரசிம்மய்யர் சுதேசியத்தைப் பற்றிப் பொது ஜனங்களுக்கு ஒரு பெரிய

பிரசங்கம் செய்தார். எல்லா ஜனங்களும் இது முதல் சுதேசிய வஸ்துக்களையே உபயோகிப்ப தாய் வாக்களித்து அதற் கடையாளமாகக் கையைத் தூக்கினார்களாம். இரவில் சௌராஷ்டிர ஜாதியாருடைய ஒரு பெரிய கூட்டம் நடந்தது. இதிலும் மிஸ்டர் நரசிம்மய்யரும் மிஸ்டர் வீர ராகவசாரியாரும் வேறு சிலரும் சுதேச பிரசங் கங்கள் செய்தார்கள்; சுதேசியப் பிரதிக்ஞை செய்து கொண்டார்கள். சுதேசிச் சாமான்களையே வாங்கவேண்டு மென்பதை ஒரு ஜாதிக் கட்டாக்க வேண்டுமென்று சௌராஷ்டிரர்கள் தீர்மானித் திருக்கிறார்கள்.

(23-3-1907)

---

## சுதேசீய நிதியும் தொழிற் சங்கமும்

மேற்படி நிதி காரியதரிசிகள் நமக்குப் பின்வரு மாறு எழுதுகின்றார்கள்:-

சுதேசிய நிதியின் பெரும்பான்மை அர்ப்பத்னெட் அவுசில் முழுகிப்போன போதிலும் மீதியிருக்கும் சொற்பத்தொகையில் சோப், மெழுகுவர்த்தி, தீவத்தி, பென்சில், சிமிண்ட் இவைகளைச் செய்யும் விதத்தைத் தெரிந்துகொண்டு வரும்படி பி.ஏ பரீட்சையில்

சாஸ்திர வகுப்பில் தேர்ந்த ஒருவரை சுதேசிய நிதி தொழிற் சங்கத்தார் ஜப்பானுக்கு அனுப்பி இருக்கிறார்கள். இவர் ஒரு வருஷம் அவ்விடம் போய் படித்து மேற்கண்டவைகளைக் கற்றுக் கொண்டு வரவேண்டும் என்றும், கற்றுக் கொண்டுவந்து இவ்விடத்தில் மேற்படிவேலை களைச் செய்யவேண்டும் என்றும், மாசம் ஒன்றுக்கு 50-ரூபாய் மேனிக்கு ஒரு வருஷத்துக்கு 600-ரூபாய் ஸ்காலர்ஷிப் கொடுத்து ஜப்பானுக்குப் போகவர ரயில்வே சார்ஜ் முதலானதும் கொடுத்து மேற்படி சங்கத்தார் ரூபாய் 1300- வரையில் செலவுடன் இவரை அனுப்பி யிருக்கிறார்கள். இன்னும் வேறொருவரையும் ஏப்ரல் மாசம் முதல் வாரத்தில் அனுப்பப் போகிறார்கள்.

இதுவுமன்றி, மாசம் ஒன்றுக்கு 25-ரூபாய் ஸ்காலர்ஷிப் கொடுத்து பி. ஏ. பரீட்சையில் அல்லது எப். ஏ. பரீட்சையில் தேர்ந்த இருவரை பம்பாய் டெக்னிகல் இன்ஸ்டிடியூட் அல்லது வேறே இந்தியாவில் உள்ள இன்டஸ்டிரியல் ஸ்கூலுக்கு அனுப்பி நெசவுத் தொழிலில் பயிற்சி செய்யத் தீர்மானித் திருக்கிறார்கள். இதுவுமன்றி இவ்விடம் மிஸ்டர் தியாகராய செட்டியார் வைத்திருக்கும் நெசவுச்சாலையில் நெசவுத் தொழில் வகுப்பாரைச் சேர்ந்த 6 சிறுவர்களுக்கு ஸ்காலர்ஷிப் கொடுத்துவிசை தாடாத்தறியில் பயிற்சி செய்ய உத்தேசித்

திருக்கிறார்கள். வடக்கு தேசத்திலிருந்து ஒருவர் வந்து மாசம் 10 ரூபாய் ஸ்காலர்ஷிப் பெற்றுக்கொண்டு மேற்படி நெசவுச்சாலையில் தேர்ச்சி அடைந்து கொண்டு வருகிறார்,

காஞ்சிபுரத்திலும், திருநெல்வேலியிலும் நடந்த பொருட் காட்சியில் விசை நாடாத் தறியில் நெசவு செய்வதில் தேர்ச்சி அடைந்த வர்களுக்கு ரூபாய் 2/5 வரையில் வெகுமானம் கொடுத்திருக்கிறார்கள். காஞ்சிபுரத்தில் ஒரு நெசவுச் சாலையில் நெசவுப் பிள்ளைகளுக்கு அத் தொழிலைச் சொல்லி வைக்கும்படி ஒரு வாத்தியாருக்கு மாசம் 12 ரூபாய் சம்பளம் கொடுத்து வருகிறார்கள். தொழிற் சங்கத்தார் வசம் தற்காலம் இருக்கும் சொற்ப நிதியைக் கொண்டு, மேற்கண்டவைகளைச் செய்து கொண்டு வருகிறார்கள். தொகை ஜாஸ்தி இருக்கும் பட்சத்தில் இன்னும் அனேக காரியங்கள் செய்யக்கூடும்.

சென்ற தீபாவளி பண்டிகையில் வசூலான பணம் இன்னம் பூராவாகவும் வந்து சேர வில்லை. கொஞ்ச நாளைக்கு முந்தி பெர்ஹாம் பூர், திருநெல்வேலி முதலிய இடங்களில் இருந்து தொகை அனுப்பப்பட்டது. இன்னும் முக்கிய பட்டணங்களாகிய விசாகப்பட்டணம், நெல்லூர், குண்டூர், ஒங்கோல், மசூலிப் பட்டணம், கள்ளிக் கோட்டை முதலான

இடங்களில் இருந்து சென்ற தீபாவளியில் வசூலான பணம் வரவில்லை.

மேற்படி தொழிற் சங்கத்தார்கள் வருஷ மஹோற்சவ தினம் சமீபித்து விட்டபடியால் அந்த தினத்தில் நிதியின் மொத்தவரவு செலவு கணக்கு தயார் செய்து சபையாரின் முன்பாகப் படித்துக் காண்பிக்க வேண்டிய திருக்கிறபடியாலும் சென்ற தீபாவளி பண்டிகை தினம் கஷ்டம் எடுத்துக் கொண்டு வசூல் செய்த கனவான்கள் மேற்படி வசூலைச் சீக்கிரம் அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

சென்ற வருஷம் விவாகம் முதலிய சுப காரியங்களில் தேசாபிமானிகளால் சுதேசீய நிதிக்குக் கிடைத்த ரூபா 850. இந்த வருஷமும் தேசாபிமானிகள் மிகவும் ஊக்கத்துடன் உழைத்து மேற்படி விவாக முதலிய சுப காரியங்களில் பணம் வசூல் செய்து அனுப்பும்படி கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள். மேற்படி தினங்களில் நூறு, ஆயிரம் கணக்காய் செலவு செய்யும் கனவான்கள் ஏழைகளின் நன்மைக்காக ஏற்பாடா யிருக்கும் நிதிக்குத் தங்களால் கூடியவரையில் தர்மம் செய்ய மன வருந்த மாட்டார்கள். ஆசார்ய சம்பாவனை, ராஜ சம்பாவனை முதலிய சம்பாவனைகளில் தேச சம்பாவனை ஒன்று அவசியம் ஏற்படுத்தப்பட வேண்டும் என்பது எங்களுடைய கோரிக்கை.

இந்தக் கோரிக்கையைத் தேசாபிமானிகள் நிறைவேற்றுவார்கள் என்று நம்புகிறோம்.

(30-3-1907)

---

## ஜயபூரில் சுதேசீயம்

ராஜபுதனத்தில் இருக்கும் ஜயபூர் வாசிகள் மிகவும் கர்னாடகமான ஜனங்கள். புதிய வழிகளிலும் புதிய மாதிரிகளிலும் இவர்களுக்குப் பிரியம் கிடையாது பெரிய வைதிகர்கள். ஆகையால் ஜயபூரில் சுதேசீய முதலிய விஷயத்தை ஒருவரும் கவனிக்கவில்லை.

ஆனால் இப்பொழுது ஸ்ரீ தீனதயாளு கிமராஜா வென்னும் ஒரு தேசாபிமானி சில காலமாய் இவ்வூரில் அரிய பிரசங்கங்கள் செய்து ஜனங்களுடைய மனதைத் திருப்பி விட்டார். ஜனங்கள் சுதேசீயத்திற்கு உழைப்பதாய் வாக்களித் திருப்பதுடன், ஒரே தினத்தில் சுதேசீயத்திற்காக 25,000 ரூபாய் வசூல் செய்யப்பட்டது. சுதேசீயத்தின் அபிவிர்த்தியைக் கவனிப்பதற்காக அநேக சபைகள் ஸ்தாபிக்கப்பட்டன.

(30-3-19 7)

---

## சிரார்த்த கர்மத்தில் சுதேசீயம்

வங்காள நாட்டில் லக்ஷ்மிபுரம் என்கிற ஊரிலே காலம் சென்று யாதவகிருஷ்ண முஜூந்தார் என்பவரின் சாம்லத் ஸரிக சிரார்த்தம் சமீபத்தில் நடந்த பொழுது ஸ்ரீயுக்த பிரசன்ன சந்திர வித்யாரதன, ஸ்ரீயுக்த வைகுண்டநாத தர்க்கபூஷண என்கிற பண்டிதர்களும் வரவழைக்கப்பட்டார்கள். இந்தச் சிரார்த்தத்தில் உபயோகிப்பட்ட வஸ்துக்களும், போஜன சாமக்கிரியைகளும் எல்லாம் சுதேசீயமாகவே இருந்தனவாம்.

அந்தச் சமயத்தில் இப்பொழுது எங்கும் பரவி வரும் ஜாதீய உணர்ச்சியின் அடையாளமாக ஹிந்துக்களும் மகமதியர்களுமான சுமார் 2000 பிச்சைக்காரர்களுக்கு அன்னமளிக்கப்பட்டதாம், சிரார்த்தினத்தின் காலையில்.

(30-3-1907)

---

## தெற்கே சுதேசீயம்

சுதேசீய விஷயத்தில் தென்னிந்தியர்கள் ஊக்கம் காட்டுவதில்லை யென்று நாம் வெகு நாளாய்க் குறை கூறிவந்தோம். ஆனால், இப்படிப் பட்ட குறைகள் இனிமேல் கூறவேண்டிய அவசியமிராதென்று நினைப்பதற்கு அநேக அத்தாக்ஷிகள் உண்டாய் விட்டன.

சென்னை மாகாணத்தின் வடபாகத்திலுள்ள நெல்லூர், குண்டூர், பெஜவாடா, ராஜமகேந்திரம், கஞ்சம், விசாகப்பட்டணம் முதலிய தெலுங்குப் பிரதேசங்களிலுள்ளவர்களைப் பற்றித் தென்னாட்டினராகிய சில தமிழர்களுக்கு விசேஷமாய்த் தெரியாவிடினுங்கூடத் தெலுங்கர்கள் தமிழர்களைப் பார்க்கிலும் வீரமும் தைரியமும் வாய்ந்தவர்களென்பது உண்மை. ஸர்க்கார் உத்தியோகம் முதலியன செய்து கீர்த்தி பெற்றவர்கள் தெலுங்கு நாட்டில் குறைவா யிருந்தாலும் அவர்கள் விழித்துக் கொண்டால் விடமாட்டார்கள்.

தமிழர்களுக்கு அறிவிருந்தாலும் சுயநல முதலிய குணக்கேடுகளினால் அவ்வறிவைச் சரியாய் உபயோகிப்பதில்லை. சுய நலமும் வஞ்சகமுமே தமிழர்களுடைய அபிவிர்த்திக்குத் தடையாயிருந்து வந்தன என்றாலும், இப்பொழுது தமிழ் நாட்டுப் பொது ஜனங்களும் கண்விழித்துக் கொண்டார்கள் என்றறிகிறோம். சில காலமாக சேலம் வாசிகள் சுதேசீயத்தில் தலையிட்டுவிட்டார்கள். முக்கியமாய் சௌராஷ்டிர ஜாதியார் இதில் ஒற்றுமை காட்டுகின்றார்கள். தூத்துக்குடியைப் பற்றிச் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. சில தினங்களுக்கு முன் ஸ்ரீவைகுண்டத்தில் சுதேசீயக் கிளர்ச்சி உண்டாய் விட்டதா யறிந்து சந்தோஷிக்கின்றோம்.

தஞ்சாவூர், திருச்சி ஜில்லா வாசிகள் அறிவு, நாகரீகம் முதலியவற்றில் சென்னை மாகாணத்

திற்குத் திலகம் போல் விளங்கினாலும், சுதேசீயத்தில் எடுத்துக் கொண்ட முயற்சி காணாது. இடையிலகப்பட்ட செங்கல்பட்டு, கோயமுத்தூர் முதலிய ஜில்லாக்கள் நித்திரையை விட்டு விழித்ததாகத் தோன்றவில்லை. ஆனால், வெகு சீக்கிரத்தில் எல்லாரும் விழித்துவிடுவார்களென்று நம்பிக்கையாய்விட்டது. நம்பிக்கை நிஜமாகுமாறு விரும்புகின்றோம்.

(30-3-1907

---

## ஒரு சுதேசிய சபை

பண்டித ஸ்ரீயுத கௌரீநாத ஸார்லக பௌமருடைய அக்கிராசனத்தின்கீழ் நடந்ததாம். அப்பொழுது தற்கால நிலைக்கேற்ற ஒரு சுதேசீய கீர்த்தனம் பாடப்பட்டது. அதைச்செவிகொடுத்துக் கேட்டவர்க ளெல்லோரும் மயிர்க்கூச் செறிந்து மெய்ம்மறந்து போயினராம். அப்பொழுது ஸ்ரீ ஆனந்த சந்திர வித்தியாலங்கார், ஸ்ரீ அன்னதா சரண தர்க்க சூடாமணி என்ற பண்டிதர்கள் பிரசங்கிக்கத் தொடங்கி, சுதேசீயத்தையும் சுவதர்மத்தையும் விடாமல்கைப்பற்றியொழுகவேண்டுமென்றும், பரதேசிய சாமான்களைப் பஹிஷ்காரம் செய்ய வேண்டுமென்றும் வற்புறுத்திப் பேசினார்களாம். பிறகு சுதேசீய பிரதிக்ஞையை எல்லோரும்

உச்சரிக்கவும் காது செவிடுபடும்படியான வந்தே மாதர கோஷத்துடன் சபை கலைந்தது.

வடக்கத்திய வைதிகர்களின் சுதேசீய சுஜனசுதர்மாபிமானம் இவ்வளவு அழுத்தமாய் ஊன்றியிருக்க, மதப்பற்றில் மேம்பட்டவரென்று பெருமை பாராட்டும் நம் தென்னாட்டில் வைதிகர்கள் எவ்வாறு நடக்கின்றனர்? சீமை வேஷ்டிகளை வாங்குவதில் இவர்களே முதன்மையாய் நின்றார்கள். இவர்கள் மாத்திரம் கட்டுப்பாடாய் நின்று பரதேசிய வஸ்துக்களும் வஸ்திரங்களும் உபயோகிக்கப்படும் சுபாசுப கர்மங்களில் தாங்கள் உபாத்தியாயரா யிருந்து நடத்தி வைக்க மாட்டோமென்றும் இந்தக் கட்டுப்பாட்டை மீறி நடப்பவர்களைப் பஹிஷ்காரம் செய்வதென்றும் தீர்மானம் செய்து கொண்டு தங்களை உபாத்தியாயர்களாக வைத்துக்கொண்டிருக்கும் கிருஹங்களிலெல்லாம் சுதேசீய பிரதிக்ஞையை அநுசந்தானம் செய்விப்பார்களாயின் இந்நாட்டில் சுதேசீயம் வளர்வதற்குப் பேருபகாரம் செய்தவராவார்கள்.

ஓ, விப்பிரோத்தமர்களே! இந்த உத்தம காரியத்தில் ஏன் அலக்ஷியமா யிருக்கிறீர்கள்? இப்படிப்பட்ட தேசோபகாரமான காரியத்தைச் செய்வதல்லவோ உங்கள் ஆசார சீலத்துக்கும் சுவதர்ம பிரக்ஷணத்துக்கும் அழகாகும்? வந்தேமாதரம்.

(30-3-1907)

---

## கூலிக்காரன் தேசாபிமானம்

பாபு பானர்ஜி கோமில்லா பண்டுக்குப் பணம் வேண்டுமென்று கூறியவுடன் தினம் கால் ரூபாய் சம்பாதிக்கும் ஒரு கூலிக்காரன் ஒரு ரூபாய் கொணர்ந்து பானர்ஜியின் முன் வைத்தான் உடனே பானர்ஜி அவனுடைய தேசாபிமானத்தை. மெச்சி அவன் கிட்டப்போய் அவனை ஆலிங்கனம் செய்து புகழ்ந்து கொண்டாடினார். ''தேசாபிமான முள்ளவன் கூலிக்காரனா யிருந்தாலும் அவனே எனக்குப் பெரியவன். தேசாபிமான மில்லாத மாதுர் துரோகிகள் யாரா யிருந்தாலும் அவர்கள் கூலிக்காரர்களிலும் தாழ்ந்தவர்கள் என்று நான் மதிக்கின்றேன்'' என்று கூறினார்.

இதைச் சென்னைவாசிகள் கவனிக்க வேண்டும்.

(6-4-1907)

---

## காசி மகாத்மியமும் சுதேசீயமும்

சில தினங்களுக்கு முன் ஸ்ரீ காசி நகரத்தில் ஒரு சுதேசீயக் கூட்டம் நடந்தபொழுது காசி ஜில்லாக் கலெக்டர் மிஸ்டர் ராடிஸ் என்னும் ஐரோப்பியர் அக்கிராஸனம் வகித்தாராம். அன்னி பெசண்டம்மையும் பேசினாராம். மிஸ்டர் ராடிஸ் முடிவில் சுதேசீயத்தைப்பற்றி மிகவும் ஊக்கமாயும்

உள்ளன்போடும் பேசினதுமன்றி, கூட்டம் நடக்கும் பொழுது ஜனங்கள் 'வந்தேமாதரம்' சொல்லும் சமயமெல்லாம் புன்சிரிப்புக் காட்டி மிகவும் ஆதரித் தாராம்.

ஒரு ஐரோப்பியக் கலெக்டர் இவ்வளவு மட்டிலும் சுதேசீயத்தில் மிகுந்த அன்புவைத்திருக் கிறாரென்பதை நம்புதற்கே நமக்கு யோசனையா யிருக்கின்றது. மிஸ்டர் ராடிஸ்தான் நல்லவரோ அல்லது காசிக்ஷேத்திரத்தின் மகிமைதான் இவரை யிப்படி நல்லவராக்கி விட்டதோ தெரியவில்லை. இவரைப்போலவே மற்ற வங்காள கலெக்டர்களும் இருந்து விட்டால் எவ்வளவு மதிப்பும் மரியாதையும் கிடைக்கும்! இந்த சமாசாரம் இராஜமகேந்திரம் மிஸ்டர் மார்க் ஹண்டர் துரை யவர்களுக்குத் தெரியுமோ தெரியாதோ!

(4-5-1907)

---

## சுதேசி வஸ்து பிரசாரணி

சென்னையில் சிலகாலத்துக்குமுன் ஸ்தாபிக்கப் பட்டு ஸ்ரீ. வி. சக்கரை செட்டியார் அக்கிராஸ னாதிபத்தியத்தின்கீழ் நடைபெற்றுவரும் "சுதேசி வஸ்து பிரசாரணி" சபையார் மிகவும் உபயோக மான வேலைகள் செய்து வருகின்றார்களென் பதை யறிய மிகவும் சந்தோஷிக்கின்றோம். இவர்கள் சென்னையில் ஒவ்வொரு வாரத்திலும்

பற்பல முக்கிய ஸ்தலங்களில் சுதேசியப் பிரசங்கம் செய்து வருவதோடு, காஞ்சீபுரத்தில் நடந்த கருட சேவை உத்ஸவ காலத்தில் அங்குச் சென்று அநேக பிரசங்கங்கள் செய்தார்கள். ஒவ்வொரு கூட்டத்திலும் ஏராளமான ஜனங்கள் கூடிக் கேட்டதும் தவிர அங்கேயே இந்தச் சபைக்குக் கிளைகள் ஸ்தாபிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுகின்றனவாம்.

சென்னையில் பொதுவாய் பெரிய மனிதர்களாயுள்ளவர்கள் தங்கள் காரியமே பெரிதென்றெண்ணிச் சுதேசீயம் போன்ற முயற்சிகளில் தலையிடாமல் அலக்ஷியமாயிருக்கும் இச்சமயத்தில் பெரும்பாலும் இள வயதினர்களால் நடத்தப்படும் இச்சபை இம்மட்டும் ஊக்கத்தோடு உழைப்பது எமது மனத்தை மிகவும் பூரிக்கச் செய்கின்றது. இவர்கள் நன்முயற்சிக்குக் கடவுளும் உடனின்று அனுக்கிரகிக்குமாறு பிரார்த்திக்கின்றோம்.

(8-6-1907)

---

## கல்கத்தா ''டெக்னிகல் இன்ஸ்டிடுட்'' அல்லது தொழிற்கல்விச் சாலை

சுதேசீய சம்பந்தமாய் வங்காளத்தார் பல பெரிய காரியங்கள் செய்திருக்கிறார்கள். அவைகளில் கல்கத்தாவில் ஒரு தொழிற்கல்விச் சாலை

ஸ்தாபித்ததைச் சொல்லவேண்டும். இது அங்குள்ள ஜமீன்தார்களாலும் மற்ற செல்வவான்களாலும் ஆதரிக்கப்பட்டு வருவதாகத் தெரிகிறது. இது வரையில் இதற்கு முதல் ஐவேஜியாக 73,600 ரூபாயும், மாத வரும்படியாக 3,487 ரூபாயும் கிடைத்திருக்கின்றன.

கூச்பீகார் மகாராஜா 6000 ரூபாயும், மைமென்ஸிங் மகாராஜா 3000 ரூபாயும், ஆன்ரெபில் டாக்டர் ராஷ் விஹாரி கோஸ் 5000 ரூபாயும், ராஜாதிகபதியா 5000 ரூபாயும், குமார் மன்மத நாத் மித்திர் 5000 ரூபாயும், குமார் நரேந்திர நாத் மித்திர் 5000 ரூபாயும் ககாநந்திர நாத் டாகோர் 5000 ரூபாயும், S.P. சிம்மா 5000 ரூபாயும் T. பாலிட் 2500 ரூபாயும், B. சக்கிரவர்த்தி 2500 ரூபாயும், R. N. முகர்ஜி 2500 ரூபாயும், தீபநாராயணசிங் 2000 ரூபாயும், பாபு நாத்மித்தர் 1500 ரூபாயும், பாபு அநாதபந்து சைலேந்திரகுமார் 1250 ரூபாயும், ஜோதிஷ சந்திரமித்திர் 1000 ரூபாயும், நாடோர் மகாராஜா 1000 ரூபாயும் நன்கொடைகள் கொடுத்திருக்கிறார்கள். இன்னும் 2 லட்சம் ரூபாய் மூலதனம் வேண்டுமென்று மதிக்கப்படுகின்றது.

காங்கிரெஸ் கூடினபோது பரோடா மகாராஜா வானவர் தமது மந்திரி மிஸ்டர் ரோமே சந்திர தத்துடன் இந்தக் கல்விச் சாலையைப் போய்ப் பார்த்துச் சந்தோஷப்பட்டார்கள். மிஸ்டர்

தாதாபாய் நௌரோஜியும், மிஸ்டர் வாச்சாவுமாகப் போய்ப் பார்த்துப் பல திருத்தங்களை யெடுத்துச் சொன்னார்கள். கல்கத்தாவில் இம்மாதிரியான கல்விச் சாலையை நம்மவர் கவர்ன்மெண்டின் உதவியின்றி வைத்து நடத்துவது அவர்களுக்குப் பெருமையே. மற்றப் பட்டணங்களிலும் இம் மாதிரியான கல்விச் சாலைகள் ஸ்தாபிக்கப்பட வேண்டும்.

சென்னையில் நாஷனல் பண்டு சபையார் அடுத்த வருஷம் ஒரு நெசவு ஸ்கூல் ஸ்தாபிக்கப் போவதாக யோசனை செய்து கொண்டிருக் கிறார்கள். அது நிறைவேறினாலும் சென்னையார் மீதுள்ள குற்றம் ஒருவாறு நீங்கும். ஆனால், நெசவு ஸ்கூல் மட்டும் போதாது. தொழிற் கல்விச் சாலையொன்று ஸ்தாபித்து நமது பிள்ளைகளுக்கு எல்லாத் தொழில்களையுஞ் சொல்லி வைக்க வேண்டும். கவர்ன்மெண்டின் சார்பின்றிச் செய்வதே உத்தமம். ஆனால், அதற்கு மிகுந்த பணம் வேண்டுமே! அர்பத்நட்டில் கொட்டி யிழக்கப் பணமுண்டு; பொதுக் காரியங்களுக் கில்லையே! கல்கத்தாவைப் போலச் சென்னையும் பெயர் வாங்க வேண்டுமானால், அவ்விடத் தாரைப்போலப் பணம் செலவு செய்கிறவர்கள் வேண்டுமல்லவா?

(8-6-1907)

——

## இறங்கு துறையிலேயே நீச்சா!

அமைதியுடன், சட்டத்தோடு உராய்த வில்லாமல் நாம் தேச வளர்ச்சிக்குச் செய்ய எத்தனித்த காரியங்கள் ஏன் தடைப்பட்டு இருக்கின்றன?

1. அன்னியர் சம்பந்தத்தை 'வர்ஜனம்' செய்துவிட வேண்டுமென்று பிரதிக்கினை செய்து கொண்டோம். அதை மேன்மேலும் தளர்ச்சி யில்லாமல் நடத்திச் செல்ல வேண்டாமா? அதன் பொருட்டு கிராமந்தோறும் சபைகள் வேண்டாமா? ஆயிரக்கணக்கான உபந்யாஸகர்கள் வேண்டாமா? பத்திரிகைகள், புஸ்தகங்கள் முதலிய எத்தனையோ உபகரணங்கள் வேண்டாமா? இதை யெல்லாம் பற்றி ஊக்கத்தோடு சரியான முயற்சிகள் நடக்க வில்லை.

2. ஜாதீய கலாசாலைகள் என்று கூக்குரல் போட்டோம். அதை வெறும் சொல்லளவில் விட்டு விட்டோம். நமக்குத் தெரிந்த வரை கல்கத்தாவிலும் வேறு சில பெங்காளத்து நகரங்களிலுந்தான் உண்மையான சில ஜாதீய பாடசாலைகள் ஏற்பட்டிருக்கின்றன முப்பது கோடி ஜனங்க ளுள்ள தேசத்திலே ஐந்து அல்லது ஆறு ஜாதீய பாடசாலைகள் இருந்தால் போதுமா?

3. பஞ்சாயத்துக்கள் ஏற்படுத்த வேண்டு மென்று தீர்மானித்தோம். இதற்கு ஆங்கிலேய

அதிகாரிகள் எவ்விதமான இடையூறும் செய்ய லாகாது. அப்படியிருந்தும் சென்ற இரண்டு வருஷங்களில் எத்தனை பஞ்சாயத்துக்கள் நாட்டிலே ஸ்தாபனமாயிருக்கின்றன? இதை யார் பார்த்தார்கள்? யார் கணக்கிட்டார்கள்? கவனிப்பாரையே காணோம்.

4. தேச ஸேவகர்கள் (National Volunteers) என்ற படைகள் வைத்துப் பழக்கவேண்டுமென்று நமது ஜனத் தலைவர்கள் எவ்வளவோ போதனை செய்தார்கள். இந்த ஏற்பாட்டில் அதிகாரிகள் ஏன் சந்தேகங்கள் காட்டுகிறார்கள்? நமது உண்மையான நோக்கத்தையும் எந்த இடையூறு வரினும் தளர்ச்சி பெறாத மன உறுதியையும் அவர்களுக்குத் தெரிவிக்கும் பக்ஷத்தில் அவர்கள் இதைத் தடுக்க முடியாது. முடியாதென்பது மட்டுமா? யார் வழிக்கும் போகாமல் அமைதியுடன் தேச பாதுகாப்பிற்கு உழைக்கும் கூட்டத்தாரை அதிகாரிகள் எப்படி முயன்ற போதிலும் அடக்கமுடியாது அப்படியிருந்தும் அந்த முயற்சியை விருத்திக்குக் கொண்டு வரக்கூடிய காரியங்களையும் நாட்டில் நடந்தேறவில்லை.

ஸ்வதந்திர மடைய விரும்புவோர் செல்ல வேண்டிய பாதை மல்லிகை மிதழ்கள் தூவிய பாதையன்று. கல்லும் முள்ளும் பரப்பிய பாதை. செங்குத்தான வழி வெகு சுலபத்தில் அடைந்து விடலாமென்று சில சுகவாசிகள் நம்புகிறார்கள். நமது நோக்கம் எத்தனைக்கெத்தனை பெரியதோ,

அத்தனைக் கத்தனை நமது முயற்சியும் பெரிதா யிருத்தல் வேண்டும். மந்திரத்திலே மாங்காய் விழாது. பயந்து செய்யும் ஓரிரண்டு செய்கைகளால் நமது நாட்டிற்குச் சுயாதீனம் கிடையாது. விடா முயற்சியும் சித்த சுத்தியுமே துணைகளாகும். வேறு துணை யில்லை.

(28-11-1908)

---

## கோம்பை சுதேச ஏலக் கிருஷிக் கம்பெனி (லிமிடெட்)

சுதேச நண்பர்காள்!

1. இக் கம்பெனியானது மதுரை ஜில்லா கோம்பை கிராமத்தில் பங்கு ஒன்றுக்கு 25-ரூபா வீதம் 4000ம் பங்குகளின் பேரில் 1,00,000 ரூபா மூலதன மேற்படுத்தி ரிஜிஸ்தர் செய்யப்பட்டிருக் கிறது.

2. ஏலம், காப்பி, தேயிலை முதலிய தக்க வருமானமுள்ள கிருஷித் தொழில்களை நல்ல விததத்தில் நடத்தி வைக்கவும், தூரதேசக் கிருஷி கர்கள்பால் கஷ்ட நஷ்டமுறும் நம்மவர்களின் துன்பங்களை நிவர்த்திக்கவும், தேசோபகார சிந்தை மிக்க பல நண்பர்களின் அரிய பெரிய முயற்சியின் பேரில இக் கம்பெனி ஸ்தாபிக்கப் பட்டிருக்கின்றது. இதற்கு (பரத கண்ட) இந்து

தேச (சுதேச) வாசிகள் ஒவ்வொருவரும் தத்தம் சக்திக்குத் தக்கவாறு உதவி செய்ய வேண்டியது கடமையாக விருக்கும்.

3. நம்மவர்களின் ஸ்திதியை நன்குணர்ந்த அந்நியர்கள் அநேக ஆயிரமைல் தூரங்களிலிருந்து இங்கு (நந்தேசம்) வந்து ஏலக் கிருஷிக்கு லாயக்காகவுள்ள திருவாங்கூர் ஸர்க்கார் மூணாறு, தேவிகுளம், பீர்மேடு முதலிய நமது நாட்டுப் பூமிகளைக் கைப்பற்றி நம்மவர்களைக் கொண்டே பாடுபடுத்திக் கோடிக்கணக்கான திரவியங்களை வியவசாயத் தொழில் விருத்தியாற் கொள்ளைகொண்டு போகிறார்கள். திரேக கஷ்டப்பட் டுழைத்துக் கொடுப்பது நாம் (சுதேசிகள்); லாபமடைந்து சுகமனுபவிப்பது அவர்கள் (விதேசிகள்). நம்மவர்களின் மான்மியமி யாதென்றுணராப் புல்லர்கள்பால் கஷ்டப்படும் நமக்கு இத்தகைய கம்பெனிகளனந்தமிருப்பது உசிதமல்லவா?

4. தனவந்தர்களும் ஏழைகளும் சிரமமின்றிப் பங்கு பெறுவதற்காகவே 25-ரூபாய்க் கொரு பங்கென் றேற்படுத்தப்பட்டது. இக்கம்பெனி உதவியால் தற்போது ஏலக் கிருஷித்தொழில் நடத்தி வரப்படுகின்றது. இதனால் வருஷம் 1க்கு பங்கு 1க்கு சராசரி 20 ரூபாய்க்குக் குறையாத லாபங் கிடைத்து வருமென்று கணக்கிடப்படுகிறது.

5. இக் கம்பெனியை ஆதரிக்கத்தக்க பிரபுக்கள் யாராவது முன் வந்து பணவுதவி

செய்வார்களாகில் நல்ல கமிஷனும் வட்டியுங் கொடுக்கப்படும். 100 பங்கு எடுத்துக் கொள் பவர்கள் பிரஸிடெண்டு ஸ்தானத்திற்கும், 20பங்கு பெறுகின்றவர்கள் டைரக்டர் ஸ்தானத்திற்கும் லாயக்காவார்கள். அப்ளிகேஷன் அனுப்பும்போது பங்கு 1க்கு 3ரூபாய் வீதம் அட்வான்சு சேர்த் தனுப்ப வேண்டும். கம்பெனி ரூல்ஸ்புக் 8 அணா கிரயம். டீ விவரமறிய விரும்புகின்றவர் களுக்கு வி. பி. மூலம் ரூல்ஸ் முதலிய கம்பெனி விருத்தாந்தங்களை யனுப்பி வைக்கப்படும். கம்பெனி விஷயமறிய விருப்பமுடைய யாவரும் "சுதேச ஏலக் கிருஷிக் கம்பெனி (லிமிட்டெட்) செக்கிரட்டெரி கோம்பை, மதுரை ஜில்லா" என்ற விலாசத்திற் கெழுதிக் கொள்ளவும்.

6. இப்போது கம்பெனியில் 1500 பங்குகள் மட்டுமே பாக்கி யிருக்கிறது. இதையும் இவ்வூர் இரண்டொரு நண்பர்கள் எடுத்துக் கொள்ளத் தயாராக விருக்கிறார்கள். ஆனால், நந்தேசப் பலவூர் நண்பர்களும் இக் கம்பெனியிற் பங்காளி களாகி ஒன்றுபட்டுழைத்துவர வேண்டுமாய்க் கம்பெனி கொண்டிருக்கும் நோக்கம் நிறைவேறு வதற்காகவே இவ் வியாசம் வெளிப்படுத்த நேர்ந்தது. இத் தருணத்தைத் தவற விட்டு விட்டால் கவலைப்படுவீர்கள். 'ஒன்றே செயினு மன்றே செய்; அன்றே செயினு நன்றே செய்' எனு மான்றோர் மொழியைப் பின்பற்றுங்கள். இஃது

சுதேச சேவைக்குரியது என்பதைத் தயவாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின் செல்பவர்.'

(23-1-1909)

---

## தூத்துக்குடி சுதேசிக் கப்பல் கம்பெனி

**சுதேசிக் கப்பல் பொதுஜன சகாயம் என்ற காற்று வீசாதபடியால், மேலோட்டமில்லாமல் தள்ளாடிக் கொண்டிருக்கிறது. இவ்வளவு சிரமப் பட்டு நல்ல நிலைக்கு வந்த கம்பெனி இன்னும் சுமார் 2 லக்ஷம் ரூபாய் எங்கேனும் கிடைக்கு மானால், பிறகு எக்காலத்திலும் மரண பயமின்றி ஸ்திரமாயிருக்கும்.**

**இப்போது ஓர்சில சில்லரைத் தொந்தரவுகள் இருப்பதாகக் கேள்வி. இவற்றைக் கம்பெனிப் பொறுப்பாளிகள் க்ஷணத்திலே நிவிருத்தி செய்து விடக்கூடும். ஆனால் அப்போதப்போது வரும் தொந்தரவுகளை அப்போதப்போது சிரமப்பட்டு நீக்கிக் கொண்டிருந்தால் போதுமா?**

இன்னும் சில வாரங்கள் கழித்து மறுபடியும் ஏதேனும் ஓர் கஷ்டம் நேரிடும். இப்படி நித்திய கண்டமாக எவ்வளவு காலம் நடந்து வரமுடியும்? ஒரே மொத்தமாக இரண்டு மூன்று மாதங்களில் 2 லக்ஷம் ரூபாய் வந்தாலொழியக் கம்பெனிக்கு ஸ்திர ஜீவன் உண்டாக வழியில்லை. இந்த 2 லக்ஷம் எங்கிருந்து வரும்? நாட்டுக் கோட்டைச் செட்டிமார் கொடுப்பார்களா? வீண் புகழுக்கும் ஏமாற்றும் வக்கீல்களுக்கும் சோம்பேறிச் சத்திரங் களுக்கும் கொடுப்பார்கள். ஜமீந்தார்களிடத்தி லிருந்து வருமா? தாசிகளுக்கும், கள்ளுக் கடைக்கும், டம்பத்திற்கும், கலெக்டர் விருந்துக் குமே ஜமீந்தார்களின் பணம் அர்ப்பிதமா யிருக்கின்றது. சாவுகாரர்கள், மிராஸ்தார்கள், உயர்ந்த உத்தியோகஸ்தர்கள், பிரபுக்கள் எல்லா ஸ்வாமிகளும் ஒன்றுபோலவேதான். இவர்க ளெல் லாம் தேசத்திலிருந்து பணம் பறித்துத் தமது வயிற்றிலே போட்டுக் கொள்வார்களே யன்றித் தேச நன்மைக்கு அரைக் காசுகூட விரயம் செய்யமாட்டார்கள். இவர்களை யெல்லாம் நம்புவதில் பயனில்லை.

ஏழைகள், அன்றாடகம் ஜீவனம் செய்வோர், வக்கீல் குமாஸ்தாக்கள், சொற்பத் தொழிலாளிகள் ஆகிய நாமெல்லோருமே சேர்ந்து இந்தப் பெரு முயற்சியை அழிந்துவிடாமல் காப்பாற்றவேண்டும். நம்மையெல்லாம் நம்பித்தான் சிதம்பரம் பிள்ளை இந்தக் கம்பெனியை ஆரம்பித்தார். பணமெல்லாம்

நம்மிடத்திலேதான் வாங்கினார். அவரும் நம்மைப் போன்ற ஏழையே. ஜமீந்தார்கள், பிரபல ஸாஹுகார்கள் இவர்களுடைய முகத்திலேயே அவர் விழிப்பது வழக்கமில்லை, நாம்தான் ஒரே ஊக்கமாக மறுபடியும் மூச்சைப் பிடித்துக்கொண்டு 'ஏலேலோ' பாடிக் கப்பலை மேலே அபிவிருத்தியடையும்படி தள்ளவேண்டும். இந்த உபந்யாஸம் எழுதும் நாம் மிகுந்த ஏழை. எனினும் நமது சொற்ப வரும்படியிலிருந்து கம்பெனி ஏஜெண்டாகிய தூத்துக்குடி வக்கீல்வெங்கட்டராமய்யரிடம் ரூபாய் 5 கொடுத்திருக்கிறோம். இதற்கு ரசீது வாங்கவில்லை. ரசீது நமக்கெதற்கு? தேசம் வாழ்ந்தால் போதாதா? நமது ஜாதீய கவுரவத்திற்கு நாசம் வராமலிருந்தால் போதாதா? தூத்துக்குடிக் கம்பெனி நமது முதற் பெருந்தொழில் முயற்சி. இதைக் கைவிட்டு விட்டால் நம்மைப் பிறகு உலகத்தில் யாரும் நம்பவே மாட்டார்கள். உலகத்தாரெல்லாம் சிரிப்பார்கள். நம்மை நாமே நம்பாத ஸ்திதிக்கு வந்துவிடும். ஆகையால் இதைப் படிக்கும் ஒவ்வொருவரும் எழுதுபவரைப் போலவே (கப்பல் காரியதரிசிக்கேனும் 'இந்தியா' ஆபீஸ் ஸ்ரீநிவாஸாசாரியாருக்கேனும்) இந்த க்ஷணமே தமது கையிலகப்பட்டதை—அது அரைக் காசாயிருந்தாலும் சரி— அனுப்பி நமது மாதாவின் மானத்தைப் பாதுகாக்க வேண்டும்.

தமிழ் நாட்டிலே 160 லக்ஷம் ஜனங்கள் இருக்கிறார்கள். இதில் 159 1/2 லக்ஷத்தைக் கழித்து விட்டுப் பாக்கி அரை லக்ஷம் ஜனங்கள் தலைக்கு 4 ரூபாய் விழுக்காடு கொடுக்கும் பக்ஷத்தில் இந்த சுதேசிக்கப்பல் கம்பெனியின் நோக்கம் நிறைவேறி விடும்.

நாம் மேற்கூறப்பட்ட ஆலோசனையைப் பற்றிக் கம்பெனிப் பிரதிநிதியாகிய ஸ்ரீ வெங்கட்ட ராமய்யரிடம் பிரஸ்தாபித்தோம். அவர்:- ''வெறும் இனாமாகக் கம்பெனியார் பணம் வாங்கிக்கொண்டு ரசீதுகூடத் தராமலிருப்பது வியாபார முறையாக மாட்டாது. இவ்வாறு சேரும் பொது நிதியை நீங்கள் கம்பெனியாரிடம் மொத்தமாகக் கொடுத்து அதைச் சில ''ட்ரஸ்டி''களின் மேற்பார்வைக்குள் விட்டு விடவேண்டும். கம்பெனியார் அதைப் பங்குப் பணமாகப் பாவித்து அதற்குள்ள லாபத்தை நமது மாணாக்கர்களை ஜப்பானுக் கனுப்பல் முதலிய முக்கிய விருத்திகளிலே செலவிடும்படி ஏற்பாடு செய்யலாம்'' என்று சொல்லுகிறார். எப்படி ஏற்பாடு செய்தாலுமே சரி- அதைப்பற்றி யெல்லாம் நமக்குக் கவனமில்லை.

சுதேசீயக் கப்பல் கம்பெனிக்குப் பணம் போய்ச் சேரவேண்டும். இல்லாவிட்டால் நமது ஜாதீய மானம் அழிந்து போய்விடும். கிராமங்களில் வசூலாகும் மொத்தத் தொகைகளைப் பற்றிய கணக்கு ''இந்தியா''பத்திரிகைக்கு அனுப்பப்படவேண்டும்

நமது ஆபீஸ் ஸ்ரீ ஸ்ரீநிவாஸாசாரியார் தனியாக ஒரு நிதி சேகரிக்கிறபடியால் அவர் பெயருக்குப் பணம் அனுப்ப விரும்புபவர்கள் அவ்வாறே செய்ய லாம். இதை ஓர் பாங்கியில் அப்போ தப்போது போட்டு வைத்துக் கொஞ்சம் பெருந்தொகையான வுடன் தூத்துக்குடிக்கு அனுப்பக்கூடும். எத்தனை யாயிர விதமான ஏற்பாடு செய்வீர்களோ, நமக்குத் தெரியாது. எப்படியாயினும் 3 மாதங்களுக்குள்ளே 2 லக்ஷம் தூத்துக்குடியில் சுதேசியக் கப்பல் ஆபீஸுக்கு வந்து விடவேண்டும்.

''நாஷனல் பண்ட்'' என்ற சுதேசிய நிதி சென்னப்பட்டணத்தில் சேர்க்கப்படுகின்றது. அதிலிருந்து தூத்துக்குடி சுதேசியக் கப்பல் கம்பெனிக்கு என்ன உதவி செய்யப்பட்டிருக்கிற தென்பதை நாம் அறிய விரும்புகின்றோம். இவ் விதமான ஜாதீய காரியங்களுக்கு உபயோகப் படாமல் போகும் விஷயத்தில் அந்தப் பணத்தை எதற்காகச் சேர்க்கிறார்கள்?

சென்னப்பட்டணத்தில் ஸ்ரீ வி. கிருஷ்ண சாமி அய்யர் முதலியவர்கள் 'வர்ஜனம்' என்ற சொல்லே கலக்காத சுத்த சுதேசியத்துக்கே தாம் அனுகூலமா யிருப்பதாகச் சொல்லுகிறார்கள். அவர்கள் கையில் ஜனங்களிடமிருந்து திரட்டப் பெற்ற பணம் மிகுதியாகஇருக்கிறது.கோர்ட்டுக்கு அடிக்கடி வரக்கூடிய வியாபாரக் கூட்டத்தார்

முதலியவர்களின்மீது அவர்களுக்கு மிகச் செல்வாக்கிருக்கிறது. தூத்துக்குடிக் கம்பெனி சுத்தமான சுதேசியந்தானே? இதற்கு அவர்கள் குறைவராமல் ஏன் பார்க்கக் கூடாது? வீண்பேச்சு! இந்த நடிப்புக்காரர்களிடம் சகாயம் எதிர்பார்ப்பதே பிழை தேசம் ஏழைகளின் தேசம். இந்த முயற்சி ஏழைகளின் முயற்சி. இதற்கு ஏழைகளாகிய நாமெல்லோருமே துணை செய்ய வேண்டும்.

(30-1-1909)

---

## தூத்துக்குடி சுதேசிக் கப்பல் கம்பெனி

சென்ற வாரப் பத்திரிகையில் நான்காம் பக்கத்தில் தூத்துக்குடி சுதேசிக் கப்பல் கம்பெனியைப் பற்றி ஓர் வேண்டுகோள் பதிப்பித்திருந்தோம். அதனையே இவ்வாரம் துண்டுப்பத்திரிகையாகப் பிரசுரித்து நாடு முழுதிலும் பரப்ப உத்தேசம் கொண்டிருக்கிறோம். இது பொது முயற்சி. இதற்கு எல்லாருடைய சகாயமும் வேண்டும். நமது பத்திரிகையில் ஷெ விஷயத்தைப் படித்தவுடனேயே கும்பகோணம் தாலுகா திருவிடைமருதூரைச்சார்ந்த மேலையூர் கிராமத்திலுள்ள ஸ்ரீ. ராமய்யர் என்ற ஸ்வஜனாபிமானியொருவர் மனங் கனிந்து ஷெ விஷயமாக ரூ. 10-0-0 கொடுத்தனுப்பி யிருக்கிறார். 160 லக்ஷம் ஜனங்கள் தமிழ் நாட்டிலிருக்கிறார்கள். இவர்

களிலே ஸ்ரீராமய்யரைப் போன்ற இருபதினாயிரம் பேர் இருப்பார்களானால் சுதேசியக் கப்பல் எந்தவிதமான இகற் புயலுக்கும் அஞ்சாமல் ஓடக் கூடும். அன்பர்களே சென்ற வாரத்து விண்ணப் பத்தைக் கருணைகூர்ந்து மறுபடியும் ஓர் முறை படித்துப் பாருங்கள். சமீபத்தில் மஹாமகம் வரப் போகிறது. அந்தச் சமயத்தில் நமது ஜனங்கள் லக்ஷக்கணக்காகக் கும்பகோணத்தில் வந்து கூடு வார்கள். அப்போது சுதேசியக் கப்பல் கம்பெனிக்கு ஸ்திரமான பணபலம் உண்டாக்கி விடுவதற்கு வழி தேடுங்கள்.

ஸ்ரீ ராமய்யர் நமக்கு எழுதியிருக்கும் கடிதம் பின்வருமாறு:-

'உபயகுசலோபரி. அனேக நமஸ்காரம். தை மீ 18ம் தேதி (நேற்றைய தினம்) சனிக் கிழமை வெளியான பத்திரிகையில் நாலாவது பக்கத்தில் ஒரு நிருபர் எழுதி யிருக்கிறபடி, அவர் ஏழையாக இருந்தபோதிலும், தன்னா லானது ரூபா 5 வக்கீல் வெங்கடராமய்யரிடம் கொடுத்ததாகச் சொல்லியிருக்கிறார். தூத்துக் குடி சுதேச ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி யானது ஸ்ரீமான் வி ஓ. சிதம்பரம் பிள்ளை யினுடைய பகீரதப் பிரயத்தனத்தால் ஸ்தாபிக் கப்பட்டு, நமது தேசத்திற்கு அளவற்ற நன்மையைச் செய்திருக்கிறது.

இன்னமும், செய்யத் தயாராயிருக்கிறது. நமது சென்னை ராஜதானியில் லக்ஷம், கோடிக்கணக்காக எத்தனையோ பணக்காரர்கள் இருக்கிறார்கள். ஒருவன் கொடுத்து விடலாம், பாக்கி 2 லக்ஷத்தையும்; அல்லது ஒவ்வொருவனும் நூற்றுக்கணக்காகப் பங்குகள் எடுத்துக் கொள்ளலாம். ஆனால் உங்கள் பத்திரிகையில் சொல்லியதுபோல, அவனெல்லாம் பணம் கொடுப்பானா? பங்குதான் எடுப்பானோ? ஒன்றும் மாட்டான். தாசிக்கும் வேசிக்கும், வம்புக்கும், வியாஜ்யத்திற்கும், சந்தோஷமாகப்பணத்தை வாரி வாரி இறைப்பான்.

நான் ஓர் ஏழை மிராஸ்தாரன். என்னாலானது ஷை தர்மத்துக்கு ரூபா 10 அனுப்பியிருக்கிறேன். இதை வரவு வைத்துக்கொண்டு ஷை தர்மத்தில்சேர்க்கும்படிபிரார்த்திக்கிறேன்.

கையொப்பம்''

தர்மம்செய்வது பெரிதன்று. விரைவிலே செய்ய வேண்டும். ''காலைச் செய்வோம் என்றறத்தைக் கடைப்பிடித்துச், சாலச் செய்வோரே தலைப்படுவார்'' என்று பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்க ளல்லவா? இந்தஉண்மையை நன்கறிந்த ஸ்ரீ ராமய்யருக்கும் அவர் போன்ற தேசாபிமானிகளுக்கும் பாரதமாதா ஸர்வ ஐசுவரியங்களைக் கொடுத்து ரக்ஷணை புரிவாள்.

——

(-2-1909)

## தூத்துக்குடி சுதேசி நீராவிக் கப்பல் கம்பெனி

சென்ற வாரத்தில் இக் கம்பெனிக்குச் சில சில்லரைத் தொந்தரவுகள் இருப்பதாகவும், அவற்றைச் சீக்கிரமே கம்பெனிப் பொறுப்பாளிகள் நிவிருத்தி செய்து விடுவார்க ளென்றும் எழுதியிருந்தோமல்லவா? நாம் எதிர்பார்த்தபடியே 'காலியா' என்னும் கப்பல் விஷயமாக ஏற்பட்டிருந்த அத் தொந்தரவுகளெல்லாம் நீங்கிவிட்டன என்றும், கப்பல் இனி யாதொரு துன்பத்திற்கும் உள்ளா காது க்ஷேமமாகவே நடந்துவரவேண்டிய ஏற்பாடு கள் எல்லாம் செய்தாயிருக்கிற தென்றும் கேள்விப் பட மிகவும் சந்தோஷ மடைகின்றோம்.

இதிலிருந்து நமது தமிழ் நாட்டுச் சகோதரர்கள் இனி இதிலொன்றும் தாங்கள் தலையிட வேண்டிய தில்லை யென்று எண்ணவேண்டாம். இது நமது ஜாதீய கௌரவத்தைப் பொறுத்த தாதலின், ஒவ்வொருவரும் தங்கள் குடும்ப காரியங்களி லிதுவு மொன்றென எண்ணி, தங்களாலியன்றதை மிராஸ் தார் ஸ்ரீராமய்யரைப் போலவே உதவி செய்து, அதனது விருத்தியிலேயே கண்ணும் கருத்துமாய் இருக்கவேண்டுமென்று இன்னொரு முறை வற்புறுத்துகிறோம்.

—

## மாதாவின் கட்டளை

### சித்திர விளக்கம்

பாரதமாதா நமது ஜனங்களை நோக்கி சுதேசீயக் கப்பலுக்கு உதவி செய்யும்படி கட்டளை யிடுவதாக இவ்வாரத்தில் சித்திரம் பதிப்பிக்கப்பட் டிருக்கிறது. தெய்வம் முன்னே வந்து நின்று பேசுவதில்லை ஹிருதயத்தில் பேசும். அது போலவே நமது மாதா நம்மவர்களின் ஹிருதயத் தில் பேசத் தொடங்கிவிட்டாள். நாம் சரியானபடி செவிகொடுத்து, அவள் கட்டளைப்படி நடக்க வேண்டும்.

புதுச்சேரியிலே நமது ஆபீஸைச் சேர்ந்த சில வாலிபர்கள் சுதேசீயக் கப்பல் தர்ம நிதியின் பொருட்டுப் பணம் சேகரிக்க ஒரு உண்டியல் பெட்டி கொண்டு சில கடைக்காரரிடம் போனார் கள். அப்போது வீதியில் ஒரு எளிய ஸ்திரீ இவர் களிடம் "எதற்கையா பணம் வசூலிக்கிறீர்கள்?" என்று கேட்டாள் இவர்கள் "தூத்துக்குடியிலே ஓடும் சுதேசீயக் கப்பலுக்கு" என்றார்கள். உடனே அவள் மனமகிழ்ச்சியுடன் ஒரு காசு பெட்டிக்குள் போட்டு விட்டு. "ஐயோ, பாவம், வேலை செய்யுங் கள், உங்கள் காரியம் கைகூடும்" என்று சொன்னாள்.

மற்றொரு ஏழை ஸ்திரீ இதைப்பார்த்து, "ஐயா என்னிடம் காசில்லை. விலைக்கு வாங்கித்

கொண்டு வந்தேன். கத்தரிக்காய்கள் இருக்கின்றன. அவற்றை வாங்கிக் கொள்ளுவீர்களா?'' என்றாளாம்.

அதற்கு நமது வாலிபர்கள் ''வேண்டாமம்மா! உன் போன்ற நல்ல சித்தமுடையவர்களின் ஆசீர்வாதமிருந்தாலே எங்கள் முயற்சி வெற்றியடைந்துவிடும். நீ ஏழை. உன் குழந்தைகளுக்குக் கொண்டுபோகும் காய்கறியை நாங்கள் வாங்கலாமா?'' என்று சொல்ல, அந்த ஸ்திரீ அன்புடன் வாழ்த்திவிட்டுச் சென்றாள்.

இதனை யெல்லாந்தான் நாம் ''மாதாவின் கட்டளை'' என்கிறோம்.

(13-2-1909)

——

## நமது வர்ஜன முயற்சி அபஜயமாய் விட்டதா?

ஜனவரி மாதம் 22ம் தேதி கிடைத்த லண்டன் ''டைம்ஸ்'' பத்திரிகையில் சென்ற டிஸம்பர் மாதத்து பிரிடிஷ் வர்த்தகக் கணக்குப் பிரசுரமடைந்திருக்கின்றது. அதில் பின்வருமாறு குறிப்பிடப்படுகிறது:-

பஞ்சுத்துணி வியாபாரத்தில் 8,90,65,000 கஜம் குறைந்து போய்விட்டது. அதாவது

100ல் 18.6 குறைவு. கிறையத்திலே பார்த்தால் 15,14,123 பவுன் குறைந்து விட்டது. அதாவது 100ல் 23.7 குறைவு. இதில் இந்தியர்கள் கொண்டிருக்கும் வர்ஜன விரதத்தால் 7,74,16,000 (ஏழு கோடியே 74 லக்ஷத்து 16 ஆயிரம்) கஜம் குறைவேற்பட்டது.''

இதற்கென்ன அர்த்தம்? இங்கிலீஷ் வியாபாரததிற்கு அம் மாதத்திலே உண்டாயிருக்கும் நஷ்டத்தில் முக்காலே அரைக்கால் பங்குக்கு நம் நாட்டாரின் வர்ஜனப் பிரதிக்கினையே காரணமாக இருந்தது என்றர்த்தம்.

சுதேசியத்தை மட்டும் கைவிடாமல் பிரிடிஷ் இந்திய ஜனங்கள் நடத்தி வருவார்களானால், ஆங்கிலேய கவர்ன்மென்டார் கோபிப்பதற்கும் இடமிராது; பிரிடிஷ் இந்தியா ஜனங்களுக்குச் சீக்கிரத்தில் அவர்கள் விரும்புகிறபடி சுயாதீனம் ஏற்பட்டுவிடும். பொருளுக் கிருக்கும் வல்லமை மிகப் பெரிது. இந்திய ஜனங்கள் பொருள் நிலையிலே மிகவும் இழிந்திருப்பது பற்றியே அவர்கள் விரும்பும் மற்ற ஸ்வதந்திரங்கள் கிடைப்பது இத்தனை கஷ்டமா யிருக்கிறது. நம்மவர்கள் பொருளபிவிருத்தி (தத்தமக்கு மட்டுமன்று, நாட்டுப் பொதுமைக்கு) செய்ய முயலுதல் ஸ்வதந்திரப் பெரு முயற்சியின் முக்கியமான வேர்களிலொன்றாகும்.

—— (13-2-1909)

# தூத்துக்குடி சுதேசிக் கப்பல்
## (தரும நிதி)

காலியா என்ற கப்பல் சென்னப் பட்டணத்தில் சில தேசாபிமானிகளின் முயற்சியால் முற்றிலும் கடனிலிருந்து மீட்கப்பட்டு விட்டதென்று முன்னமேயே சொல்லியிருந்தோம். நாம் விளம்பரம் செய்திருந்த தர்ம நிதிக்குப் பணம் வந்துகொண்டேயிருக்கின்றது. அதன் கணக்கு மற்றொரு பக்கத்திலே கொடுத்திருக்கிறோம். நம்மிடம் வருவது போலவே தூத்துக்குடியில் காரியதரிசியிடம் வரும் பணத்திற்கும் நமது பத்திரிகையிலே கணக்குப் பிரசுரம் செய்யும்படி ஏற்பாடு செய்திருக்கிறோம்.

○ ○ ○

இந்தத் தரும நிதி கொஞ்சம் வளர்ந்தவுடனே பங்குகளாகக் கம்பெனிக்குப் போகும். அப் பங்குகள் தமிழ்நாட்டு மஹா ஜனங்களுக் குரியவை. நிதிக்குப் பணம் கொடுத்தவர்களிலே முக்கியமான சிலரை ட்ரஸ்டிகளாக நியமித்து, அப் பங்குகளினால் வரக்கூடிய லாபத்தை, தொழில் நூற்பயிற்சி முதலிய பொது விஷயங்களுக்குச் செலவிடத் தீர்மானித்திருக்கிறது. நமது பத்திரிகையில் பிரசுரமான முதல் வியாசத்தைத் துண்டுப்பத்திரங்களாக அச்சடித்து நாடு முழுதும் பரப்பவேண்டுமென்பது எமது கருத்து. அந்தத் துண்டுப் பத்திரங்கள் வேண்டுபவர்கள் நமது ஆபீசுக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

○ ○ ○

இரண்டு மாதத்திற்குள் இரண்டு லக்ஷம் வர வேண்டும். அதை நினைக்கும்போது இந்த இரண்டு வாரங்களில் சேர்ந்த தொகை மிகச் சிறியது. அதற்குக் காரணம் இதுவரை விளம்பரங் கள் திசைக்குத் திசை அனுப்பப்படாமலிருந்ததே யாகும். அடுத்த வாரத்தில் இத் தொகை மிகப் பெருக்கமடைந்திருக்குமென்று நிச்சயிக்கிறோம். மேலும் ''அல்பாரப்ப க்ஷேமகர:'' என்று பெரியோர் சொல்லி யிருக்கிறார்கள்.

o o o

பொது ஜனங்களுக்கு சுதேசீயக் கப்பல் இது வரை சில மாதங்கள் ஓடி யிருப்பதிலிருந்து எவ்வளவு லாபம் தெரியுமா? நமது கம்பெனியாரும், இதை யெதிர்த்துப் போட்டிக் கம்பெனியாரும், சாமான் கூலியும், யாத்திரைக் கூலியும் குறைவு படுத்தியதிலிருந்து மட்டும், பொது ஜனங்களுக்குச் சுமார் 10 லக்ஷம் ரூபாய் லாபமென்று கணக்கிடப் படுகின்றது. இதைத்தவிர இம்முயற்சி பலிதமாவத னால் நமது நாட்டிற்கு நானாவிதங்களிலும் ஏற்படக் கூடிய நன்மைகள் அளவிட்டுக் கூற முடியாதன. இதற்கு நாம் ஒவ்வொருவரும் தலைக்கு 1 ரூபாயேனும் கொடுப்பது பெரிதா?

(13-2-1909)

## "இந்தியா"

## சுதேசிக் கப்பல் தரும நிதி

கங்கை வெள்ளம் வேண்டுமென்று வானத்தை அண்ணாந்து பார்த்துக் கொண்டிருக்கும் பகீரதன் தலைமீது ஒரு சிறிய தூற்றல் உதிர்ந்ததுபோலச் சென்ற 10 தினங்களில நமது சுதேசிக்கப்பல் தர்ம நிதிக்குக் கீழே குறிப்பிட்டிருக்கும் அதிசொற்பமான தொகை சேர்ந்திருக்கிறது. ஆனால், இது பெரும் பாலும் புதுச்சேரியிலே மட்டும் சேர்ந்தது. அரை யணாவும் காலணாவுமாக வசூலிக்கப்பட்டது.

அடுத்த வாரத்தில் இன்னும் கொடுப்பதாகப் பல நண்பர்கள் வாக்களித் திருக்கிறார்கள் வெளி யூர்களுக்கு விளம்பரங்களும் மனிதர்களும் அனுப்பத் தாமதப்பட்டபடியால், சரியானபடி தொகை சேர வில்லை. எனினும் புதுச்சேரியைப்போல இத்தனை சொற்பத் தொகையேனும்,தென்னிந்தியாவிலுள்ள ஒவ்வொரு பட்டணத்திலும், கிராமத்திலும் வருமானால் நமது நோக்கம் 10 தினங்களில் கை கூடி விடும். ஆரம்பத்தில் தூற்றல்களாக இருந்த போதிலும் பகீரதன் கொண்டிருந்த தெய்வ பக்தி யால் அவனுக்குக் கங்காப் பிரவாஹம் வந்தே தீர்ந்தது. சுதேசிக் கப்பல் கம்பெனியார் பாரத நாட்டுப் பொது ஜனங்களிடம் அழியாத பக்தி பூண்டிருக்கிறார்கள். அவர்களுடைய எண்ணமும் நிறைவேறியே தீரும்.

## வசூல் விவரம்

| புதுச்சேரி | ரு அ. பை |
|---|---|
| ஸி. சுப்பிரமணிய பாரதி | 5 - 0 - 0 |
| வந்தே -சுப்பிரமணிய அய்யர் | 1 - 0 - 0 |
| சண்முக நாடார் | 0 - 8 - 0 |
| குருசாமி நாயுடு | 1 - 0 - 0 |
| ஸா. குப்புசாமி அய்யர் | 10 - 0 - 0 |
| ஸா. சாம்பமூர்த்தி அய்யர் | 5 - 0 - 0 |
| சுந்தரமய்யர் | 0 - 2 - 0 |
| ராகவ செட்டி | 0 - 1 - 0 |
| கோவிந்தசாமி ராஜுலு | 0 - 1 - 0 |
| துரைசாமி செட்டியார் | 0 - 1 - 0 |
| க. அ. முருகைய செட்டியார் | 0 - 1 - 0 |
| சிவசிதம்பரம் செட்டியார் | 0 - 1 - 0 |
| கந்தசாமி செட்டியார் | 0 - 1 - 0 |
| யாக்கோப் ஸேட் | 0 - 2 - 0 |
| கோவிந்த உடையரர் | 0 - 1 - 0 |
| பா. இராமகிருஷ்ண நாயுடு | 0 - 1 - 0 |
| கோபாலகிருஷ்ணசாமி செட்டியார் | 0 - 1 - 0 |
| லெ. ர. கோவிந்தசாமி செட்டியார் | 0 - 1 - 0 |
| பி சாம்பசிவ நாயக்கர் | 0 - 4 - 0 |
| ஓர் சுதேசி | 0 - 4 - 0 |
| ''இந்தியா'' ஆபீஸ் சிப்பந்திகள் | 5 - 14 - 0 |
| பொ. கிருஷ்ணசாமி செட்டியார் | 0 - 4 - 0 |
| சின்னத்தம்பி செட்டியார் | 0 - 4 - 0 |
| ராமய்யர் (மேலையூர்) | 10 - 0 - 0 |
| தேசபக்தர்கள் (2-பேர்) | 2 - 0 - 0 |

| | |
|---|---|
| துபாஷ் | 4 - 0 - 0 |
| டி. குப்புசாமி அய்யர் | 1 - 0 - 0 |
| முருகேச பிள்ளை | 2 - 0 - 0 |
| பழனி. சின்னைய நாயுடு | 10 - 0 - 0 |
| ராஜமய்யர் | 1 - 0 - 0 |
| ராமசந்திரய்யர் | 1 - 0 - 0 |
| சில்லரை வசூல் | 2 - 11 - 2 |
| தம்புசாமி நாயுடு | 0 - 2 - 0 |
| வெ. கு. முருகைய செட்டியார் | 0 - 1 - 0 |
| பார்த்தசாரதி பிள்ளை | 0 - 4 - 0 |
| ஆக மொத்தம் (13-2-1909) | 64 - 6 - 2 |

| | |
|---|---|
| ஸ. குப்புசாமி அய்யர் கிடங்கு சிப்பந்திகள் | 13 - |
| வையாபுரி. கந்தசாமி செட்டியார் | 10 - |
| தேசபக்தர்கள் | 7 - |
| நா. ம. சுந்தரராமய்யர் அன்டு சன்ஸ் | 5 - |
| ரா. கிருஷ்ணய்யர் | 1 - |
| கே. ராமசாமி அய்யர் | 0 - |
| ரெங்கநாதன் | 0 - |
| என். ஆர். குப்புசாமி | 0 - |
| ந. கிருஷ்ணமாசாரியார் | 0 - |
| ஆக மொத்தம் (20-2-1909) | 102 - 10 - 2 |

முன் வசூல்

| | |
|---|---|
| கலவை சங்கர செட்டியார் | |
| சைகோன் ஷாப் எல். அப்பாமி நாயுடு | 1 - 0 - 0 |
| சோம சுந்தரம் பிள்ளை | 0 - 4 - 0 |
| திருச்சி என். சுப்பராய நாயுடு | 2 - 0 - 0 |
| பிரென்சு மாணாக்கர்கள் | 5 - 12 - 0 |
| இ வி. கிருஷ்ணசாமி அய்யர் | 2 - 0 - 0 |
| மேலப் பாலையூர் கிருஷ்ணசாமி அய்யர் | 1 - 0 - 0 |
| டி எஸ். ராமய்யர் | 1 - 0 - 0 |
| டி சுப்பிரமணியய்யர் | 0 - 8 - 0 |
| கே. சிங்காரவேலுப் பிள்ளை | 0 - 8 - 0 |
| ராம சந்திரய்யர் | 0 - 4 - 0 |
| தியாகராஜ பிள்ளை | 2 - 0 - 0 |
| எஸ். பஞ்சாப கேசய்யர் | 0 - 4 - 0 |
| வேதாந்த ராமானுஜாசாரியார் | 0 - 8 - 0 |
| எஸ். கிருஷ்ணசாமி அய்யர் | 0 - 8 - 0 |
| ஸ்ரீனிவாசவரதாசாரியார் | 0 - 8 - 0 |
| போ. சேஷம் செட்டியார் | 0 - 8 - 0 |
| பிரம்பூர் திருவேங்கிடத்தய்யங்கார் | 0 - 4 - 0 |
| கோபாலசாமி செட்டியார் | 0 - 4 - 0 |
| நாலூர் துரைசாமி | 0 - 2 - 0 |
| இஞ்சிக் கொல்லை ரெகு நாத அய்யர் | 0 - |
| கே. வி. தைலாலிட்சன் | 0 - |
| டி. சாமினாதய்யர் | 2 - |
| உமர் ஹத்தா ராவுத்தர் | 3 - |
| டி. ஜே. ராமச்சந்திரய்யர் | 1 - |

ஓர் அபிமானி
நூர் மஹம்மது ஈ. சப்
சில்லரை வசூல்
ஓர் சுதேசி

| | |
|---|---|
| ஆக மொத்தம் (27-2-1909, | 135 - 0 - 11 |

| | |
|---|---|
| சுப்ரமணிய சாஸ்திரிகள் | 3 - 0 - 0 |
| லெ.கா. அண்ணாமலை செட்டியார் | 1 - 0 - 0 |
| கிருஷ்ணசாமி ராவ் | 1 - 0 - 0 |
| வேணுகோபால் நாயுடு | 1 - 0 - 0 |
| அர்சஞ் சண்முகனார் | 0 - 8 - 0 |
| ஓர் சந்நியாசி | 0 - 8 - 0 |
| மாணிக்கம் பிள்ளை | 0 - 8 - 0 |
| நாகப்ப செட்டியார் | 0 - 8 - 0 |
| ஆர். வி. கோவிந்தசாமி நாயுடு | 0 - 4 - 0 |
| சத்யவாகீஸ்வரய்யர் | 2 - 0 - 0 |
| திருவெங்கிடம் பிள்ளை | 0 - 8 - 0 |
| சபாபதி செட்டியார் | 0 - 4 - 0 |
| ராகவ பிள்ளை | 0 - 2 - 0 |
| தேச பக்தன் | 0 - 2 - 0 |
| சுந்தர முதலியார் | 0 - 4 - 0 |
| கோபால தேசிகாசாரியார் | 0 - 2 - 0 |
| தேசபக்தர்கள் | 1 - 4 - 0 |

| | |
|---|---|
| அ. வெங்கடேஸ்வரய்யர் | 6 - 0 |
| மகாமகம் வசூல் | 8 - 0 |

ஆக மொத்தம் (13-3-1909) 162- 14 - 11

| | |
|---|---|
| கதிரேசஞ் செட்டியார் | 5 - |
| பீ. முகம்மது பாவாசா மரைக்கார் | 5 - |
| மு பெ.சி. லட்சுமணன் செட்டியார் | 1 - |
| அப்பாவு பிள்ளை | 0 - |
| துளசிலால் | 0 - |
| சொ. அண்ணாமலை செட்டியார் | 0 - |
| செல்லப்ப செட்டியார் | 0 - |
| பிச்சுவய்யர் | 0 - |
| ராமஞ் செட்டியார் | 0 - |
| லட்சுமி நாராயணய்யர் | 0 - |
| பஞ்சுவய்யர் | 0 - |
| எஸ். நரசிங்க முதலியார் | 0 - |
| தேசபக்தர்கள் | 2 - |
| அ. நரசிம்மய்யங்கார் | 0 - |
| பெரிய சேஷராமய்யர் | 0 - |
| பி. வெங்கிட்ட ராமய்யர் | 0 - |
| வெங்கிட்டராம செட்டியார் | 0 - |
| யக்ஞ. வெங்கிட்டராம தீக்ஷதர் | 0 - |
| பால சுப்பிரமணியக் குருக்கள் | 0 - |
| வி. சாரநாதய்யர் | 0 - |

பெரிய விஸ்வநாதய்யர்
இஞ்சிக் கொல்லை சில்வரை
வசூல்
சட்டநாத குருக்கள், சிதம்பாழூர்
கிருஷ்ணய்யங்கார், திருச்சிறை
சாரநாதய்யங்கார், திருச்சிறை
எஸ். கிருஷ்ணசாமி அய்யங்கார்
அய்யாத்துரை உடையார்
வேலுப் படையாச்சி
சாமினாதப் படையாச்சி
கிருஷ்ண படையாச்சி
பெத்த பெருமாள்
பொந்தய அம்பலகாரன்
ஆத்தூர் பெரிய தம்பி உடையார்
பெ. சாமிநாத உடையார்
கொ. வேம்பு உடையார்
அ. வேம்பு உடையார்
பெ. பொன்னுசாமி உடையார்
மகாலிங்கம்
அ. ராமசாமி அய்யர்
ராமசாமி அய்யர்
ரெங்கசாமி நயினார்
ஐ. இப்ராஹிம் ராவுத்தர்
சாமிநாத செட்டியார்
ப. சையது ராவுத்தர்
இப்ராஹிம் ராவுத்தர்
கா. அகமத் சாகிபு
வீராசாமி படையாச்சி

சாமினாத படையாச்சி
அய்யாத்துரைப் பிள்ளை
காதர் பாச்சா சாகிபு
இ. முகம்மது சுலைமான்
எட்டயபுரம் வசூல்

ஆக மொத்தம் (20-3-1909) 206 . 3 . 2

---

## தூத்துக்குடி சுதேசீயக் கப்பல்

தூத்துக்குடி சுதேசீயக் கப்பலுக்கு இரு நூறு ரூபாய் வந்ததிற்குப் பிறகு வரவு நின்று விட்டது. "கப்பல் நிதி" என்ற பெயரால் 150 ரூபாய் தூத்துக் குடிக்கு அனுப்பி விட்டோம். ஆறு பங்காயிற்று. என்ன வெட்கம்! என்ன வெட்கம்! தமிழ் நாட்டு ஜனங்களிடம் அவர்கள் சொந்தக் காரியத்துக்காக இரண்டு லக்ஷம் ரூபாய் கேட்டதற்கு இரு நூறு வசூலா யிருக்கிறது.

கப்பலுக்கு ஓரிரண்டு உபகாரிகள் உதவி செய்ய முன் வந்திருப்பதாகவும், இன்னும் இரண்டு வாரங்களில் கப்பல் முன்போல் மிக க்ஷேமமான நிலைக்கு வந்து, ஊக்கத்துடன் வேலை நடக்கு மென்றும் கேட்டு சந்தோஷமடைகிறோம். நமது பத்திரிகையைப் பார்த்துக் காசியில் ஒரு தேசாபி-

மானி இவ் விஷயத்தில் முயற்சி யெடுத்து வருவதாகத் தெரிவதும் திருப்திக் கிடமான ஸமாசாரம் ஆனால், தமிழ்நாட்டுப் பொது ஜனங்கள் உறங்கிக் கிடக்கும் அற்புதத்தான் வருத்த முண்டாக்குகிறது. இவர்களை எப்படி விழிக்கச் செய்வது?

(10-4-1909)

---

## தூத்துக்குடி சுதேசிக் கப்பல் தரும நிதி

### வசூல் விவரம்

| | |
|---|---|
| முன் வசூல் | 206 - |
| பி. கே. ஈஸியசா | 5 - |
| ஆபத்துகாத்த நாராயண பிள்ளை | 3 - |
| பி. டி. டேவிட் | 1 - |
| உ.ச. சடைய பிள்ளை | 0 - |
| உ.ச. ராமய்யர் | 0 - |
| பி.ஜி. வெங்கிடசுப்பய்யர் | 0 - |
| சில்லரை வசூல் | 0 - |
| ஆக மொத்தம் | 21[illegible] 3 - 8 |

(17-4-1909)

தூத்துக்குடி சுதேசிக் கப்பல்
தரும நிதி

சென்ற ஏப்பிரல் மாதம் 17ந் தேதி எமது பத்திரிகையில் பிரசுரித்திருந்த மேல்கண்ட கம்பெனி நிதியின் வசூலித்த தொகையில் செலவு விவரம்:

| | |
|---|---|
| ஷேர்களுக்காக கம்பெனியாரிடம் கொடுத்தது | 180 |
| வசூலித்தவர்களின் சிப்பந்தி கமிஷன் உண்டிப்பெட்டி செலவு | 22 - 2 - 2 |
| வசூலிக்காது நின்றுவிட்டது | 13 - 8 - 0 |
| ஆக மொத்தம் | 215 - 13 - 8 |

—— (21-8-1909)

## புது வருஷம்

பாரதவாஸிகளுக்குப் புதிய வருஷம் பிறந்திருக்கிறது. இவ் வருஷத்தில் நமது நாட்டிற்குப் பல நன்மைகள் விளையுமென்று சில சோதிட சாஸ்திரிகள் சொல்லுகிறார்கள். ஆனால், சோதிட சாஸ்திரமென்ன செய்யும்? ஒருவன் கண்மூடித்தனமாக அன்னிய தேச வஸ்திரம் வாங்கும்போது குறுக்கே வந்து நிற்குமா? நன்மையும் தீமையும் மனிதர்கள் தமக்குத் தாமே விளைவித்துக் கொள்ளுகிறார்களல்லாது, அவை வெளியிலிருந்து

வருவன அல்ல; தத்தம் கர்ம பலன்களையே எல்லா ஜீவராசிகளும் அனுபவிக்க வேண்டும். நமக்கு நன்மை வரவேண்டுமானால் நாம் செய்ய வேண்டிய விஷயங்கள் பின்வருவன:-

1. நமது தேசப் பொருள்களையே வாங்குதல்; அன்னிய ஸாமான்களை விலக்குதல்.

2. நாமாகப் பாடசாலைகள் வைத்துக் கொண்டு நமது குழந்தைகளுக்கு ஆரிய தர்மங்களைப் போதிப்பித்தல், அன்னியர்களுடைய கல்வியிலே யிருக்கும் நன்மையைக் கிரகித்துக் கொண்டு, தீயதை விலக்குவதற்குக் கூட்டு முயற்சிகள் செய்தல்.

3. நமது தேசத்தார் இப்போது மிகவும் ஈனமான சரீரநிலை கொண்டிருப்பதை நீக்கும் பொருட்டாக, சரீரப் பயிற்சிக் கூடங்கள் அத்தியாவசியமாக ஏற்படுத்துதல்.

4. ஜாதீய பஞ்சாயத்துகள் வைத்தல்.

5. கிராமந்தோறும், பாரதமாதா கோயில் என்று ஓர் ஆலயம் ஏற்படுத்தி, அனுதினம் பூஜை முதலிய கைங்கரியங்களுக்கு ஏற்பாடு செய்தல்.

மேலே கூறப்பட்டிருக்கும் தர்மங்களை நாம் சிரத்தையுடன் நடத்தி வருவோமானால், நமது ஜாதிக்கு க்ஷேமமுண்டு: இல்லாவிடின் இல்லை.

—— (17-4-1909)

## பம்பாய் யந்திரசாலைத் தலைவர்களின் சங்கம்- சுதேசீய தர்மத்தின் அபிவிருத்தி

மேற்படி சங்கத்தின் வருஷாந்தக் கூட்டம் சென்றவாரம் புதன்கிழமையன்று நடைபெற்றது. அப்போது சபாநாயகராகிய பஜுல் பாயி கரீம் பாயி இப்ராஹிம் என்ற மகமதிய கனவான் பம்பாய் யந்திர சாலைகளின் நிலைமையைப் பற்றிப் பேசினார். அதில் சுதேசீய முயற்சியைப் பற்றிப் பின்வருமாறு பிரஸ்தாபம் செய்திருக்கிறார்:

"நமக்கு இன்னுமொரு பெரு நன்மை சமீபத்தில் ஏற்பட்டிருக்கிறது. நாட்டில் சுதேசீய முயற்சி பரவி வருகின்றது. சுதேசீய தர்மத்தை ஜனங்களெல்லாம் நாளுக்குநாள் அதிகமாகக் கைப்பற்றி வருகிறார்கள். ஆனால், சில வியாபாரிகளின் அக்கிரமத்தால் இந்த சிலாக்கியமான முயற்சிக்கு ஓர் இடையூறுண்டாகிறது. தாழ்ந்த தரத்து ஸாமான்களை உயர்ந்த விலைக்கு ஜனங்களை ஏமாற்றி விற்பதனால், அவர்களுக்குச் சுதேசியத்திலுள்ள ஆவல் குறைந்து போய் விடும். நாம் (வியாபாரிகளும், தொழிலாளிகளும்)சுதேசீயத்தினிடம் உண்மையான அபிமானமுடையவர்களானால், பலமான நூலும், கெடாத சாயமும் உபயோகிப்பதற்கு ஏற்பாடு

-கள் செய்யவேண்டும். தற்காலம் மாஞ்செஸ்டர் வியாபாரம் உயிரிழந்து போயிருக்கிறது. இத் தருணத்தில் நாம் தக்கபடி உழைத்தால் சாசுவதமான அபிவிருத்தியடையலாம்.''

சுதேசீயத்தின் அபிவிருத்தியினால், பம்பாய் யந்திரசாலைகளுக்குண்டான க்ஷேமத்தைப்பற்றி விஸ்தாரமாகப் பேசியிருக்கிறார். அவை யெல்லாம் நமது பத்திரிகையில் ஏற்கெனவே குறிப்பிடப்பட்ட விஷயங்களாதலால், இங்கு மீண்டும் எழுதப் படவில்லை.

(24-4-1909)

## வரலாறு சொல்லும் நூல்

இமயம் தொட்டு குமரி வரை எழுச்சி பெற்ற தேசிய இயக்கச் செய்திகளை இந்நூல் தெளிவுறத் தெரிவிக்கின்றது.

நம்முடைய தொழில் அபிவிருத்தியையும், செல்வ வளர்ச்சியையும் பொருத்தே சுயராஜ்ய முயற்சி வெற்றிபெறும் என்பதை நாட்டு மக்களுக்கு உணர்த்த இந்திய தேசத்தலைவர்கள் மேற்கொண்ட செயல் முறைகளைப் பாரதியின் 'இந்தியா' பத்திரிகை தொடர்ந்தாற்போல பிரசுரம் செய்தது. அந்த இதழ்களிலிருந்து திரட்டப்பெற்ற செய்திகளே ''சுதேசியத்தின் வெற்றி'' என்ற தலைப்பில் தரப் பெற்றுள்ளன.

பாரதியின் கருத்துகள், கப்பலோட்டிய தமிழர் மேற்கொண்ட சுதேசிக்கப்பல் கம்பெனி முயற்சி, அவரின் முயற்சிக்குப் பாரதி செய்த உதவிகள், சுதேசிய வெற்றிக்கு மக்கள் ஆற்றிய பணிகள்-ஆகிய இன்னபிற வரலாற்றுச் சிறப்புமிக்க செய்திகளை இந்த நூல் கால முறைப்படி ஆதாரபூர்வமாகத் தருகிறது.

Wrapper Printed by : SUBHASH PRINTERS, MADRAS-33.

362